

கல்கி

KALKI 11-5-80 90 காசு



ரெக்ஸோனா உங்கள் சருமத்தைப் பராமரிக்கிறது...





மென்மையோடு மெருகுமிளிர வைத்திருக்கிறது.



நாலு இயற்கைத் தைலங்கள் இணைந்துள்ளன ரெக்ஸோனாவிலே—ஸரபுஷா (தேவதாரம்), கருவா, கிராம்பு, சரளம். ரெக்ஸோனாவினால் குளித்தெழுவீர்—அது உங்கள் சருமத்தை மென்மையோடு மெருகு மிளிர வைத்திருக்கிறது. நெஞ்சம் கவரும் நறுமணமுடன் நேரமெல்லாம் உங்கள் மீது மணக்கும் ரெக்ஸோனா, உங்கள் மேனி அழகைப் பேண இயற்கையான வழி.

ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு நல்லது.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-RX.76-2014 TM

Kalki Shopping Page

திகில் மன்னன் ஹிட்ச்காக்!



ஆல்பர்ட் ஜோசப் ஹிட்ச்காக் அமரர் கல்கி பிறந்த அதே ஆண்டில் (1899) லண்டனில் ஒரு பழ ஏற்றுமதி வியாபாரிக்கு மகனாகப் பிறந்தார். சிறு வயதிலேயே ஊர் சுற்றுவதில் அதிக விருப்பமுள்ளவர் ஹிட்ச்காக். 8 வயதுக்குள்ளாக இவர் லண்டனில் ஏறாத பஸ்ஸே கிடையாது. போகாத இடமும் கிடையாது. இவரது அன்றைய பொழுதுபோக்கு எந்தெந்தக் கப்பல் எந்தெந்த தேசத்தின் எந்தத் துறைமுகத்துக்குப் போகிறது என்று அட்டவணை தயாரிப்பது!

- இஞ்சினீயராக உருவாகப் படித்தார். ஆனால் படித்து முடித்தவுடன் இவருக்குத்தான் ஏற்ற வேலை பிடிக்கவில்லை.
- 1920ம் வருடத்தில் முதன் முதலாக ஒரு சினிமாக் கம்பெனியில் நுழைந்தார். தலைப்பு எழுதுகிறவராக நுழைந்த அவர் கொஞ்சம் கொஞ்சமாகத் திரைக் கதை எழுதுபவராக மாறி ஆர்ட் டைரக்டராகவும் பொறுப்பேற்றுத் தயாரிப்பு நிர்வாகியாகவும் சில காலம் இருந்தார். பிறகு அவருக்குக் கிடைத்த பதவி உயர்வு இயக்குனர். ''The Pleasure Garden'' என்ற படத்தின் மூலம் டைரக்டராக மாறினார்.
- பல புத்தகங்கள் எழுதியவர் ஹிட்ச்காக். ஸஸ்பென்ஸை எப்படி உண்டாக்குகிறார்? அவரே பதில் கூறியிருக்கிறார்:


ஓர் அறையில் மூன்று பேர் அமர்ந்திருக்கின்றனர். அந்த அறைக்குள் வைக்கப்பட்டிருக்கும் குண்டு ஒன்று பத்து நிமிடத்தில் வெடிக்கப் போகிறது. விஷயம் படம் பார்ப்பவர்களுக்கோ இல்லை அறையில் உட்கார்ந்திருப்பவர்களுக்கோ தெரியாது என்றால் பத்தாவது நிமிடம் குண்டு வெடிக்கும் போது படம் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு சிறு அதிர்ச்சி ஏற்படும் அவ்வளவுதான். ஆனால் இதை மாற்றி ரசிகர்களுக்கு வெடி வைத்திருப்பது தெரியும். ஆனால் படத்தில் அறையில் இருப்பவர்களுக்குத் தெரியாது என்றால் ரசிகர்களுக்குப் பரபரப்பு உண்டாகிறது. நடிகர்கள் அறையை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று ரசிகர்கள் பிரார்த்தனை செய்கிறார்கள். அவ்வாறே அவர்கள் வெளியே போகும்போது ஒருவன் மட்டும், ''ஒரு நிமிடம் இருங்கள், பாதி சாப்பிட்ட காப்பியைக் குடித்து முடித்து விடுகிறேன்'' என்று திரும்பிச் சென்றால், படம் பார்த்துக் கொண்டிருக்கும் மக்கள் 'மடையா! வெளியே போடா!' என்று கத்துமளவுக்கு வந்துவிடுகிறார்கள். இதுதான் சஸ்பென்ஸ்!

- ஐந்தடி எட்டங்குலம் உயரமுள்ள ஹிட்ச்காக் 1944ம் வருடம் தாம் 290 பவுண்டு எடை இருக்கக் கண்டார். சில மாதங்களிலேயே அதில் 100 பவுண்டு குறைத்தார் என்பது ஓர் அதிசயமான விஷயம்.
- மற்றவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஹிட்ச்காக் தாம் பயப்படுவது எதைக் கண்டு?'என்னுடைய அடுத்த படம் முந்திய படத்தை விடச் சிறப்பாக அமையவில்லை என்ற பெயர் பெற்றுவிடுவோமோ!' என்ற ஒரே பயம்தான்!
- கேமரா வழியாகப் பார்க்காமல் முழுப்படத்தையும் எடுக்கும் திறமை உள்ளவர்.
- ஸைகோவில் குளிக்கும் அறையில் கத்தியால் குத்திக் கொல்லப்படும் காட்சி. 45 விநாடிகளே இக்காட்சி திரையில் ஓடினாலும் 78 விதங்களில் 7 நாட்கள் உழைத்துப் படமாக்கினார். கத்தி அந்தப் பெண்ணின் உடல் மீது குத்துவது போல் காண்பிக்கவே இல்லை! இருந்தாலும் கொலை முழுமையாக ரசிகர்கள் உணர்ந்தார்கள். இவருடைய உதவியாளர் ரப்பரால் செய்யப்பட்ட பொய் முகம் ஒன்றை இவரிடம் கொடுத்தார். கத்தியால் அந்தப் பொய் முகத்தை எங்கு குத்தினாலும் ரத்தம் பீறிட்டுவரும்படி அமைத்திருந்தனர். ஆனால் அதை உபயோகிக்க ஹிட்ச்காக் மறுத்துவிட்டார். ''அருவருப்பான காட்சிகள் மூலம் படம் பார்ப்பவரைப் பயமுறுத்த நான் விரும்பவில்லை. கொலை நடப்பதைச் சூசகமாகக் காட்டத்தான் நான் விரும்புகிறேன்'' என்றார். ரத்தத்தை அவர் காட்டாமல் இல்லை. ரத்தம் சாக்கடை நீரில் கலப்பதைக் காண்பித்தார்.
- 'பறவைகள்' என்ற படத்தில் குழந்தைகளின் மீது பறவைகள் பாய்ந்து கொத்திக் குதறுவதாகக் காட்சி. இதற்காகவே 40 கழுகுகளைப் பயிற்றுவித்து இருந்தனர். வேறு 3000 பறவைகள் இந்தக் கழுகுகளுக்குத் துணையாக இருந்தன. ஹிட்ச்காக் கூறுகிறார்: ''இதில் வேடிக்கை என்னவென்றால் 'பறவைகள்' படப்பிடிப்பின் போது பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் சதா எங்களுடனேயே இருந்தார். ஆனால் குழந்தைகளுக்குத் துன்பம் வராமல் பார்க்க யாருமே கிடையாது!'' அதை அவரே கவனித்துக் கொண்டார். குழந்தைகளுக்கோ அல்லது பறவைகளுக்கோ எந்த விதமான சிறு காயமும் ஏற்படவில்லை.



- 60 படங்களை இயக்கிய ஹிட்ச்காக் எண்பதாவது வயதில் காலமானார். KNIGHT என்ற மிக உயரிய விருதை பிரிட்டிஷ் அரசிடமிருந்து பெற்றவர்.

— அசோக்குமார்



கோடம்பாக்கம் சியாமளா ஸ்டுடியோவுக்கு எதிரில் உள்ள புதிய ரஸ்தாவில் சாதாரண நாட்களை விட அதிக போக்கு வரத்து இருந்தது. அனைவரும் எந்த வீட்டை நோக்கிச் சென்றனரோ அந்த இடத்தை நெருங்க நெருங்க எங்கு நோக்கினும் தலைகளாகவே காட்சியளித்தன. பக்கத்திலுள்ள வீடுகளின் வராந்தாக்களிலும் மொட்டை மாடிகளிலும் நிறையப் பேர் இருந்தார்கள்.

புதிதாகக் கட்டப்பட்டுள்ள வீடு. ஒவ்வொரு இடத்திலும் போலீஸ் காவல். முக்கியப் பட்டவர்கள் மட்டும் அவ்வப்பொழுது உள்ளே சென்று இறுதி மரியாதை செலுத்தி விட்டு வர அனுமதிக்கப்பட்டனர். பலர் இறந்தவர் வீட்டுக்குச் செல்கிறோம் என்ற எண்ணமே இல்லாமல் கவர்ச்சிகரமான ஆடை ஆபரணங்களுடன் வந்தது

ஷோபாவின் சோக முடிவு

சுற்றியிருந்தவர்களை முணு முணுக்க வைத்தது. வாசல் கதவைத் தாண்டியவுடன் மிகச் சிறிய வராந்தா. அதையும் தாண்டி வீட்டுக்குள்ளே நுழையும் கதவு இருக்கிறது. உள்ளே நுழைந்தவுடனேயே அதிஜாக்கிரதையாகக் கால்களை வைக்க வேண்டும். காரணம் இடது பக்கம் உடைந்த கண்ணாடிச் சில்லுகள் தரையில் பரவியிருந்தன. அதை யொட்டினாற்போல் இரண்டு பேர் அமரும் சோபா. அதற்கு அருகில் ஒரு சிறு ஸ்டூலின் மேல் வெள்ளை நிறத் தொலை பேசி. இந்த வீட்டுக்கு வந்து பாலு மகேந்திராவும் ஷோபாவும் தொலை பேசி இல்லாமல் கஷ்டப்பட்ட நாட்களை நினைத்துக் கொண்டேன். 10, 15 நாட்களுக்கு முன்புதான் தொலைபேசி இணைப்பே கொடுக்கப்பட்டது. தொலைபேசிக்குப் பக்கத்தில் ஷோபாவின் விலாசமிட்டுப் பிரிக்கப்படாத ஒரு 30 பைசா கவர். அதையொட்டினாற்போல் தரையிலமர்ந்து தமது வலது கையால் தலையைத் தாங்கி விக்கி விக்கி அழுது கொண்டிருந்தார் பாலு மகேந்திரா. அவருக்குப் பக்கத்தில் ஆறுதல் சொல்லிக் கொண்டு இரண்டு மூன்று பேர். இவர்களைத் தாண்டி ஒருவர் அமரும் சோபாவில் உட்கார்ந்து கொண்டு பார்வையை அலைய விடாமல் உச்சி முகட்டில் எதையோ நோக்கிய வண்ணம் மனசுக்குள்ளே அழுது கொண்டிருந்தார் ஷோபாவின் தகப்பனார் மேனன். அவரது இடது கைப்புறத்தில் பெரிய டைனிங் டேபிள். அதைச் சுற்றி நாற்காலிகளில் அமர்ந்திருந்தனர் காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள்.

நான் உள்ளே நுழையும்போது ஓர் அதிகாரி, ரோஸ் கலர் ஜார்ஜெட் புடவையின் மூன்று துண்டுகளை ஒவ்வொன்றாக எடுத்துச் சரிபார்த்துக் கொண்டிருந்தார். மற்றொருவர் ஜேம்ஸ் பாண்ட் பெட்டி ஒன்றைத் திறந்து ஆராய்ந்து கொண்டிருந்தார்.

வீட்டில் தெரிந்த இதர முகங்கள்: கொட்டாரக்கரா, இயக்குனர் துரை, டபி படத்தின் பொதுஜனத் தொடர்பாளர் செல்வம் தயாரிப்பாளர் ஹரிபோதன் முதலியோர். வாசலுக்குப் பக்கத்தில் வலப்புறத்தில் ஒரே அழுகையும் கதறலுமாய் இருந்தது. அங்குதான் ஷோபாவின் தாயாரும் மற்றப் பெண்மணிகளும் இருந்தார்கள்.

அந்த அறையைத் தாண்டிச் சென்றவுடன் படுக்கை அறை. இந்த அறையில் தான் எல்லாமே நடந்திருக்கிறது. டிரஸிங் டேபிளின் கண்ணாடி உடைக்கப்பட்டுச் சுக்கு நூறாகி யிருந்தது. படுக்கை அறையுடன் இணைந்தாற்போல் ஒரு பாத்ரூம். படுக்கை அறையில் ஒரு டபுள் காட், பக்கத்தில் ஓரிரு புத்தகங்கள். பளிச்சென்று கண்ணில் பட்டது ஆல்பர்ட் ஹிட்ச்காக் என்ற தலைப்பில்



அழிந்தவாழ்வின் அழியாத கோலங்கள்

✕ இடது பக்கம்: இன்னும் வெளிவராத திரைப் படம் ''அன்புள்ள அத்தான்''. ''நூற்றுக்கு இருபதுதான் என் ஆயுள்'' என்று காண்பிக் கிறாரோ ஷோபா?



✕ மேலே பனி



✕ ஒரு வீடு ஒரு உலகம்

✕ அழியாத கோலங்கள்

✕ ஒரு விடுகதை ஒரு தொடர்கதை

✕ அகல் விளக்கு







''இந்தச் சுந்தர் கொஞ்ச நாளா ஏன் பெண்களைப் போல் நாணிக் கோணி நடக்கிறான்?''

''அவன் ஆபீஸ் டைப்பிஸ்ட் விமலா அவளுடைய இதயத்தை அவனுக்குக் கொடுத்து விட்டாளாம்!

- பத்மாஸனி

Francois Traffut எழுதிய புத்தகம். ஷோபாவுக்குக் காமிக்ஸ் ரொம்பப் பிடிக்கும். அறையில் சிமிண்டாலான ஒரு பரண் இருந்தது. அதில் ஒரு ஓரத்தில் இரண்டு பெரிய பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. ஒன்று திறந்திருந்தது. இந்தப் பெட்டியைத் திறந்து உள்ளே இருக்கும் புகைப்பட ஆல்பத்தை எடுப்பதற்காகத்தான் மூன்று அடி உயர முள்ள நீலநிற ஸ்டூலை அந்த அறைக்குள் எடுத்துச் சென்றார் ஷோபா என்பது மேக்கப் உதவி வசந்தியின் வாக்குமூலம். கட்டிலின் ஒரு பக்கத்தில் சென்ட் பாட்டில்களும் புத்தகங்களும் இருந்தன. மற்றொரு புறம் சிறு இரவு விளக்கு. பரணுக்குக் கீழே வலதுபுறம் மூடப்படாத சிமிண்டாலான அலமாரி. அதில் பல்வேறு பொருட்கள் இருந்தன. காவல் துறையினர் சோதனை செய்து கொண்டிருந்ததால் துணிகள் எல்லாமே ஒரு மூலையில் குவிக்கப்பட்டிருந்தன. டு-இன்-ஒன் ஸ்டீரியோபோனிக், டேப்-ரிகார்டர், டிரான்ஸிஸ்டர் ஓரமாக வைக்கப்பட்டிருந்தது. இதிலிருந்துதான் சம்பவம் நடந்தபோது ஆங்கிலப் பாடல் அலறிக் கொண்டிருந்ததாகக் கூறினர். நான் இந்த அறைக்குள் செல்லும்போது அங்கிருந்த காவல் துறை அதிகாரி ஒருவர் ஷோபாவின் டைரியைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தார். அதிலிருந்து இரு புகைப்படங்கள் கீழே விழுந்தன. ஒன்று விநாயகர்—கற்சிலை, மற்றொன்று அம்மன்—உற்சவ மூர்த்தி. அதே டைரியில் பல தனிப்பட்ட முழு நீளக் காகிதங்களும், துண்டுக் காகிதங்களும் இருந்தன. அவை எல்லாவற்றிலும் ஸ்ரீராம ஜெயம் எழுதி வைக்கப்பட்டிருந்தது. 1980 விர்கோ ராசியைப் பற்றிய ஆங்கிலப் புத்தகம் — ''ஹாரஸ்கோப்'' இருந்தது. நளாயினி நாராயணன் என்ற ஸ்ரீலங்காவைச் சேர்ந்த பெண்மணியின் பாஸ்போர்ட்டும் அறையில் காணப்பட்டது.

''இந்த வளையத்தில்தான் தூக்கு மாட்டிக்கொண்டார்'' என்று காவல் துறை அதிகாரி காண்பித்த வளையத்தைப் பார்த்தேன். அதில் ஒரு ரோஸ் நிற நூல் துண்டு ஒட்டிக் கொண்டு காற்றில் ஆடிக் கொண்டிருந்தது.

படுக்கை அறைக்கு அடுத்தாற்போல் பூஜை அறை. இதைப் பார்ப்பதற்கு • முடியாமல் எந்தக் காரணத்துக்காகவோ இழுத்துச் சாத்தப்பட்டிருந்தது. அதை அடுத்துச் சமையல் அறை. சமையலறைக்கு நேர் எதிரே ஒரு பாத் ரூம். இங்கே முகம் கழுவ மட்டும் வருவாராம் ஷோபா. இந்த அறையைத் தாண்டினால் பின்பக்கம் வந்துவிடுகிறோம்.

இந்தியாவின் இவ்வாண்டின் சிறந்த நடிகை என்ற பட்டம் பெற்ற ஷோபா பாலு மகேந்திராவைத் திருமணம் செய்து கொண்டு அதிகார பூர்வமாக அறிவித்தது ஜனவரி 22ம் தேதி. அவர் இறந்தது மே மாதம் முதல் தேதி. சரியாக 100 நாட்கள்.

இருபத்தி இரண்டே வயதான ஷோபா 22ந் தேதி திருமணம் செய்து கொண்டதாக அறிவித்தார். நடிப்பு ஆற்றலில் நூறுக்கு நூறு வாங்கினாலும் வாழ்க்கை நூற்றில் இருபதுதான் என்னும்படி அற்பாயுளில் காலமாகி விட்டார்.

ஆறே முக்கால் மணிக்கு ஷோபாவின் உடல் அரசாங்கப் பொது மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மஞ்சள் பாவாடையும், மஞ்சள் ஜாக்கெட்டும் அணிந்திருக்க, கழுத்தில் வட்டமாக ரத்தம் கட்டியிருந்தது. காரில் ஷோபாவின் உடலை ஏற்றக் கைகொடுத்தவர்கள் இசை அமைப்பாளர் சங்கர் கணேஷ், துரை, கொட்டாரக்காரா ஆகியோர்.

ஏழே கால் மணிக்குத் திடீரென்று கூச்சலும் குழப்பமும் ஷோபாவின் தாயார் இருந்த அறையிலிருந்து வெளிப்பட்டது. பெண்மணிகள் எல்லோரும் வேதனை தாங்காது பாலு மகேந்திராவைக் குற்றம் சொல்லிக் கத்திக் கொண்டிருந்தார்கள்.

ஷோபா நடித்து முடித்து இன்னும் திரையிடப்படாமல் இருக்கும் படங்கள் இரண்டு. ஒன்று 'அன்புள்ள அத்தான்' மற்றொன்று 'மூடுபனி'. தலைப்புக்கள் அவர் வாழ்க்கைக்கும் மரணத்துக்கும் பொருந்துகின்றன.

—சலன்

அவள்: டிவில் படம் பார்த்த அன்னிலேயிருந்து என் மக 'பிரமை' பிடிச்சமாதிரி இருக்கா.

இவள்: காதல் படம் பார்த்ததிலேருந்து என் மக 'பிரேமை' பிடிச்சு இருக்கா.

- ஜானகி மைந்தன்



இதயம் திறந்து பேசும் இளம் வாக்காளர்கள்!



✖ இடமிருந்து வலம்:
மதியழகன், ஜெயகுமார், மாலதி.
ஸ்ரீதர், விசுவநாதன்.

[சட்ட சபைத் தேர்தலுக்கு முதன் முறையாக வாக்களிக்கும் உரிமைபெற்ற ஐந்து இளம் வாக்காளர்கள் உரையாடுகிறார்கள்.

உரையாடலில் பங்கு பெறுவோர்:

1. எம். ஜெயகுமார்
2. பி. விஸ்வநாதன்
3. குமாரி வி. மாலதி
4. எம். மதியழகன்
5. என். ஸ்ரீதர்]

மாலதி: தி. மு.கவும் இந்திரா காங்கிரசும் கூட்டணியாக இணைந்து தேர்தலில் நிற்பது எந்த விதத்திலும் சரியாக எனக்குப் படவில்லை. சந்தர்ப்பவாத அரசியல் இது! ஓரளவு அடிப்படை நெறிகளாவது வேண்டாமா?

மதியழகன்: இக்கூட்டணியில் எவ்விதத் தவறும் இல்லை என்பது என் அபிப்பிராயம். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்கிற நோக்கில் இணைந்தது இக் கூட்டணி.


ஜெயகுமார்: இதெல்லாம் வார்த்தை ஜாலங்கள். சுயநலம் காரணமாகத்தான் கருணாநிதி இந்திரா காங்கிரஸுடன் தி. மு. க. வைக் கூட்டணி சேர்த்துள்ளார். சர்க்காரியா வழக்கு இன்னும் வாபஸ் வாங்கப்படவில்லை. மத்தியில் இந்திரா இருப்பதால் தப்பித்துக் கொள்ளலாம் என்பதற்காகத்தான் இந்த ஆதரவு.

மதியழகன்: பார்லிமெண்ட் தேர்தலிலேயே சேர்ந்த கூட்டணிதானே இது!

ஜெயகுமார்: ஜனதா உடைந்து விட்டது. இந்திரா காங்கிரஸ்தான் பலமான அகில இந்தியக் கட்சியாக இருந்தது. எப்படியும் இந்திராதான் பிரதமராவார் என்பதைப் புரிந்து கொண்டு கருணாநிதி இந்திராவோடு கூட்டுச் சேர்ந்து விட்டார்! இதில் மக்கள் நலம் என்பது என்ன இருக்கிறது? சுயநலம்தான்!

மதியழகன்: ஜனதா கட்சி உடைந்து மத்தியில் ஒரு நிலையான ஆட்சி இல்லாத காரணத்தால் இந்திரா காங்கிரஸ்தான் மத்தியில் ஒரு நிலையான ஆட்சியை அமைத்துத் தர முடியும் என்பதன் அடிப்படையில் பாராளு மன்றத் தேர்தலில் தி.மு.க. இந்திரா காங்கிரஸ் கூட்டணி ஏற்பட்டது. இக்கூட்டணி பாண்டிச்சேரியிலும் சிறப்பாக ஆட்சி செய்கிறது. தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலிலும் தொடருகிறது! இதில் என்ன அதிசயம் இருக்கிறது?

மாலதி: தி.மு.க.வின் ஆட்சியைக் கலைத்தவர் இந்திரா. டில்லியிலும், மதுரையிலும் இந்திராவைக் கொலை செய்ய முயன்றதாக தி.மு.க மீது குற்றம் சாட்டப்பட்டது. இவை இரண்டும் கை கோத்து நாங்கள் நண்பர்கள், கூட்டணி ஆட்சி செய்வோம் என்பது பதவிக்காக, சந்தர்ப்பவாதத்துக்காக மட்டும் தான் இருக்க



முடியுமே தவிர மக்கள் நலன், நிலையான ஆட்சி என்பதெல்லாம் வெறும் வார்த்தைகள்!

மதியழகன்: பாராளு மன்றத் தேர்தலிலும் பாண்டிச்சேரி சட்ட சபைத் தேர்தலிலும் இக் கூட்டணிக்கு மக்கள் அளித்த ஆதரவு மக்கள் இக் கூட்டணிக்கு ஆமோதிப்புத் தருகிறார்கள், இக்கூட்டணி வந்தால் தங்களுக்கு நன்மைகள் ஏற்படும் என்று நம்புகிறார்கள், என்று புலனாகிறதே! தமிழகச் சட்ட சபைத் தேர்தலிலும் இக் கூட்டணியின் வெற்றி தொடரும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம்!

மாலதி: அதுதான் இல்லை! நீங்கள் சொல்வது தவறான கணிப்பு! பாராளுமன்ற தேர்தலில் நீங்கள் முன்பு குறிப்பிட்டபடி ஜனதா உடைந்து வலுவிழந்ததால், மக்கள் நிலையான ஆட்சி வேண்டும் என்ற நோக்கில் மட்டும் இந்திரா காங்கிரஸுக்கும் அதன் கூட்டணிக்கட்சிகளுக்கும் ஓட்டளித்தனர். பாண்டிச்சேரியைப் பொறுத்த மட்டில் அதன் அரசியலும், மக்கள் ஓட்டளிக்கும் முறையும் தனியானது. தமிழகத்தோடு அதனை ஒப்பிடக் கூடாது.

தமிழகத்தில் ஏற்கனவே நிலையான ஆட்சி இருந்து வந்தது என்பதும் மக்களால், பதவியில் அமர்த்தப்பட்ட அந்த அரசு அநியாயமான ஓர் உத்தரவால் பதவி நீக்கம் செய்யப்பட்டது என்றும் மக்களுக்குத் தெரியும்.

விசுவநாதன்: சட்டசபை உப தேர்தல் முடிவுகளையே எடுத்துக் கொள்வோமே! மூன்று தொகுதிகளில் இரண்டை அ.தி.மு.க. கூட்டணி வென்றது. அதோடு சமீபத்தில் நடந்த மேல் சபைத் தேர்தலிலும் அ.தி.மு.க.வுக்குத்தான் வெற்றி.

மதியழகன்: மேல் சபைத் தேர்தல்களோடு சட்டசபைத் தேர்தல்களை ஒப்பிட முடியாது. மேல் சபைத் தேர்தலுக்குக் குறிப்பிட்ட சிலர்தான் வாக்கு அளிக்கிறார்கள். அதோடு தனி மனிதரின் செல்வாக்கு வெற்றிக்குக் காரணம் ஆகிறது. கட்சி அரசியலால் அதிக பாதிப்பு கிடையாது.

விசுவநாதன்: அப்படிச் சொல்லிவிட முடியாது. அ.தி.மு.க. சார்பில் முன்பு ஜெயித்த அறிவழகன் அதி.மு.க.விலிருந்து ராஜினாமா செய்து மேல் சபைத் தேர்தலில் நின்று பயங்கரமாகத் தோற்றுப் போய் உள்ளாரே!

ஸ்ரீதர்: ஒரு தொகுதியை வைத்துக் கொண்டு மொத்தமாகக் கணக்கிட்டு விட முடியாது!

மாலதி: மாநில சுயாட்சிக் கொள்கையை முதலில் எழுப்பியது தி.மு.க. தான்.. ஆனால் இப்போது தி.மு.க., இந்திரா காங்கிரஸுக்குத் தன் கட்சியை அடகு வைத்து விட்டது. இனிமேல் மாநிலம் ஏது? சுயாட்சி ஏது?

விசுவநாதன்: பஜன் லாலை தன் கட்சிக்கு கோஷ்டியாக இழுத்துக் கொண்ட மாதிரி இந்திரா காந்தி ஒருநாள் கலைஞரையும், அவரது சகாக்களையும் இழுத்துக்கொண்டு விடுவார்!

மதி: இதெல்லாம் வீண் வாதங்கள்.... கலைஞர் பச்சைத் தமிழன்... அவரது உடலில் தமிழ் ரத்தம் ஓடுகிறது. எந்த சூழ்நிலையிலும் அம்மாதிரியாக அவர் நடந்து கொள்ள மாட்டார்!

மாலதி: கலைஞரின் இந்தி எதிர்ப்பு என்ன வாயிற்று? நாளைக்கு இந்திரா காந்தி கொஞ்சம் கொஞ்சமாக இந்தியைப் புகுத்தத்தான் போகிறார். கலைஞர் கூட்டணியில் இருப்பதால் எதிர்க்க முடியாமல் போகும்.

மதி: இதெல்லாம் பெரிது படுத்தப்படும் பிரச்னைகள். இந்திரா காந்திக்கும் தமிழக மக்களின் நலனில் அக்கறை உண்டு. அவர் நிச்சயம் இந்தியை மக்கள் விரும்பாமல் திணிக்க மாட்டார். அம்மாதிரியான சூழ்நிலை வந்தால் கலைஞர் பதவியைத் துறந்து போராட்டத்தில் குதிக்க ஒரு கணமும் தயங்க மாட்டார்.

ஜெயகுமார்: இந்திரா காந்தியும் கலைஞரும் நம்பியவர்களை எப்படிக் கவிழ்ப்பார்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயம். சிட்டிபாபுவின் மரணத்தை மறந்துவிட்டுப் பல்லாயிரக் கணக்கான கழகத் தோழர்களின் தியாகங்களைக் காற்றில் பறக்க விட்டுக் கலைஞர் இன்று இந்திரா காந்தியோடு கை கோத்துக் கூட்டணி சேர்ந்திருக்கிறார். அன்று முரசொலியில் இந்திராவைத் தோன்றியபடி திட்டி எழுதிய கைகள் இன்று அன்னை, தாய் என்று வர்ணிக்கின்றன. உயிர் காத்தார் நெடுமாறன்; அறவே அதனை மறந்து கலைஞரோடு கை கோத்துக் கொண்டுள்ளார் இந்திரா. கிண்டி நிகழ்ச்சிகளும், மதுரை வன்முறைச் சம்பவங்களும் அவருக்கு இவ்வளவு விரைவாக எப்படி மறந்து போயின என்பது மிகப் பெரிய விந்தை! தனது கட்சித் தலைவர்களை ஒவ்வொருவராக இந்திரா எப்படித் தூக்கி எறிந்து வந்துள்ளார் என்பது உலகறிந்த ரகசியம்! இதைக் கலைஞரும் உணர்ந்துதான் இருப்பார். ஆனாலும் கூட்டணி! இதில் வேறு எந்த வித விஷயமும் இல்லை. கலைஞர் மனத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும் சர்க்காரியா கமிஷன்தான் கூட்டணிக்கு அடிப்படை. ஷா அறிக்கையோடு சர்க்காரியா அறிக்கையும் குழி தோண்டிப் புதைக்கப் பட வேண்டும் என்ற ஆசை.

மதியழகன்: நீங்கள் ஆயிரம் கூறலாம். மக்களுக்குத் தெரியும் கலைஞரின் அரசியல் சாதுரியம் பற்றியும், நிர்வாகத் திறமை பற்றியும், அவர் ஏழரை ஆண்டுகளில் செய்துள்ள சாதனைகள் பற்றியும்!

ஜெயகுமார்: அவர் என்ன சாதனைகள் செய்து விட்டார்? லஞ்சமும் ஊழலும் தான் மலிந்து கிடந்தன. ஜாதி பேதம் பெரிது படுத்தப்பட்டது. அரசியல்வாதிகள் நிர்வாகத்தில் தலையிட்டனர்.

ஸ்ரீதர்: எம். ஜி. ஆர். ஆட்சியில் மட்டும் என்ன பெரிதாக வாழ்ந்தது? அதே ஊழல்

இங்கும்தான் தலைகாட்ட ஆரம்பித்து விட்டது. நிர்வாகத் திறமையின்மை... மக்களுக்கு என்ன நன்மை விளைந்துவிட்டது? ...கலைஞர் ஆட்சியில் மாணவர்களுக்குப் பல சலுகைகள், சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் இருக்கும் மக்களுக்குப் பலவித நன்மைகள், கலை கலாசாரம் இவற்றுக்கு மேம்பாடு, விவசாயிகளுக்குப் பல சலுகைகள், என். ஜி. ஓ.க்களுக்கு ஊதிய உயர்வு, கூவம் சீரமைப்பு, சென்னை நகரம் அழகுபடுத்தப்பட்டது. இப்படிப் பலப் பல நன்மைகள் ஏற்பட்டதை மறந்து விட முடியுமா?

ஜெயகுமார்: அவரது ஆட்சியில் ஏற்பட்ட வீராணம், கூவம் சீரமைப்பில் ஊழல், மாநகராட்சி ஊழல், சர்க்கரை பேரம், பூச்சி மருந்து விவகாரம், போன்ற ஒழுங்கீனங்களையும் மறக்க முடியாது. அவருடன் ஒப்பிடும்போது சாதனைகளின் பரிமாணம் மிக மிகக் குறைவு! மதுவின் வாசனையே அறியாமல் இருந்த ஓர் இளம் தலைமுறையினருக்கு மதுவின் ருசியை அறிமுகப்படுத்திய ''சாதனை''யும் கலைஞருடையதுதான்.

மதியழகன்: கள்ளச் சாராயம் குடித்து மக்கள் உயிர்விடும் கொடுமையைத் தடுக்கவேதான் மதுவிலக்கை கலைஞர் ரத்து செய்தார்! அதோடு பல நல்ல திட்டங்கள் மூலம் மக்களுக்கு நன்மைகள் செய்ய வரிப் பணமும் அதனால் கிடைக்கும் என்பதும் அவரது நோக்கம்! மதுவிலக்கு அமுலில் இருந்த எம்.ஜி. ஆர். ஆட்சியில் கள்ளச் சாராயம் மலிந்து கிடந்தது உங்கள் கண்ணில் படவில்லையா?


மாலதி: அடிப்படை நெறிகளில் அதிகப் பிடிப்பு இல்லாத, ஊழல், லஞ்ச குற்றச் சாட்டு போன்றவைகளைப் பழைய சொத்துக்களாகக் கொண்ட தி. மு. க.-இந்திரா காங்கிரஸ் கூட்டணி ஒரு பக்கம். நிர்வாகத் திறமை போதாவிடினும், அடிப்படை நெறிகளில் நம்பிக்கை, லஞ்சம் ஊழல் இல்லாத அரசு அமைப்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட அ.தி.மு.க. கூட்டணி மறுபுறம். இந்நிலையில் என்னைப் பொறுத்தமட்டில் அ.தி.மு.க. கூட்டணிக்குத்தான் வாக்கு. அதுதான் வெற்றி பெறும் என்று நம்புகிறேன். பெண்கள் பலர் அக்கூட்டணிக்குத்தான் வாக்கு அளிப்பார்கள்!

மதியழகன்: உங்கள் ஆசை நிச்சயம் நிறைவேறப் போவதில்லை. மக்கள் செயல் திறனற்ற ஆட்சியில் சலிப்புற்றிருக்கிறார்கள். சாதனைகளை எதிர் நோக்குகிறார்கள். நேர்மையான ஆட்சி நடத்தக் கலைஞருக்கு இன்னொரு வாய்ப்புத் தந்து பார்க்கத் தயாராயுள்ளார்கள்!

[அவரவரும் தத்தமது கருத்தில் உறுதியாக இருந்து விடைபெற்றுப் பிரிகிறார்கள்.]

தொகுப்பு : நாயகன்
புகைப்படம்: மன்னை மூர்த்தி

கல்கி-சாரதாஸ்
பட்டுப் புடவைகள் பரிசுத்திட்டம்




கல்கி — சாரதாஸ் பரிசுத் திட்டத்தின் முதல் அங்கமாக மூன்று மாதக் கல்கி இலவசமாக அனுப்ப 200 பேர்களைக் குமாரி ஜெயலலிதா ஏப்ரல் 26ந் தேதி தேர்ந்தெடுத்தார். இரண்டு பெரிய கோணிப் பைகள் நிறைய வாசகர்களின் கடிதங்கள் அவரது இல்லத்தில் அவர் முன் குவிக்கப்பட்டன. படத்தில் தாம் தேர்ந்தெடுத்த சில உறைகளைக் குமாரி ஜெயலலிதா பார்வையிட, கடிதக் குவியலின் ஒரு பகுதியையும் காணலாம்.

அதிர்ஷ்டசாலிகளான 200 பேர்களுக்கும் தனித் தனியே கடிதம் எழுதியதுடன் மே 4ம் தேதி இதழ் முதல் கல்கி அனுப்பப்பட்டு வருகிறது. பரிசுத் திட்டத்தின் இரண்டாவது அங்கமாக விடைகளைப் பரிசீலித்துப் பட்டுப் புடவை பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. கூடிய விரைவில் முடிவு அறிவிக்கிறோம்.


ஆசிரியர், கல்கி

(படம்: சுபா ஃபோட்டோ ஸ்டுடியோ)






கை சின்னத்திற்கு ஓட்டளிக்க வேண்டாம்
உங்கள் ஓட் தாமரை
குடை
பெண்
சைக்கிள்
ரொட்டி
ஆமை




கன்னத்திலே கை சின்னம் பதிஞ்சிருக்கு.. அரசியல்லே ரொம்ப அடிபட்டு வந்திருக்காரு!
அது சரி தான்!.. அது இந்திரா கையா?.. சஞ்சய் கையான்னு தெரியணுமே?



விடாதே.. விடாதே.. அடக்கு!
பொதி மாடாக இருக்கும்னு நினைச்சேன்!.. பொலி காளையாக இருக்குதே!.. அம்மாடி யோவ்!
ஹண்டே
உடன்பிறப்பு

1980 மே 11
ரௌத்திரி சித்திரை 29
மலர்: 38 இதழ்: 41



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

சோகத்தில் முடிந்த வீரக் கதை!

ஜனநாயகத் தோழர்களே! அமெரிக்க மக்களே! கலங்காதீர்கள்; சோர்வடையாதீர்கள்.!

நாமொன்று நினைக்கத் தெய்வசித்தம் வேறாக இருக்கிறது என்பது போல் ஈரானில் பணயக் கைதிகளாக வைக்கப் பட்டிருக்கும் உங்கள் சகோதரர்களை மீட்க நீங்கள் மேற்கொண்ட முயற்சி பலிக்காது போயிற்று. இது குறித்து உலகின் சில இடங்களில் சிலர் எள்ளி நகையாடலாம். ஆனால் பல நாடுகளில் பல கோடி மக்கள், மீட்பு முயற்சியில் ஈடு பட்டவர்களின் வீரத்துக்குத் தலை வணங்குகிறார்கள், அவர்களில் எட்டுப் பேர் செய்த உயிர் தியாகத்தைக் கண்டு சிலிர்த்து நிற்கிறார்கள், அமெரிக்காவுக்கு அனுதாபமும் தெரிவிக்கிறார்கள். தியாகங்களின் அடிப்படையில் தான் சாதனைகள் நிகழ்கின்றன. பெரிய லட்சியங்களை அடையப் பெரிய தியாகங்கள் தேவைதாம்.

முன்பு என்டபி விமான நிலையத்தில் மீட்பு முயற்சியில் வெற்றி கண்ட இஸ்ரேலியத் தளபதிகளில் ஒருவர், இன்று அமெரிக்கா திட்டமிட்டது போதாது என்றும் போதிய முன்னேற்பாடுகள் செய்யப் படவில்லை என்றும் இடித்துரைத்திருக்கிறார். அவரது கர்வத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள். வேறு சிலர் 'அமெரிக்கர்கள் பணக்காரர்கள், சுகபோக வாழ்க்கை நடத்துபவர்கள் அவர்களால் இது போன்ற காரியங்களில் வெற்றி பெற முடியாது' என்று பரிகசிக்கிறார்கள். இவர்களுடைய அறியாமையை மன்னித்து விடுங்கள்.

உலகம் கண்டிராத அதிசயமாகச் சந்திரனில் மனிதனை இறக்கி நடமாடச் செய்து, ஆய்வுகளை நடத்தி, பின்னர் அவர்களைப் பத்திரமாகப் பூமிக்குத் திரும்பி வரச் செய்தது அமெரிக்கா. அதை விடவா இந்தப் பணயக் கைதிகள் மீட்பு முயற்சி ஒரு பிரமாத காரியம்? ஏதோ துரதிர்ஷ்டம் இது இப்படி முடிந்தது: அவ்வளவு தான். பார்க்கப் போனால் சந்திரனை வெற்றி கொள்வதற்கு முன்பாக அப்போலோ I எரிந்து சாம்பலாக, அந்த விபத்தில் மூன்று விண்வெளி வீரர்களை நீங்கள் பறி கொடுக்க வில்லையா? அப்படித் தான் இப்போதும் ஒரு சோதனை. 'இதனையும் சாதனையாக்கிக் காட்டுவோம்' என்று நெஞ்சைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்களுடைய மீட்பு முயற்சியைச் 'சிலபேர் அநியாயம், அக்கிரமம், அசட்டுத்தனம், ஆபத்து என்றெல்லாம் வர்ணிப் பதைப் பொருட்படுத்தாதீர்கள். நீங்கள் அப்படியொன்றும் தகாத காரியத்தைச் செய்து விடவில்லை. எப்போது ஈரானியர் அமெரிக்கத் தூதரகத்தைக் கைப்பற்றினார்களோ அந்தக் கணமே ஈரான், அமெரிக்கா மீது படையெடுத்து விட்டதாக அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம். அத் தூதரகத்தில் இருப்பவர்களைப் பணயக் கைதிகளாக்கிய கணத்தில் அமெரிக்க தூதர்களை ஈரானிய அரசு யுத்தக் கைதிகளாக்கியதாகக் கொள்ளலாம். இருப்பினும் நீங்கள் பொறுமை காத்து வந்தீர்கள். தூதர்களுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கவேண்டும் என்று காலம் காலமாக இருந்து வரும் மனிதகுலப் பண்பாட்டையும், சர்வதேச சட்டத்தையும், உலக அபிப்பிராயத்தையும் அலட்சியம் செய்து ஈரான் தொடர்ந்து பிடிவாதமாக நடந்து கொண்டபோது உன்ளுக்கு வேறு வழியில்லாமல் போய் விட்டது. இப்போதும் நீங்கள் ஈரான் மீது படையெடுத்து விடவில்லை. அந்நாட்டு மக்களுக்குத் தீங்கு எண்ணவில்லை. உலக அபிப்பிராயத்தைப் புறக்கணித்து அநியாயமாகச் சிறை வைக்கப் பட்டிருக்கும் உங்கள் சகோதரர்களை மீட்க. முயன்றீர்கள் அவ்வளவே.

இந்திய சர்க்காரும் பிரதமர் இந்திராவும் கூறுவதைப் பொருட்படுத்தாதீர்கள். அவர்களுக்கு நூறு விதக் கவலை. ஆப்கானிஸ்தானில் ருஷ்யா வந்து திரும்பிச் செல்லாத விருந்தாளியாக உட்கார்ந்து கொண்டு இந்தியாவைப் பார்த்து ''சௌக்கியமா?'' என்று வினவுகிறது. ஈரானிலிருந்து எண்ணெய் வரவேண்டுமே

என்ற கவலே; ''குதிரை முக'' த்திலிருந்து கனிப்பொருள்கள் ஒப்பந்தப்படி ஈரானுக்குக் கப்பலேறவேண்டுமே என்ற கவலே எல்லாம் இந்திய அரசுக்கு உண்டு. அதனுல் அவர்கள் சற்று ஏடா கூடமாகத்தான் பேசுவார்கள். நீங்கள் இம் முயற்சியில் வெற்றி பெற்றிருந்தால் இன்று உங்களேக் குறை கூறுகிற எல்லாருமே பேசுகிற தினுசு முற்றிலும் வேறுமாதிரிதான் இருந்திருக்கும்.

பணயக் கைதிகளாக உள்ள உங்கள் சகோதரர்களே மீட்பது இப்போது உங்களுக்கு மேலும் கடினமாகி விட்டது என்பது உண்மையே. இனிதான் உங்கள் தலைவர்களுடைய ராஜதந்திரமும், பொறுமையும், ஆற்றலும், முன்னேவிடச் சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

ஜனநாயக மரபுகளே மதிக்கும் ஒவ்வொரு இந்தியனும் உங்கள் முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துகிருன்.

செய்திகள், வாசிப்பது 'செம்பியன்'

செம்பியனின் சிறுபிள்ளைத்தனம்!

செம்பியன் மீது சிலருக்கு ரொம்பக் கோபம் வந்துவிட்டது! ''பாலக்காடு மணி அய்யர் ஓய்வு பெற்றதானது நமது கிழட்டு அரசியல்வாதிகளேச் சிந்திக்க வைக்குமா?'' என்று நான் கேட்டதுதான் இவர்கள் கோபத்துக்குக் காரணம்!

''ராஜாஜி வயதானவர் இல்லேயா? சர்ச்சில் வயதுக் காலத்தில் பிரிட்டனின் பிரதமராகவில்லேயா? காந்தி, சந்தானம் எல்லாரையும் அவமதிக்கலாமா? இன்றைக்கும் செம்மங்குடி பாடிக் கொண்டிருக்கவில்லேயா? இப்படிச் சிறுபிள்ளைத்தனமாக கல்கியில் எழுதலாமா?'' என்றெல்லாம் இவர்கள் (எஸ்.வி எஸ்., வெ. முத்துக்கிருஷ்ணன்) தங்கள் கடிதங்களில் செம்பியனேச் சாடி இருக்கிருர்கள்.

இவர்களுக்கு நான் நினேவுபடுத்த விரும்புவதெல்லாம் இதுதான்: ராஜாஜியோ, சந்தானமோ, காந்தியோ பதவிக்கு என்றுமே ஆசைப்படவில்லே. சர்ச்சில் ராஜாஜி ஆகியோர் வயதுக் காலத்தில் ஓய்வு பெறவே விரும்பிஞர்கள். ஆனுல் மக்களும் இதர தலேவர்களும், ''தேசம் இன்றுள்ள மோசமான நிலேமையில் நீங்கள்தான் பொறுப்பேற்றுச் சீர்ப்படுத்த வேண்டும்'' என்று அவர்களே வற்புறுத்தி, கடமையெனக் கூறிப் பதவி ஏற்கச் செய்தார்கள். செம்மங்குடியும் ஓய்வு பெறவே விரும்புகிருர். ஆனுல் அவரது பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் அந்த இசை மேதையை ஓய்வு பெற விட மாட்டோமென்கிருர்கள். இவர்களே யெல்லாம், சந்தர்ப்பவாதிகளான, கமிஷன் தீர்ப்புப் பெற்ற, பதவிப் பித்தர்களான இன்றைய அரசியல்வாதிகளுடன் ஒப்பிடுவதே மகா பாவம்!

கண்ணீரும் கணக்கு விறைத்தாளும்

பிளஸ் டூ இறுதித் தேர்வில் கணக்குத் தேர்வுக்கு விறைத் தாளேக் கையில் வாங்கிப் பார்த்ததும் திருச்சியில் மாணவர்கள் அழுதுவிட்டனர் என்ற செய்தி உள்ளத்தை உலுக்கி உருக்குகிறது. 'இவை என்ன பள்ளிக்கூடங்களா, அல்லது சித்ரவதைக் கூடங்களா?' என்று எண்ண வைக்கிறது.

மாணவர்கள் கண்ணீர் சிந்தும் அளவுக்கு விறைத் தாள்கள் கடுமையாக இருந்ததெனில் விறைத் தாளேத் தயாரித்தவர் கல் நெஞ்ச அசுர குணம் படைத்தவராக இருக்க வேண்டும். அல்லது, மாணவர்களுக்குப் பாடம் போதித்த உபாத்தியாயர்கள் திறமையற்றவர்களாய் இருக்க வேண்டும். அல்லது பிளஸ் டூ பாட திட்டங்கள் ஆசிரியர் மாணவர் யாருக்குமே புரியாத அளவில் குழப்பம் மிக்கதாகக் கடுமையானதாக இருக்க வேண்டும்.

இம்மூன்று கருத்துக்களில் எது சரியென்று ஆராயப் போக, கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள சிலரை விசாரித்ததில் திடுக்கிட வைக்கும் தகவல்கள் சில வெளிப்பட்டன.

அரசில் கல்வித் துறை வேறு, தேர்வுத் துறை வேறு எனும்படி தனித் தனி இயக்குனர்கள் உள்ளனர். பாடங்களுடனும் மாணவர்களுடனும் சம்பந்தப்படாத கல்லூரிப் பேராசிரியர்கள் தேர்வுத் தாள்களேத் தயாரிக்கின்றனர். பாடம் நடத்தும் ஆசிரியர்களில் ஒருவரே தேர்வுத் தாளேத் தயாரிக்க வேண்டும் என்ற யோசனே இன்னும் யோசனே அளவில்தான் உள்ளது.

தேர்வுத் துறை தந்த மாதிரி விறைத் தாளுக்கும் தேர்வில் தரப்பட்ட விறைத் தாளுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன.

பிளஸ் டூ வகுப்புக்களேப் பள்ளிகளில் நடத்துவதால் கல்லூரிகளுக்கு வருவாய் குறைகிறதென்றும் எனவே பள்ளிகளில் இதைச் சரிவரப் போதிக்க முடியாது என்று நிரூபிப்பதற்காக பிளஸ் டூ மாணவர்கள் பழி வாங்கப்படுகிருர்கள் என்றும் ஓர் ஆணித்தரமான கருத்து கல்வி வட்டாரங்களில் நிலவுகிறது.

இதனாலெல்லாம் மணியான மாணவர்களின் எதிர்காலமெல்லாம் பாழாகிவிடும் போலிருக்கிறது. இறுதித் தேர்வில் சரியாகச் செய்யவில்லை எனினும் பள்ளித் தேர்வுகளில் மாணவர்கள் காட்டிய ஆற்றலின் அடிப்படையில் அவர்களது வெற்றி தோல்விகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இந்திராவுக்கும் ஒரு ராஜ்நாராயணன்!

அமைச்சர் பி. ஸி. ஸேத்தியை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. ஏதடா ராஜ் நாராயண் அமைச்சுப் பொறுப்பில் இல்லாமல் அரசியல் சுவாரசியப்படவில்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த எனக்கு 'இதோ நான் இருக்கிறேன்' என்று ஸேத்தி அபயம் அளித்திருக்கிறார்.

பெண்கள் முன்னேற்றத்துக்கான ஆசிய பசிபிக் கேந்திரத்தின் மகாநாடு புதுதில்லியில் நடந்தது. பத்து மணிக்கு அமைச்சரை எதிர்பார்த்தார்கள். 'தவிர்க்க முடியாத வேலை இருப்பதால் வருவதற்கில்லை' என்ற செய்திதான் வந்தது. முகர்ஜீ என்பவரை அமைச்சருக்குப் பதிலாக ஏற்பாடு செய்தார்கள். அவர் பேச ஆரம்பித்தவுடன் 'அமைச்சர் வந்து கொண்டிருக்கிறார்!' என்று ஃபோன் வந்தது. மறுபடியும் காத்திருக்கும் படலம். பொறுமை இழந்து பலர் திரும்பிப் போக ஆரம்பித்தார்கள். 12 மணிக்கு ஸேத்தி வந்தார். எழுதி வந்திருந்த பேச்சை வாசிக்க ஆரம்பித்தார். விளக்கு வெளிச்சம் போதவில்லை என்று கூறி வேறு பிரகாசமான பல்பு போடப்படும்வரை தாம் தாமதமாக வந்ததற்குக் காரணங்களை அடுக்கினார். அவர் காரியதரிசி லீவு. அதனால் அமைச்சரின் டயரியைப் புரட்டிப் பார்த்து மகாநாடுபற்றி ஞாபகமூட்ட யாருமில்லை என்பது ஒரு காரணம்! நண்பரை வழியனுப்ப விமான நிலையத்துக்குப் போனது ஒரு காரணம்! அதன் பிறகு குளித்தது ஒரு காரணம்! காரணங்களைக் கூறி முடித்ததும் மறுபடியும் பேச்சைப் படிக்க ஆரம்பித்தார் ஸேத்தி. எழுதப்பட்டிருந்த விஷயம் தமக்குப் பிடிக்கவில்லை என்று கூறிக் காகிதங்களை மடித்து விட்டார். பிறகு பெண்கள் முன்னேற்றம் பற்றிப் பேச வந்த இடத்தில் "ஆண்கள் முன்னேறினால் போதும் அதிலேயே பெண்கள் திருப்தி அடைந்து விடுவார்கள்" என்று ஒரு போடு போட்டார். நல்லவேளை, அவர் மேலும் பேசிக் கொண்டே போகாமல் இடைவெட்டி வி. ஸி. சுக்லா வேறு முக்கிய தேர்தல் பணி இருப்பதாகக் கூறி இழுத்துக் கொண்டு போய்விட்டார்.

இப்படி மகாநாட்டை அமோகமாக நடத்திக்கொடுத்ததற்காக நிர்வாகிகள் சேத்திக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர் இப்படியெல்லாம் நடந்து கொள்ளாமல் இருந்திருந்தால் மகாநாட்டுச் செய்தி ஐந்து பத்தி தலைப்புடன் பெட்டி கட்டி மையப் பக்கத்தில் பார்வையாகப் பிரபல நாளிதழ்களில் வந்திருக்குமா? எங்கோ ஒரு மூலையில் துளியூண்டு இடம்தானே கிடைத்திருக்கும்?



★ **மினி, மினி மினியாகிறது!**

நேற்று மினியாக்கப்பட்ட சாதனங்கள் பலவும் இன்று மேலும் நுணுக்க வடிவம் பெற்று வருகின்றன. — சுவையான கட்டுரை.

★ **அளவானதில் ஒரு அழகு!**

Small is beautiful என்ற பொருளாதாரத் தத்துவம் பற்றி ஒரு சிறு கட்டுரை.

★ **சின்னச் சின்ன சிறுகதைகள்**

பிரபல எழுத்தாளர்களின் பலரசப் படைப்புக்கள் — ஏழெட்டுக்குக் குறைவில்லை!

★ **சினிமினி**

திரைப்படத்துறை பற்றிய அளவில் சிறிதான பெரிய்ய விஷயங்கள்!

★ **மூர்த்தி சிறுத்தாலும்...**

குள்ளமாயிருந்தும் சாதனைகள் புரிந்தவர்கள் பற்றி சுந்தா எழுதுகிறார்.

★ **போன்ஸாய்**

மினி மரங்களை வளர்க்கும் ஜப்பானியக் கலைபற்றிய விவரங்கள். (படம் மேலே)

★ **மைக்ரோ ஃபிலிம்**

ஒரு நூலகத்தையே ஒரு சில பிலிம் சுருள்களுள் அடக்கி விடும் அற்புத சாதனம். அட்டைப்படக் கட்டுரை.

★ **இன்னும் பல அதிசயத்தில் ஆழ்த்தும் குட்டி அம்சங்கள்.**

★ **பக்கத்துக்குப் பக்கம் தகவல் குறிப்புக்கள்; நகைச்சுவைத் துணுக்குகள்.**

கல்கி அடுத்தவாரம்
மின்மினி
சிறப்பிதழ்

வட்டமேஜை

பத்துப்பேருக்குத் தானா பரிசு!

● கடந்த மூன்று வாரங்களாக வார்னிஷ் அட்டையுடன் கல்கி வருகிறது. ஆனால் கல்கி இளைத்து விட்டதே ஏன்?
அயன்புரம் கே. வி. எஸ்.

[இளைக்கவுமில்லை ஒன்றுமில்லை. எப்போதும் போல் 64 பக்கங்கள்தான். இது அளவில் சிறிய பத்திரிகைகளின் 80 பக்கத்துக்கும் அதிகம். பக்கவாட்டில் பின் குத்தாமல் முதுகில் குத்தியிருப்பதால் கல்கி இளைத்திருப்பது போல் பலருக்குத் தோன்றலாம்.
ஆர்.]

● Going through your latest issue I was pleasantly surprised by the new look of the magazine.

This new format adds beauty and grace to the already existing quality of Kalki.

Trichi — Raju Kannan

● ரூபா அதிர்ஷ்டசாலி என்பதை ஆசிரியர் மட்டுமா சொல்ல வேண்டும்? வாசகனுகிய நானும் சொல்கிறேன். 'கல்கி'யில் முதன் முதலாக 'வார்னிஷ்' அட்டையில் அதுவும் அதன் இரண்டு புறமும் ஒருவர் இடம் பெறுவது இதுதான் முதல் தடவை!
சென்னை-33 — கே. பாபு

● ''நட்சத்திர வடிவம் பரிசுத் திட்டம்'' என்ற ரசனைக் குறைவான போட்டியை அறிவித்துத் தங்களின் தரமான வாசகர்களின் தரத்தை வெகுவாகக் குறைத்தது மட்டுமல்லாது, பரிசுப் பணத்துடன் நடிகையின் புகைப்படமும் வாசகர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அறிவித்து கல்கி வாசகர்களைக் கேவலப்படுத்தியும் இருக்கிறீர்கள். I am sorry மனசுக்கு மிகவும் சங்கடமாக இருக்கிறது.
அகமதாபாத் — எஸ். கண்ணன்

[சர்குலேட்டிங் லைப்ரரிகளில் சேருவதில்லை, கல்கியைக் காசு கொடுத்து வாங்கிப் படிக்கிறோம் என்று ஒவ்வொரு கல்கி வாசகரும் உறுதி பூண்டால் நட்சத்திர வடிவம் போன்ற பரிசுத் திட்டங்களை நாங்கள் நடத்த அவசியமே இராது.
ஆர்.]

● நட்சத்திர வடிவம் போட்டியில் பத்துப் பேருக்குத்தானு பரிசு? குறைந்தது 20 பேருக்காவது வைத்திருக்க வேண்டாமா?
கோவை-2 — நா. செந்தில் முரளி

● அஸ்ஸாம் பிரச்னை பற்றித் தம் தனிப் பாணியில் கே. ஸ்ரீனிவாசன் மிக அழகாகவும் தெளிவாகவும் எழுதியிருக்கிறார்.

''நாட்டை ஆள அடியாட்கள் மட்டும் இருந்தால் போதாது. ஆற்றல் வேண்டும், ஆழ்ந்த அனுபவமும் வேண்டும்'' என்கிற வரிகள் அவருடைய கட்டுரையாகிய கிரீடத்தில் ஜொலிக்கிற வைரம்!
செங்கல்வலி — முருகவேள்

● மிகவும் நம்பிக்கையோடு சென்று, பிரதம மந்திரியின் திடீர் டல்டியிலிருந்து வருத்தத்துடன் திரும்பி வந்த சாவித்திரி மணியின் கடிதம் பார்த்து வேதனையுற்றேன். இதற்கு அட்லீஸ்ட் ஒரு பக்கமாவது ஒதுக்கிப் பனிச் சென்று பிரசுரித்திருக்க வேண்டாமோ?
சென்னை-5 — எஸ். வி. ராஜசேகர்

● ராஜேஷ் குமார் எழுதிய ''கைகள் கால்கள்'' என்ற கதையில் (13–4–80 கல்கி) ''பானாப் போல ஆச்சாரிப் பய... வளையது வண்டிச் சக்கரமாட்டம் தொள தொளன்னு பண்ணிட்டான்'' எனக் குறிப்பிட்டுள்ளது. மரியாதைக் குறைவாக ஒரு சமூகத்தினரையே தாக்கி எழுதி இருப்பதை எமது சங்கம் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறது.
திருச்சி நகர நகைத் தொழிலாளர் பாதுகாப்பு சங்கம் — பி. ராமனுஜன் ஆச்சாரி, தலைவர்

[ஒரு கதையில் போகிற போக்கில் ஒரு கதாபாத்திரம் ஊர் பேர் குறிப்பிடாமல் யாரோ ஒருவரைப் பற்றிச் சொல்லுகிற ஒரு வாசகத்தை ஒரு சமூகத்தைப் பற்றியே கதாசிரியன் கொண்டிருக்கும் கருத்தாகவோ அல்லது பத்திரிகையின் கருத்தாகவோ எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. இப்படியெல்லாம் ஆட்சேபித்துக் கொண்டிருந்தால் சுவைபடக் கதைகளை எழுத முடியாது.
ஆர்.]

● ருக்மிணி பார்த்தசாரதியின் கதையான ''என் தாய்'' மிகச் சிறந்த ஒரு சிறுகதை. தாய்மார்களுக்கு ஒரு படிப்பினை. தன் பிள்ளை தன்னை விட்டு எப்போதும் பிரியக் கூடாது என்று சுயநலத்தையே பெரிதாக மதிக்கும் பெண்ணினத்துக்கு ஒரு அறிவுரையாக அமைந்துள்ளது.
சென்னை-18 — டாக்டர் ராதிகா பாலகிருஷ்ணன்

● ஒரு நல்ல வரலாற்றின் முதல்பாகம் முற்றுப்பெற்றுள்ளது. இதற்காக ஒரு பக்கம் வருத்தப்பட்டாலும் மறுபக்கம் மன நிறைவுடன் பாராட்டவும் செய்கிறேன். ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றினை ராஜ்மோகன் காந்தியே தமிழில் தருவது போல் தங்களின் மொழிபெயர்ப்புச் சிறந்து விளங்கி, அம் மூதறிஞர் பற்றி அறிந்திராத செய்திகளை அறிய வைத்தது.
பெங்களூர் — பரணி

● ''செக்ஸ் தெய்வம்'' என்று ஆசார்ய ரஜனீஷை மிகவும் தரக் குறைவாக எழுதியிருப்பதைப் பார்த்தேன். (கல்கி 30-3-80)

புத்தர், மகா வீரர், கிருஷ்ணர், நானக், இயேசு, கபீர் இன்னும் அநேக வெளிநாட்டு ஞானிகளைப் பற்றிய இருநூறுக்கும் மேற்பட்ட பகவான் ரஜனீஷ் அவர்களின் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் ஒரு புத்தகமான ''From sex to super conciousness'' என்ற ஒரு புத்தகத்தை மேலெழுந்த வாரியாகப் படித்துவிட்டு அவரைப் பற்றிக் கருத்துச் சொல்ல ஆரம்பித்து விட்டீர்கள்.

இந்தப் புத்தகத்திலும் பல புரட்சிகரமான கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. பாலுணர்வைக் குற்ற உணர்வாகக் கொள்ளவேண்டியதில்லை என்றும், பாலுணர்வின் மூலம் தெய்வீகத்தை அடைய முடியும் என்றும் கூறுகிறார்.

உங்கள் வாரப் பத்திரிகைகளில் வரும் கதைகள் ஆபாசமாக இருக்கின்றன. படங்கள் அதைவிட மோசம். ஆனால் ரஜனீஷ் அவர்கள் செக்ஸைப் பற்றி எழுதியதைப் பார்த்ததும் நாங்கள் துயரமடைந்ததாக எழுதியிருப்பது மிகவும் விநோதமாக இருக்கிறது.

பலநூறு ஆண்டுகளில் நாம் நாகரிக முன்னேற்றம் அடைந்து வந்திருப்பதாக எழுதியிருக்கிறீர்கள். நிச்சயம் நாம் நாகரிகமடையவில்லை. நாம் செய்வதொன்றும், பேசுவதொன்றுமாகத்தான் இருக்கிறோம். வேதங்கள், உடநிஷதங்கள் நம் நாட்டில் இருக்கின்றன என்று பெருமையடித்துக்கொள்ளத்தான் நமக்குத் தெரியும். ஆனால் அதில் இம்மி அளவாவது கடைப்பிடிக்கக்கூடிய நேர்மை இல்லாதவர்களாக இருக்கிறோம்.

இந்த நூற்றாண்டின் மிகவும் புரட்சிகரமான மனிதர் யார் என்று கேட்டால் நிச்சயம் ரஜனீஷைச் சொல்லலாம். உண்மையான ஞானிகளை உயிருடன் இருக்கும்போதே கண்டு கொண்டு அவரை மதிப்பதென்பது இந்த உலகில் இதுவரை மக்கள் அறியாத ஒன்று. இவரைப் புகழத்தான் உண்மையான தைரியம் வேண்டும்.

திருச்சி. அ. பலசிம்மன்



நின்பதம் பாடல் வேண்டும்நான் போற்றி
நீறுபூத்து ஒளிர்குளிர் நெருப்பே

நின்புகழ் கேட்டல் வேண்டும்நான் போற்றி
நெற்றியங் கண்கொளும் நிறைவே

நின்வசமாதல் வேண்டும் நான் போற்றி
நெடியமால் புகழ்தனி நிலேயே

நின்பணி புரிதல் வேண்டும்நான் போற்றி
நெடுஞ்சடை முடித்தயா நிதியே

— திருஅருட்பா

என் அபிலாஷை



ஸ்வாமி விவேகானந்தர்

ஜாதிகள் போக வேண்டுமா, வர வேண்டுமா என்ற பிரச்னையில் எனக்கு ஏதும் சம்பந்தமில்லை. மிக மிக இழிநிலையில் உள்ளோருக்கும், மிகமிக ஏழ்மையில் உள்ளோருக்கும் அவர்களுடைய வீட்டு வாசலிலேயே மானுட இலட்சியத்தின் மகத்தான கருத்துக்களைக் கொண்டு கொடுக்க வேண்டும் என்பதுதான் என் குறிக்கோள். இந்தியா, வெளி நாடுகள், இரண்டிலும் உருவான உயர் கருத்துக்களை இப்படி மக்களுக்குக் கொடுத்து, அவர்களை அதன் மீது சிந்திக்க விட வேண்டும். ஜாதி இருக்க வேண்டுமா, கூடாதா; பெண்கள் பூர்ண சுதந்திரம் பெற வேண்டுமா கூடாதா— என்ற விஷயங்கள் என் விசாரமில்லை. வாழ்வுக்கு, வளர்ச்சிக்கு, ஸௌக்கியத்துக்கு ஒரே விதி சிந்தனைச் சுதந்திரமும் செயற் சுதந்திரமும்தான். இது இல்லாத இடத்தில் தனி மனிதனும், மனித இனமும், தேசமுமே கீழே போக வேண்டியதுதான்....

என்னுடைய ஜீவித அபிலாஷை — என்னுடைய முழுமையான அபிலாஷை— அனைவரது வீட்டு வாசலிலும் உன்னதக் கருத்துக்களைப் படைக்க ஒரு கருவியை (இயக்கத்தை) உருவாக்கிச் செலுத்துவதுதான். அக்கருத்துக்களைக் கொண்டு ஆண், பெண் அடங்கலும் தங்கள் விதியைத் தாங்களே வகுத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையின் மகத்தான பிரச்னைகள் பற்றி நமது மூதாதையரும், பிற நாட்டு முந்தையரும் என்னென்ன எண்ணினார்கள் என்று அனைவரும் அறியச் செய்வோம். தற்போது பிறர் என்ன செய்கிறார்கள் என்பதையும் அவர்கள் குறிப்பாகப் பார்த்துப் பிறகு முடிவெடுக்கும்படி செய்வோம். ரஸாயனங்களை ஓரிடத்தில் திரட்டுவதுதான் நாம் செய்ய வேண்டியது; பிறகு இயற்கை தனது விதிப்படி அவைகளைப் பிரிக்கவொண்ணா ஒழுங்கு உருவில் படிகங்களாக ஒன்று சேர்த்துவிடும். கடுமையாக உழையுங்கள், தளராத சீர்மையோடு செல்லுங்கள். ஆண்டவனை நம்புங்கள். உங்கள் முன் வைத்துக் கொள்ள வேண்டிய குறிக்கோள்: ''மக்களுடைய மதத்துக்கு ஊறு செய்யாமலே அவர்களை உயர்த்துவது.''


தேசத்தின் உயிர் அதன் குடிசையில்தான் வாழ்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால், பரிதாபம்! இந்தக் குடிசை வாழ்வோருக்காக எவருமே என்றுமே ஏதுமே செய்யக் காணோம். நம்முடைய நவீனச் சீர்திருத்தக்காரர்கள் விதவா விவாகம் குறித்தே வெகு தீவிரமாயிருக்கிறார்கள். நானும் எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் அநுதாபிதான். ஆனாலும் ஒரு தேசத்தின் விதி அதன் கைம்பெண்களுக்குக் கிடைக்கும் கணவன்மாரின் எண்ணிக்கையைச் சார்ந்தது இல்லை; பொதுமக்களின் வாழ்நிலையிலேயே (நாட்டின் விதி) உள்ளது. உங்களால் அவர்களை எழுப்ப முடியுமா? அவர்களது உள்ளார்ந்த ஆத்மிக இயல்பை அவர்கள் இழக்காமலே, தற்போது அவர்கள் இழந்துள்ள தனிமனிதச் சுதந்திர மாண்பை அவர்களுக்கு மீட்டுத் தர உங்களால் முடியுமா? ஸமத்துவம், சுதந்திரம், உழைப்பு, ஆற்றல் இவற்றில் நீங்கள் மேல் நாட்டினரையும் மிஞ்சும் மேல் நாட்டு மனப்பான்மையாளராகி, அதே போதில் சமயப் பண்பாட்டிலும், உள்ளுணர்வுகளிலும் உங்கள் முதுகெலும்பு வரையில் ஹிந்துவாகவும் இருக்க முடியுமா? நாம் இதைச் செய்தாக வேண்டும் — நாம் இதைச் செய்தே தீருவோம். நீங்கள் பிறந்திருப்பதே இதைச் செய்யத்தான். தன்னம்பிக்கை கொள்வீராக! பெரிய உறுதிகளே பெரிய சாதனைகளைப் பெற்றெடுத்த அன்னையர்! என்றென்றும் முன்னே முன்னே சென்றபடி இருப்பீராக! ஏழையரிடமும், தாழ்த்தப்பட்டோரிடமும் அநுதாபம், மரணமே வந்தாலும் அநுதாபம் என்பதுதான் நம் லக்ஷிய மந்திரம்.

முன்னேறுக தீர வாலிபர்காள்!

(1894ம் ஆண்டு ஜனவரி 24ந் தேதி சிகாகோவிலிருந்து சென்னைச் சீடர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து.

தமிழாக்கம்: ரா. கணபதி)

பிரகாஷ் படுகோன் இறுதிப் போட்டியில் யாரை வெற்றி கண்டார்?



[சென்னை அரும்பாக்கத்தில் உள்ள வைஷ்ணவா ஆண்கள் கல்லூரி. மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் · இந்நிகழ்ச்சிக்கு ஏகமாக வரவேற்பு.

பௌதிகப் பேராசிரியர் திரு எஸ். ஸ்ரீனிவாசன் 'குவிஸ் மாஸ்டர்' பொறுப்பை ஏற்றார்.

ஆறு மாணவர்கள் போட்டியில் பங்கேற்க நிகழ்ச்சி தொடங்கியது.]

பங்கேற்ற மாணவர்கள்:

1. ஆர். சங்கர்
2. எல். ராம்குமார்
3. வி. ரவீந்திரன்
4. வி. எஸ். ராமச்சந்திரன்
5. எஸ். ராமச்சந்திரன்
6. என். வி. ஸ்ரீனிவாசலு

கேள்விகள்

1. "கோவா எந்த ஆண்டில் அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டது?
(சங்கர் சரியான விடையைக் கூறினார்.)
2. Death of a President என்ற நூலின் ஆசிரியர் யார்?
(பக்ருதீன் அலி அகமத், ஓ. பி. மத்தாய் என்றெல்லாம் விடைகள் வந்தன. சரியான விடையை எவரும் கூறவில்லை.)
3. T E R L S என்பதன் விரிவு என்ன?
(எவரும் விடையளிக்கவில்லை.)
4. பிரகாஷ் படுகோன் பாட்மிண்டனில் உலகக் கோப்பையை வென்றுள்ளார். இறுதிப் போட்டியில் அவர் எந்த ஆட்டக்காரரை வெற்றி கண்டார்?
(சரியான விடையை சங்கர் கூறினார்.)
5. 1979ம் ஆண்டுக்கான சிறந்த நடிகராக அரசு எந்த நடிகரைத் தேர்ந்தெடுத்துள்ளது? எந்தப் படத்தில் அவரது நடிப்புச் சிறப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்?
(சங்கரும் வி. எஸ். ராமச்சந்திரனும் பாதிப் பாதி சரியான விடையளித்தனர்.)

⌘ சங்கர் பரிசு பெறுகிறார்



⌘ நிர்வாகிகள், 'குவிஸ்' போட்டியிலும் கலை நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்ற மாணவர்கள். வலப் பக்கத்திலிருந்து இரண்டாவதாக உட்கார்ந்திருப்பவர் 'குவிஸ் மாஸ்டர்' சீனிவாசன்



6. PLO என்றால் என்ன? அதன் தலைவர் யார்?
(என். வி. ஸ்ரீனிவாசன் சரியாக விடையளித்தார்.)

7. ஈரான் நாட்டின் ஜனாதிபதி யார்?
(சரியான விடையை சங்கர் கூறினார்.)

8. 1978-79ம் ஆண்டுக்கான அர்ஜுனா விருதைப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட பளு தூக்கும் நிபுணர் யார்?
(ரவிகுமார் சரியான விடையைக் கூறினார்.)

9. குருபசான் சிங் யார்?
(ஸ்ரீனிவாசன் சரியான விடையைக் கூறினார்.)



✱ மாங்காடு அம்மன் கோயில் கோபுரத்தை வைஷ்ணவா கல்லூரி மாணவர்கள் சீப் படித்து இன்றனர்

10. அக்னியின் தேவி யார்?
(பார்வையாளரில் அரவிந்தன் சரியான விடையைக் கூறினார்.)

11. நார்வே நாட்டின் நாணய முறை எது?
(வி.எஸ். ராமச்சந்திரன் சரியான விடையைக் கூறினார்.)

12. மே மாதம் இரண்டாம் தேதி (1980) நேபாளத்தில் அபிப்பிராய வாக்கெடுப்பு நிகழவிருக்கிறது எதற்காக என்று தெரியுமா?
(சரியான விடையை கூறியவர் சங்கர்.)

13. குஷ்வந்த் சிங் தற்போது ஆசிரியராக இருக்கும் பத்திரிகையின் பெயர் என்ன? குஷ்வந்த் சிங் சமீபத்தில் பெற்ற சிறப்பு என்ன?
(ரவிந்திரன் சரியான விடை கூறினார்.)

14. Albatross என்றால் என்ன?
(சங்கர் சரியான விடையைக் கூறினார்.)

✱ எஸ். பிரபுவும், முரளியும் நடிக்கும் ஒரு காட்சி



✱ பார்வையாளர்



15. பாண்ட் தெரு (Bond Street,) எங்குள்ளது? அது எதற்குப் பெயர் போனது?
(வி.எஸ். ராமச்சந்திரன் சரியான விடையைக் கூறினர்.)

16. 'ட்ரகோமா' என்ற வியாதி உடலின் எப்பகுதியைப் பாதிக்கும்?
(வி.எஸ். ராமச்சந்திரன் சரியான விடையைக் கூறினர்.)

17. T N T என்பதன் விரிவு என்ன?
(ஸ்ரீனிவாசன் சரியான விடையைக் கூறினர்.)

18. அன்டாரா என்பது ஒரு செய்தி நிறுவனத்தின் பெயர். எந்த நாட்டைச் சார்ந்தது என்று கூற முடியுமா?
(எவரும் விடையளிக்கவில்லை.)

19. பிராட்கேஜ் ரயில் பாதையில் இரு தண்டவாளங்களுக்கிடையேயான இடைவெளி எவ்வளவு?
(சங்கர் சரியான விடை கூறிப் பலத்த கரவொலி பெற்றார்.)

20. க்வான்டாஸ் எனும் சர்வதேச விமானப் போக்குவரத்து நிறுவனம் எந்த நாட்டைச் சார்ந்தது?
(ராம்குமார் சரியான விடையைக் கூறினர்.)

21. முதல் இந்திய மியூஸியம் எந்த ஆண்டில் எங்கு தொடங்கப்பட்டது?
(ஸ்ரீனிவாசன் இதற்கான விடையைச் சரியாகக் கூறினர்.)

22. Experimental Satellite Communications Earth Station இந்தியாவில் எங்குள்ளது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

23. அமெரிக்க ஜனாதிபதியின் வருடாந்தர ஊதியம் என்ன?
(எவரும் விடையளிக்கவில்லை.)

24. டெலிவிஷனைக் கண்டுபிடித்தது யார்?
(வி.எஸ்.ராமச்சந்திரன் சரியான விடையைக் கூறினர்.)

25. 'Zeppeelin' என்றால் என்ன?
(சரியான விடையைக் கூறியவர் ரவீந்திரன்.)

26. Apogee (அபோஜி) என்றால் என்ன?
(வி. எஸ். ராமச்சந்திரன் இதற்கான சரியான விடையைக் கூறினர்.)

27. எந்தெந்த நாடுகள் சுதந்திர தினத்தை ஏப்ரல் நாலாம் தேதி அன்று கொண்டாடுகின்றன?
(எவரும் விடையளிக்கவில்லை.)

28. எட்மண்ட் ஹில்லாரியும், டென் சிங்கும் எந்த நாளில் எவரெஸ்ட் சிகரத்தை வென்றனர்?
(எவரும் விடையளிக்கவில்லை.)

29. இந்திய விமானப் படையில் பிளைட் லெப்டினென்ட் பதவிக்கு அடுத்த பதவி எது?
(பார்வையாளர்களில் ரவீந்திரன் இக்கேள்விக்குப் பதில் அளித்தார்.)

30. அஷ்ட திக்கு பாலகர்களில் வட கிழக்குத் திசைக்குச் சொந்தமானவர் யார்?
(எவரும் விடையளிக்கவில்லை.)

(போட்டியில் திரு சங்கர் வெற்றி பெற்று 'கல்கி' பரிசான ரூ. 50ஐத் தட்டிச் சென்றார். கல்லூரி முதல்வர் பேராசிரியர் பி. ஏ. வெங்கடேஸ்வரன் பரிசை வழங்கினர்.

கல்லூரி முதல்வரும், தமிழ்த் துறைப் பேராசிரியர் திரு கே. ஏ. மணவாளனும் அளித்த ஒத்துழைப்பும் காட்டிய உற்சாகமும் மறக்க முடியாத அம்சங்கள்.

க்விஸ் நிகழ்ச்சிக்குப் பிறகு திரு எஸ். பிரபுவும் கே. முரளியும் ஒரு நகைச்சுவை நாடகத்தைச் சிறப்பாக நடித்துக் காட்டினர்.

எம். கே. சந்திர சேகரன் பிரமாதமாக மெல்லிசை நிகழ்ச்சி நடத்தினர். ஆர். ரவீந்திரன் நிகழ்த்திய கர்னடக இசை மினி கச்சேரியும் நன்றாக இருந்தது.)

விடைகள்

(1)1961.(2)வில்லியம் மான்செஸ்டர்.(3) Thumba Equatorial Rocket Launching Station (4) லியம் ஸ்விகிங் என்ற இந்தோனேஷிய ஆட்டக்காரரை. (5)நசிருதீன் ஷா 'ஸ்பார்ஷ்' என்ற ஹிந்திப் படத்துக்காக. (6) பாலஸ்தீன் லிபரேஷன் ஆர்கனிஸேஷன். யாஸ்ஸர் அராஃபட் (7) அபோல்ஹாஸன் பனிஸாட் (Abholhassan Banisadr) (8) ஜ. கருணாகரன் (9) நிரங்காரிகளின் தலைவர். (24-4-80 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.) (10) சுவாசகை. (11) குரோனர். (12) பல கட்சி முறையை அமுல் படுத்தலாமா அல்லது தற்போது உள்ளது போன்ற கட்சி சார்பற்ற பஞ்சாயத்து முறையைத் தொடர்ந்துகொள்ளலாமா என்பதைத் தீர்மானம் செய்ய. (13) நியூ டெல்லி. ராஜ்ய சபை அங்கத்தினராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். (14) வடக்கு டசிபிக்கில் உள்ள ஒரு கடற்பறவை. (15) தையலகங்களுக்கும், நகைக்கடைகளுக்கும் பெயர் பெற்ற இத்தெரு லண்டனில் உள்ளது. (16) கண்கள் (17) Tri - nitro toluene (18) இந்தோனேஷியா. (19) 5 அடி 6 அங்குலம் அல்லது 1.67 மீட்டர். (20) ஆஸ்திரேலியா (21) 1814ல் கல்கத்தாவில். (22) பூனாவுக்கு அருகில் ஆர்வி என்னும் இடத்தில். (23) ஆண்டொன்றுக்கு ஒரு லட்சம் டாலர்கள் (24) J. L. Baird (25) ஜெர்மனியில் கட்டப்பட்ட மிகப் பெரிய பயண பலூன். (26) வான மண்டலத்தில் ஒரு நியதிக்குட்பட்டுக் கோள்கள் சுற்றி வருகின்றபோது, சூரியன் அல்லது கிரகம் அல்லது சந்திரன் பூமியிலிருந்து மிக அதிகமான தொலைவில் இருக்கும் சமயத்தில் கணக்கிடப்படும் தூரம். (27) ஸிரங்கேஸி, செனகல். (28) 29-5-1953 (29) ஸ்க்வாட்ரன் லீடர் (30) ஈசானன்.

தொகுப்பு: நாயகன் புகைப்படம்: ராமன்

அவன்: ஒரு காப்பி, ஒரு ரூபாயா... அநியாயம்...!
இவன்: அதனால் தான், கடையில் "காப்பி பார்" என போர்டு வைத்திருக்கிறார்கள் போலும்...!
- ராஜேஸ்வரி




அரிப்பும் எரிச்சலும் தரும்
வியர்க்குருத் தொல்லையிலிருந்து
விடுதலை பெறுவீர்!
நைஸில்
உபயோகிப்பீர்
மிகத்துரித
நிவாரணம் அளிக்கும்
வியர்க்குரு பவுடர்
2
பேக்குகளில்—
'ப்ளூ' மற்றும்
'ஸாண்டல்வுட்'
வாங்குவீர் நைஸில்—
விரட்டுவீர் வியர்க்குருவை.
விலை 6 ரூ. 63
பைசாதான்*
*அதிகபட்ச சில்லறை
விற்பனை விலை
உள்ளூர் வரிகள் தனி.
Glaxo
nycil
PRICKLY HEAT
POWDER
மருந்துக் கலவை
யுள்ள நைஸில்:
1. அதிக வியர்வை
யைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை
உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்
படுத்தும் கிருமி
களை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இத
மளிக்கிறது.
GN-80-364 TM.

மண்ணில் விழாத வானங்கள்



எம்.ஏ.சுசீலா

''என்னப்பா... 'ஜாயினிங் ரிப்போர்ட்', எல்லாம் கொடுத்தாச்சா?''

பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த கணித ஆசிரியர் கந்தசாமியின் குரல் கணீரென்று சுப்பையாவை வரவேற்கிறது.

''ஆமாம் சார்! காலையிலேயே 'ரிப்போர்ட்' பண்ணிட்டேன். இப்ப 'ஆஃபீஸ்ல சர்ட்டிஃபிகேட்ஸ் எல்லாம் சரி பார்த்துக்கிட்டு இருக்காங்க. அதுதான் கொஞ்சம் தாமதமாயிடுச்சு'' என்றவன், சற்றுத் தயங்கியபடி அவரிடம் கேட்கிறான்:

''இன்னிக்கு ஸாருக்குக் கொஞ்சம் லேட்டாயிடுச்சு போலிருக்கே? ஸ்கூல்விட்டு நாலரை மணிக்கே எல்லோரும் போயிட்டாங்களே?''

''நாம என்ன இயந்திரங்களோடேயா வேலை பார்க்கிறோம்? 'டயம்' முடிஞ்ச வுடனேயே ஸ்விட்சை ஆஃப் செஞ்சிட்டு வர்றதுக்கு! எல்லாம் மனித மூளைகளப்பா! எப்ப ஏத்துக்கிற மனநிலை இருக்கோ அப்ப, நாமே வேண்டாம்னு சொன்னாலும், இந்தப் பையங்க விடறதில்லே! ஆனா... 'மூட்' இல்லாதப்ப, எவ்வளவு வலுக்கட்டாயமாகத் திணிச்சாலும் அவங்க மண்டையிலே ஏறப் போறதுமில்லே! பரீட்சை நெருங்குது பார்த்தியா! இத்தனை நாளா இல்லாத சந்தேகங்களெல்லாம் இப்பத்தான் அவங்களுக்கு வருது! அவங்களாகவே வந்து கேக்கறப்போ சொல்லிக் கொடுக்கிறதை விட இந்த ஆசிரியத் தொழிலிலே வேறே என்ன ஆனந்தம் இருக்க முடியும், சொல்லு!''

—அனுபவித்து விளக்கம் கொடுத்தபடி... அப்பொழுது தான் வந்து நின்ற ஒரு பஸ்ஸில் தாவி ஏறுகிறார் கந்தசாமி வாத்தியார்.

மெலிந்த நெடிய உருவமானாலும் பார்வையிலேயே மரியாதையைக் கேட்டு வாங்கும் கண்ணியம் கலந்த கம்பீரமான தோற்றம்; இளைஞனைப் போன்ற சுறுசுறுப்பு; செய்யும் தொழிலைத் தெய்வமாகவே எண்ணிப் போற்றும் இலட்சிய வெறி ததும்பும் கண்கள்— மாணவப் பருவத்தில் அவரைத் தன் இலட்சிய நாயகனாய் வரித்ததற்கும், ஆசிரியத் தொழில் மீது ஈர்ப்புக் கொண்டு, இப்பொழுது



அதனை நாடி வந்திருப்பதற்கும் மூலகாரண மான அந்தப் பண்புகள்...இன்றும் வயோ திகத் தளர்ச்சி காரணமாய் எள்ளளவும் குறையாமலிருப்பது கண்டு வியந்து நிற் கிறான் சுப்பையா.

"ஆகவே, பத்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து நாம நடத்தற இந்த மாநிலம் தழுவிய போராட்டத்துக்கு எல்லா ஆசிரி யர்களும் ஆதரவு தரணும்னு கேட்டுக் கிறோம். ஆசிரியரைத் தெய்வம்னு சொல்லு வாங்க! தெய்வத்துக்கு நிவேதனம் செய்யற மாதிரி நமக்கும் அப்பப்ப... ஏதோ காட்டப் படுது! ஆசிரியரும் சாதாரண மனுஷங்க தான். கேட்டுப் பெற முடியாததைப்போரா டிப் பெறுவதைத் தவிர வேற வழி யில்லே!"


கந்தசாமி சாரின் குரல் மட்டும் கொஞ்ச மும் பிசிறு தட்டாமல் ஒலிக்கிறது.

"என்னைத் தயவு பண்ணி மன்னிச்சிடுங்க தியாகராஜன்! நான் இந்தத் தொழிலிலே முப்பது வருஷம் 'சர்வீஸ்' போட்டவன்! நான் வளர்த்த ஒண்ணோட 'ஆத்மாவை' என் கையாலேயே மென்னி முறிச்சுப் போட றது... என்னாலே முடியாது!"

"ஸார்! நீங்க புரியாமப் பேசறீங்க! நாங்க தனிப்பட்ட மனிதர்களுக்கோ... இல்லே... நிர்வாகத்தினருக்கோ எதிராக இந்தப் போராட்டத்தை நடத்தலே! நம்ம கோரிக் கைகளை உரத்த குரலிலே அரசாங்கத்துக்குத் தெரிவிச்சுக்கிறோம்...அவ்வளவுதான்!"

"ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட் இட் வெரி வெல் மிஸ்டர் தியாகராஜன்! ஆனா... என்ன செய்யறது? என் மனசுக்கு நீங்க போற வழி உகந்ததாகப் படவில்லையே? பழகின பாதையை விட்டு வர்றதுக்கு இந்தப் பழங்காலத்து மனுஷனாலே முடியலியே?"

—ஆதரவு நாடி வந்தவர்கள் ஏமாற்றத் துடன் நகர்கிறார்கள்.



—இன்னும் தொடர்ந்து ஏதேதோ பேசிக் கொண்டே போகிறார்... ஆசிரியர் சங்கச் செயலாளர் தியாகராஜன்.

தனித் தனியாக ஆதரவு கேட்டு வரு கிறார்கள்.

சிலர் பணிகிறார்கள்.

பலர் 'லைப்ரரி'யில் செய்ய வேண்டிய 'ரெபரன்ஸ்' வேலை அப்பொழுதுதான் நினை வுக்கு வரப்பெற்றவர்களாய் அங்கே போய் முடங்கிக் கொள்கிறார்கள்.

"புனிதமான தொழிலாம்! பண்பாடு கெட்டுப் போகுமாம்! யாரைய்யா ஏமாத்தறாங்க இவங்க எல்லாம்?"

"நான் ஒண்ணு சொல்றேன்! ஒருவேளை நாம நடத்தற போராட்டம் ஜெயிச்சிடுத் துன்னு வெச்சுக்குவோம்! அப்ப... அதனாலே

கிடைக்கப் போற லீவு சலுகைகள், இன்க்ரிமெண்ட்' இதை யெல்லாம் வேண்டாம்னு எழுதிக் கொடுத்திடுவாங்களாமா?''

''அதெப்படி! அப்ப முதல் பந்தி அவங்களுக்குத்தானே!''

மதியச் சாப்பாட்டுக்கு ஆசிரியர் அறையை நாடி வந்த சுப்பையாவின் காதுகளில் நாக்கில் நரம்பற்ற இச்சொற்கள் நாராசத்தை ஊற்ற.... அங்கிருந்து நகர்கிறான்.

''என்னப்பா சுப்பையா! உன்னோட இலட்சியக் கதாநாயகன்... அதுதாம்பா கந்தசாமி வாத்தியார், 'பிளாக் பாட்ஜ்' கூடக் குத்திக்க மாட்டேன்னு சொல்லிட்டாராமே!'' தமிழாசிரியர் தங்கமணி சுப்பையாவைக் கேட்கிறார்.

''அப்படியா? எனக்குத் தெரியாதே சார்!''



'எல்லா உயிர்களிடத்தும் நாம் ஒரே மாதிரி அன்பு செலுத்தவேண்டும் என்று நேற்று உபந்நியாசத்தில் சொன்னீர்களே!''

''ஆமாம்! அதற்கு என்ன இப்ப?''

''நம்ப கோபு, பக்கத்து வீட்டு மாமியைப் பார்த்து 'டாமி' என்கிறான். டாமியைப் பார்த்து 'மாமி!' என்கிறான்.''

'ஸார் மட்டும் ஏன் இப்படி வித்தியாசப் பட்டு நின்று வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும்?' சுப்பையா குழம்புகிறான்.

''சட்டையிலேயே கறுப்புப் பட்டையைக் குத்திக்கிட்டு நான் கணக்கு எடுக்கப் போனா பையங்க கண்ணிலே கறுப்புத்தான் உறுத்தும்! மூளையிலே கணக்குப் படியாதுன்னு சொல்லி அனுப்பிட்டாராம்! தன்னோட கோழைத்தனத்தை மறைக்க நல்ல கவசம் கிடைச்சதுப்பா உங்க ஸாருக்கு!''

''உங்களை ஹெட் மாஸ்டர் கூப்பிடுறார் சார்!''

—அங்கே... தலைமை ஆசிரியரின் அறையில் ஒருசிறு ஆசிரியர் குழு கூடியிருக்கிறது.

''உட்காருங்க மிஸ்டர் கந்தசாமி! போராட்டத்திலே கலந்துக்காமே, உங்களை மாதிரி முழு மனசோட நிர்வாகத்துக்கு ஒத்துழைப்புத் தந்த ஆசிரியர்களுக்கு நம்ம ஸ்கூல் கரஸ்பாண்டண்டே நேரில் வந்து நன்றி தெரிவிக்கப் போறதாச் சொல்லி அனுப்பியிருக்கார்! வெயிட் பண்ணுங்க! இன்னும் அந்த நிமிஷத்திலே வந்திடுவார்!''

''எக்ஸ்கியூஸ் மீ ஸார்! விஷயம் இப்படின்னு தெரிஞ்சிருந்தா நான் வந்திருக்கவே மாட்டேன்! நான் போராட்டத்திலே கலந்துக்காம ஒதுங்கியிருந்தது உண்மைதான். ஆனா.... யாரையும் ஆதரிக்கணும்கிறதோ அல்லது எதிர்க்கிறதோ என்னுடைய நோக்கமில்லே. மாணவர் நலன் அப்படீங்கிற ஒண்ணுதான் அதுக்குக் காரணம். நான் கலந்துக்கிட்டா அது எங்க ஆசிரியர் வர்க்கத்தையே காட்டிக் கொடுக்கிற மாதிரி! அந்தத் துரோகத்தைச் செய்ய நான் விரும்பவில்லே!''

நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையோடு அவர் அறையை விட்டு வெளியேறுகிறார்.

விஷயமறிந்த சுப்பையா இன்னும் அதிகமாகக் குழம்புகிறான்.

''உங்களோட கான்ஃபிடன்ஷியலா ஒரு விஷயம் பேசணும் கந்தசாமி!''

''என்ன சார், சொல்லுங்க!''

எச். எம்.மாக இப்பொழுது நாற்காலியில் வீற்றிருக்கும் தியாகராஜன் இரகசியம் பேசும் பாணியில் மேஜை மீது சரிகிறார்.

''நீங்க 'மேத்ஸ்' எடுக்கிற 'நைன்த் ஸ்டாண்டர்ட்' 'ஏ'யிலே... அழகேசன்னு ஒரு மாணவன் இருக்கானே அவன் நம்ம ஸ்கூல் கமிட்டி மெம்பர் கதிரேசன் பிள்ளையுடைய மச்சினி பையன்! 'மேத்ஸ்'லே மட்டும்தான் கொஞ்சம் 'வீக்!' அதுக்காக பெயிலாக்கிடாமே எப்படியாவது 'பத்து'க்குத் தள்ளிவிட்டா, 'ஃபைனல் எக்ஸாம்' 'கோச்சிங்கை' அவங்க பார்த்துக்குவாங்க! கதிரேசன் கமிட்டியிலே 'ஆக்டிவ் மெம்பர்'கிறது உங்களுக்கு நல்லாத் தெரியும்! நீங்க எப்படியாவது 'அட்ஜஸ்ட்' செஞ்சு ஒரு முப்பத்தஞ்சு மார்க்குக்குக் கொண்டு வந்தீங்கன்னா....''

''நீங்க சொல்ற காரியத்துக்கு என்னாலே உடந்தையாய் இருக்க முடியாது சார்! இந்த 'டர்ம்' ஆரம்பிச்சதிலேயிருந்து இன்னிக்குத் தேதி வரையிலே அழகேசன், பத்து மார்க்கை ஒரு தடவை கூடத் தாண்டினதில்லே; மனசாட்சியைக் குழி தோண்டிப் புதைச்சுட்டு இப்படி ஒரு செயலைச் செய்ய நான் ஒத்துக்கவே மாட்டேன்...!''

தியாகராஜனின் முகம் பாறையாய் இறுகிறது.

''எப்பவும் மூங்கிலாகவே இருந்துவிட முடியாது கந்தசாமி!. சில வேளைகளில் நாணலாகவும் மாறித்தான் ஆகவேண்டும்! ஆல்ரைட்! யூ கேன் கோ!''

மறுநாள் வந்ததும் வராததுமாக ஆசிரியர்கள் எல்லோரும் 'நோட்டீஸ் போர்டை'ச் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

''என்னப்பா! என்ன விஷயம்?''

கந்தசாமி கேட்க' சயன்ஸ் வாத்தியார் குமுறி வெடிக்கிறார்.

''கேளுங்க ஸார் இந்த அநியாயத்தை! ஒரு நாளும் இல்லாத அதிசயமா வருஷ முடிவிலே எல்லா ஆசிரியர்களையும் இஷ்டத்துக்கு 'செக்ஷன்' மாத்தி மாத்திப் போட்டு சர்குலர் அனுப்பியிருக்கார் சார் நம்ம எச். எம்.''

''என்னது! செக்ஷன் சேஞ்சா?'' —வியப்போடு அறிவிப்பைப் பார்த்தவருக்குத் தம் பெயர் 'நைன்த்-பி'க்கு மாற்றப்பட்டிருப்பதைக் கண்டதுமே, விஷயம் இன்னதென்பது தெளிவாக... எச்.எம். அறைக்கு விரைகிறார்.

'' 'இயர் எண்டிலே செக்ஷன் மாத்தறதுக்கு என்ன காரணம்னு நாங்க தெரிஞ்சுக்கலாமா?''

''அட்மினிஸ்டிரேஷனிலே சில வசதிகளுக்காகச் சில மாற்றங்கள் செய்யப்படலாம். ஒவ்வொண்ணுக்கும் எக்ஸ்பிளனேஷன் கொடுக்க வேண்டிய அவசியமில்லே!''

''ஆனா... இதனாலே பாதிக்கப்படுவது ஒரே கிளாஸிலே இத்தனை நாட்களாகப் பழகிக்கிட்டிருந்த ஆசிரியர்களும், மாணவர்களும் தான்! அதைக் கொஞ்சம் நினைச்சுப்பாருங்க!''

''ஸ்டாப் இட் மிஸ்டர் கந்தசாமி!''

தியாகராஜனின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

''தலைமை ஆசிரியர் அப்படீங்கிற முறையிலே... மாணவர்களோட நலனிலே உங்களை விட அதிக அக்கறை எனக்கு இருக்கு! மைண்ட் யூ! நீங்க எனக்குப் புத்தி சொல்ல வேண்டிய அவசியமில்லே! ஐ ஹேறல்பெட்டர் ஒர்க் டு டு! யூ கேன் லீவ் திஸ் பிளேஸ்!''

அந்த உயர்நிலைப் பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக மாற்றி யமைப்பதற்கான பெற்றோர் — ஆசிரியர் சங்கக் கூட்டம் அன்று நடந்து கொண்டிருக்கிறது. பள்ளியில் படிக்கும் ஒவ்வொரு மாணவனிடமிருந்து குறைந்த பட்சம் ரூ. 50 வசூல் செய்ய வேண்டுமென்ற தன் திட்டத்தைப் பள்ளி நிர்வாகக் கமிட்டி அறிவிக்கிறது.

பல பெற்றோர்கள் வாயடைத்து உட்கார்ந்திருக்கக் கந்தசாமி எழுந்து பேசினார்.

''மேல் நிலைப் பள்ளியா இதை உயர்த்தறது ரொம்ப உன்னதமான பணிதான். ஆனா... அதுக்குப் பொதுமக்கள் கிட்டே ஆதரவு கேட்டு நன்கொடை திரட்டியோ கலை நிகழ்ச்சிகள் நடத்தியோ பண வசூல் செய்யலாமே தவிர அத்தனை சுமையையும் மாணவர்கள் தலையிலே வலுக்கட்டாயமாகத் திணிக்கிறது சரியான காரியமாய்ப்படலே.''

ஆணித்தரமான அவரது கருத்தை ஆமோதித்து அடுத்தடுத்துப் பல குரல்கள் எழுவே தீர்மானம் நிறைவேற்றப்படாமலே கூட்டம் கலைகிறது.

தார் உருகிக் குழம்பாய் ஓடும் உச்சி வெய்யில் வேளையில் பள்ளி முகப்பைக் கடந்து தெருவில் காலெடுத்து வைக்கிறார் கந்தசாமி.



அம்மா
அலட்டிக் கொள்ளுகிறாள்
அடுப்பூத
ஊதுகுழல் வேண்டுமாம்.
காலேஜில் படித்த மகன்
புண்ணியத்தைத்
தேடிக் கொள்ளுகிறான்
பளபளக்கும்
'டிகிரி'யைச் சுருட்டி
ஊதுகுழலாக்கி
அன்னையிடம் நீட்டுகிறான்!

-சந்திர. மனோகரன்

சுப்பையா அவரைத் தேடிக் கொண்டு தலைதெறிக்க ஓடி வருகிறார். ''வேலையை ராஜிநாமாச்செஞ்சிட்டீங்களாமே ஸார்!'' —

அவர் தம் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து அவன் கையில் கொடுக்கிறார்.

பள்ளியின் வளர்ச்சிக்கான பணிகளில் ஒத்துழைக்க மறுத்ததாகவும், தலைமை ஆசிரியரின் அன்றாட நிர்வாகப் பணிகளில் குறுக்கிட்டு இடையூறு செய்வதாகவும் குற்றம் சாட்டிக் கந்தசாமி சாருக்குப் பள்ளி நிர்வாகம் அனுப்பி வைத்திருக்கிற அந்த 'ஷோ காஸ் நோட்டீ'ஸை உதடுகள் துடிக்கப் படித்து முடிக்கிறான் சுப்பையா.

''ஆனா...சார்! இதுக்காக நீங்க வேலையை!''

''தம்பி! இந்தக் கடிதத்துக்கு நான் விளக்கம் கொடுத்தேன்னு அவங்க சொல்றதை ஒத்துக்கிட்டதா ஆயிடும்!.. மேலும் என்ன விளக்கம் கொடுத்தாலும் அவங்க ஏத்துக்கப் போறதுமில்லே!...அதுக்கெல்லாம் மேலே அப்படிச் செய்யறது... என்னோட ஆத்மாவை நானே குரூரமா அவமானப் படுத்திக்கிறதுக்குச் சமம்!... எந்த வகையிலேயாவது என்னோட எதிர்ப்பை நான் காட்ட வேண்டாமா? அதுக்கு எனக்குத் தெரிஞ்ச ஒரே மௌனமான மொழி...வழி... இதுதான்!''

தெருத் திருப்பத்தில் மறைகிற வரையில் அந்த நெடிய கம்பீரமான புன்சிரிப்பு மாறாத உருவத்தைக் கண் கொட்டாமல் பார்த்தபடி நிற்கும் சுப்பையா மனத்துக்குள் சொல்லிக் கொள்கிறான்— ''சாருடைய வேர்கள் ரொம்பவும் ஆழமானவை!''

இரக்கமற்ற

5

இருவரும் ஒரு படகின் அருகில் சென்று அமர்ந்துகொண்டனர். ராதா, ரவிக்கு எதிரில் அவன் முகத்தைப் பார்த்த வண்ணம் கடலுக்கு முதுகைக் காட்டியவாறு உட்கார்ந்து கொண்டாள்.

''எக்ஸ்யூஸ் மீ ராதா.''

''எதுக்கு?''

''வீட்டிலேந்து இங்கே வர்ற வரைக்கும் நான் உன்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லே.''

''சாதாரணமாகவே நீங்க ரொம்பப் பேச மாட்டீங்க. அதிலும் இன்னிக்குக் கவலே வேற.''

''நான் உன்னோட பேசாம வந்ததுக்குக் காரணம் என் கவலையல்ல ராதா.''

''பின்னே?''

''நம்மோட முதல் சந்திப்பு உனக்கு நினைவிருக்கா? கோகலே ஹாலில்?''

''மறக்க முடியுமா?''

''அதை நினைச்சுட்டே வந்தேன்.''

''எனக்கு ஓர் ஆச்சரியம் எப்போதுமே!''

''என்ன?''

''மேடை மேலே ஏறினா அப்படிச் சரளமா கடல் மடை திறந்தாப்பலேன்னு சொல்லுவாங்களே. அந்த மாதிரி பேசற நீங்க ப்ரைவேட் கான்வர்சேஷன்லே மாத்திரம் இப்படி ரொம்ப ரிஸர்வ்டா இருக்கீங்களே?''

''சுபாவம் அப்படி.''

வேர்க்கடலைக்காரன் அவர்கள் அருகில் வந்து நின்று கொண்டான்.

''வேர்க்கடலே சாப்பிடுவோமா?'' என்று கேட்டான் ரவி.

''நீங்க சாப்பிடறதானா நானும் சாப்பிடறேன்.''

''சூடா இருக்குங்க'' என்றான் வேர்க்கடலைக்காரன்.

''சரி, போடு.''

வேர்க்கடலையைப் போட்டுவிட்டுக் காசை வாங்கிக் கொண்டு அவன் போய்விட்டான்.

''கடைசியிலே, நான் கூப்பிடாம நீயே எங்க வீட்டுக்கு வந்துட்டே.''

ராதா முறுவலித்தாள் பதிலுக்கு.

''நான் நாலஞ்சு தடவை உங்க வீட்டுக்கு வந்திருப்பேன்னு நினைக்கிறேன். ஆனா உன்னே என் வீட்டுக்கு வான்னு கூப்பிடணும்னு எனக்குத் தோணவே இல்லே.''

''ஏன்?''

''காரணம் ஒண்ணும் இல்லே.''


''வீட்ல யாராவது ஏதாவது நினைச்சுக்குவாளோன்னு?''

''அப்படி ஒண்ணும் இல்லே. ஆனா தைரியம் வரலேன்னு ஒத்துக்க வேண்டியது தான்.''

''உங்க ஸிஸ்டர்ஸ் ரெண்டு பேரும் ரொம்ப அழகா இருக்காங்களே!''

''உன்னே விடவா?''என்று கூறி ரவி முறுவலித்தான்.

அவன் முகத்தில் புன்முறுவல் தோன்றியதைக் கண்டு ராதாவுக்குச் சந்தோஷமாக இருந்தது. அவனது தகப்பனாரின் உடல் நிலையைப் பற்றிய விவரங்களைக் கேட்க வேண்டும் என்று நினைத்திருந்தவள் அந்த எண்ணத்தைக் கைவிட்டு விட்டாள். அவனாகவே மீண்



இரவுகள்

டும் அந்தப் பேச்சை எடுத்தால் அப்போது கேட்டுக் கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டான்.

''நான் அவ்வளவு அழகா என்ன?'' என்று கேட்டபோது அந்த இருட்டுக் கலந்த வெளிச்சத்திலும் அவள் கன்னங்களில் நாணத்தால் செம்மை படர்வதைக் காண முடிந்தது போல இருந்தது ரவிக்கு.

''நீ ஒரு மாதிரி அழகு. அவா வேற ஒரு மாதிரி அழகு.''

''அழகைப் போலவே படிப்பும் இருக்கும்னு நினைக்கிறேன். உங்க தங்கைகளாச்சே, கேக்கணுமா?''

''படிக்கறா. அப்படி யொண்ணும் பிரில்லியண்ட் ஸ்டுடன்ட்ஸ் இல்லே. ஏவரேஜ் மார்க்ஸ்தான் வாங்கிண்டிருக்கா.''

''நாளைக்கு ஆபீசுக்கு வருவேளா?''

''வரலாம்னுதான் இருக்கேன்... ராதா டு யூ நோ வாட் ஹேஸ் ஹாப்பண்ட் டு மை ஃபாதர்?''

''இல்லியே. சரியாத் தெரியல்லே. டாக்டர் என்ன சொன்னார்?''

''பாரலடிக் அட்டாக்னு சொல்றார். நட்டீன்ஸ் இனிமே அவர் படுத்த படுக்கைதான். அட்டாக் வந்ததிலேருந்து இன்னும் அவர் வாய் திறந்து பேசல்லே. நாக்கும் பாதிக்கப் பட்டிருக்குன்னு தோண்றது...'' என்று கூறி ரவி கவலையில் ஆழ்ந்தான்.

''ஐ எம் ஸோ சாரி ரவி.''

மீண்டும் அவர்களிடையே மௌனம் நிலவியது. நிம்மதியாகச் சிறிது நேரத்தைக் கடற் கரையிலே செலவழிக்க வேண்டு மென்பதற்காகத்தான் ரவி வீட்டை விட்டு வந்ததே. அவன் தகப்பனாரின் உடல் நிலை பற்றி எப்படியோ பேச்சு வந்து விட்டதே என்று ராதா வருத்தம் அடைந்தாள்.

''இனி அவர் மறுபடியும் வேலைக்குப் போக முடியும்னு தோணல்லே.''

''அப்படியா? அப்படி யெல்லாம் ஒண்ணும் இருக்காது ரவி.''

''உனக்குத் தெரியாது ராதா. அவரோட உயிருக்கு ஆபத்தில்லைங்கறதைத் தவிர இனிமே அவர் வாழ்க்கை முழுக்க உயிருள்ள சடலம்தான்.''-ரவியின் தொண்டை அடைத்துக் கொண்டது.

ரவிக்குப் பின்னால் நடந்து சென்று கொண்டிருந்த ஒருவரின் கவனக் குறைவினால் அவன் மீது மணல் வாரி இறைக்கப் பட்டது. கண்ணைத் துடைத்துக் கொண்டான் ரவி. கண்களில் மணல் விழுந்ததினாலா அல்லது கண்ணீர் பெருகியதனாலா என்று தெரியவில்லை.

''இனி குடும்ப பாரம் முழுக்க என் தலை மேலேதான். தங்கைகளோட படிப்பு, கல்யாணம் எல்லாம் இனிமே என் பொறுப்புத்தான்.''

''எல்லாம் சரியாகவே நடக்கும்னு எனக்குத் தோணறது. நீங்க அநாவசியமாக் கவலைப்படாதீங்கோ. இப்ப அதைப் பத்தியே நினைக்காதீங்கோ. வேற எதையாவது பேசலாம்'' என்றாள் ராதா.

ராதாவின் வார்த்தைகள் அவன் மனத்துக்கு இதமாக இருந்தன.

''வேர்க்கடலை அப்படியே இருக்கே, சாப்பிடல்லையா?'' என்று ராதா அவன் மடியின் மீது விரித்த கைக் குட்டையில் கிடந்த வேர்க்கடலை மணிகளைச் சுட்டிக் காட்டிக்கேட்டாள்.

ரவி ஒரு கடலையை எடுத்து வாயில் போட்டுக்கொண்டான். அடுத்த நிமிடமே ''தூ'' என்று அதைக் கீழே துப்பிவிட்டு மண்ணைப் போட்டு மூடினான்.



''சொந்தையா?''

''ம்''

அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்கு ஒரு பத்துப் பதினைந்து கஜ தூரம் தள்ளி ஓர் இளைஞனும் யுவதியும் வந்து உட்கார்ந்து கொண்டார்கள். இருவரின் கவனமும் உடனே அந்த ஜோடியின் மீது பாய்ந்தது.

ஒருவரை யொருவர் ஒட்டினாற்போல் உட்கார்ந்து கொண்டார்கள். சில வினாடிகளில் வாலிபனின் கை யுவதியின் இடையைச் சுற்றி அணைத்துக் கொண்டது. அவர்களுக்குப் பின்னாலும் முன்னாலும் சென்றுகொண்டிருந்தவர்கள் அவர்களின் நெருக்கத்தைக் கவனித்தபடியே சென்று கொண்டிருந்தார்கள். சிலர் அந்தக் காட்சியை ரசித்ததை அவர்கள் முகம் காட்டியது. ஆனால் அந்த இணைப் புறாக்களோ தங்கள் சுற்றுச் சூழ்நிலைகளைப்



முதல்வர்: ''நெய்வேலி மாப்பிள்ளையை விட்டுவிட்டுத் திருவெண்ணெய் நல்லூர் மாப்பிள்ளையை முடிச்சிட்டீங்களாமே?''

இரண்டாமவர்: ''ஆமாம், கையிலே வெண்ணெய்யை வைச்சுண்டு நெய்க்கு அலையக் கூடாது இல்லையா?''

- 'வேணு'

பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''புதுசாக் கல்யாணம் பண்ணிண்டவாளா யிருக்கும்'' என்றான் ரவி.

ராதாவின் முகத்தில் மறுபடியும் நாணம் பரவியதை அந்த மங்கல் வெளிச்சத்தில் அவனால் காண முடிந்தது.

''எனக்கு அப்படித் தோணல்லே''என்றாள்.

''அப்பறம்ன்னு?''

''கல்யாணமே ஆகாதவளாத்தான் இருக்கும்.''

''நோ நோ... என்ன ராதா?'' ரவி குழம்பினான்.

''கல்யாணமானவா இப்படிப் பொது இடத்துலே நாலு பேர் பார்க்கறச்சே இப்படியா நடந்துக்குவா?''

''அப்படியானா அவா ரெண்டு பேரும் யாரா இருக்கும்னு சொல்றே?''

''எனக்குத் தெரியாது'' என்று கூறி ராதா சிரித்தாள். அவனுக்கு என்னென்னவோ பேச வேண்டும் என்கிற ஆசையும் இருந்தது. அவ்வளவு நெருக்கமாக அவனோடு பேசவும் கூச்சமாக இருந்தது. ரவிக்கு அந்த நிலையில் அவளைப் பார்க்க ரொம்பவும் பிடித்திருந்தது.

''சொல் ராதா. அவங்களே வெட்கப் படல்லே. நீ ஏன் வெட்கப்படறே?''

''கல்யாணமானவங்கன்னா ராத்திரி முழுக்க வீட்ல அவங்க ராஜ்யம்தானே? இங்கே வந்து இப்படி...''

''காதலர்கள்ங்கறே. அப்படித்தானே?''

ராதா முறுவலித்தாள்.

''எல்லாக் காதலர்களுமே இப்படித்தான் நடந்துக்குவாங்களோ?'' என்று கேட்டு ரவி சிரித்தான்.

''காதலர்கள்னு நான் சொல்லலியே!''

''பின்னே?''

''நீங்க வேணும்னே என் வாயைக் கிண்டிப் பாக்கறீங்க. காதலர்கள்னா அவங்களுக்கும் வெட்கம், கூச்சம் எல்லாம் உண்டு.''

''உனக்கெப்படித் தெரியும்?''

''உங்களுக்கெப்படித் தெரியுமோ அப்படித்தான்.'' என்று கூறிவிட்டு ராதா தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு விட்டாள். வெட்கம் அவளை அவன் முகத்தைப் பார்க்க விடவில்லை.

ரவிக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒரு சிலிர்ப்பு.

''ராதா!''

''ம்?''

''ஒண்ணுமில்லே.''

''சொல்லுங்க ரவி. என்ன கேக்கணும்னு நினைச்சீங்க?''

''ஒவ்வொரு சமயத்திலே நான் ரொம்ப பாக்கியசாலின்னு எனக்குத் தோணுது. ஆனா அடுத்த நிமிஷமே இவ்வளவு பெரிய அதிருஷ்டம் எனக்கு இவ்வளவு சுலபத்துலே கிடைச்சுடுமா, கிடைக்காது, இதெல்லாம் கனவு போலப் போயிடும்னு தோணுது.''

''எதைப் பத்திச் சொல்றீங்கன்னே புரியல்லியே?'' என்றாள் ராதா. புரிந்ததையே தான் புரியவில்லை என்று சொன்னாள். அவன் வாயால் அதை வெளிப்படையாகக் கேட்க வேண்டுமென்கிற ஆவல்.

ரவி பதில் சொல்லாமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். இப்போது பகல் வெளிச்சம் கொஞ்சம் கூட இருக்கவில்லை. நிலவு மட்டும் பிரகாசம் பரப்பிக் கொண்டிருந்தது. அந்தத் தண்ணொளியில் இரவு முழுவதும் அப்படியே உட்கார்ந்து கொண்டு அந்த எழில் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் என்ன என்று அவனுக்குத் தோன்றியது. அந்த வாலிபனைப் போல நாமும் ஏன் வெட்கத்தை விட்டு விட்டு ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம் ராதாவின் சுந்தர முகத்தைத் தன் இரு கைகளாலும் ஏந்திக் கொண்டு அந்த இரு கரு விழிகளையும் நெஞ்சை அள்ளும் வனப்பைக் கொண்ட நாசியையும் ஆசை தீரத் தன் முகத்தில் பதிய வைத்துக் கொள்ளக் கூடாது?

''என்ன ரவி, அப்படிப் பாக்கறீங்க? நான் கேட்டதுக்குப் பதில் சொல்லலியே?''

''நீ என்ன கேட்டே?'' என்றான் ரவி சிரித்தபடியே.

''என்னமோ நீங்க ஒரு நிமிஷம் பாக்கிய சாலின்னும் இன்னொரு நிமிஷம் இல்லேன்னும் சொன்னீங்களே?''

''சொல்றேன். அதுக்கு முன்னாடி நான் கேக்கறதுக்கு நீ பதில் சொல்றியா?''

''ம்.''

''முதல் நாளே என்னைப் பார்த்ததுமே உங்க வீட்டுக்கு வரச் சொல்லிக் கூப்பிட்டியே, ஏன்?''

''உங்களை எனக்குப் பிடிச்சிருந்தது. அதாவது, உங்க திறமையை நான் மெச்சினேன். உங்க நட்பை விரும்பினேன்.''

''அவ்வளவுதானா?''

''அன்னிக்கு அவ்வளவுதான்.''

''அதுக்கப்புறம்?''

''அதுக்கப்புறம்... முதல் முதலா உங்களை ஆஞ்சநேயர் கோவில்லே பார்த்தேனே, ஞாபகமிருக்கா?''

''ஆமா.''

''ஒரு சனிக் கிழமை?''

''அதுக்கப்புறமும் எத்தனையோ சனிக் கிழமைகளிலே அந்தக் கோவில்லே நாம சந்திச்சுண்டிருக்கோம்.''

''எனக்கும் உங்களுக்கும் பல விதங்களிலே ஒத்துமை இருக்கிறது தெரிஞ்சது. நமக்குள்ளே ஏதோ ஒரு பிணைப்பு இருக்கறதா எனக்குத் தோணித்து. நீங்களும் நானும் எதிர் எதிர், சாமியிலே நின்னுண்டு ஆஞ்சநேயரையும், கோதண்டராமரையும் தரிசிச்சோம். ஆனா என் மனசுலே அப்போ ஒரு பாவனை.''

''என்ன?''

''நீங்க எதிர் திசையிலே நிக்காம, என் பக்கத்திலேயே நிக்கறாப்பலேயும், நம்ம ரெண்டு பேர் கழுத்திலேயும் மாலைகள் போட்டிண்டிருக்காப்பலேயும்...''

ரவியின் உடல் புஷ்பங்களால் அர்ச்சிக்கப்பட்டது போலச் சிலிர்த்தது.

''அந்தப் பாக்கியம் நமக்குக் கிடைக்குமாங்கறதுலெதான் எனக்கு இப்பச் சந்தேகம் தோண ஆரம்பிச்சிருக்கு ராதா'' என்றான் ரவி.

''ஏன்? எனக்கு அப்படி யெல்லாம் சந்தேகமே தோணலே. இன்னிக்குக் காலையிலே பாருங்கோ. சனிக் கிழமையா யில்லாட்டாலும் என்னமோ கோவிலுக்குப் போகணும்னு தோணி வந்தேன். நீங்களும் அதே மாதிரி அகஸ்மாத்தா வந்திருந்தேள். இதெல்லாம் சின்னச் சம்பவங்களானாலும் இதுலெயெல்லாம் தெய்வ சங்கல்பம் இருக்கிறதா எனக்குத் தோணறது.''

''என் பயம் என்னன்னு நீ கேட்கலியே?''

''என்ன?''

''எங்கப்பா இப்படிப் படுத்துட்டதனாலே இனிமே என் தங்கைகளோட படிப்பு, கல்யாணம் எல்லாம் என் பொறுப்பு. இந்தப் பொறுப்பையெல்லாம் நிர்வகிச்சுத் தீர்க்கறதுக்கு எவ்வளவு காலம் வேண்டியிருக்குமோ? அந்தப் பொறுப்பையெல்லாம் நிறைவேத்தற வரைக்கும் நம்ம கல்யாணத்தைப் பத்தி நினைக்க முடியாது ராதா.''

''வேண்டாம். நான் உங்களுக்காக எவ்வளவு நாள் வேணும்னாலும் காத்திருப்பேன்.''

''நீ காத்திருப்பேங்கறதுலெ எனக்கு நம்பிக்கை இருக்கு. ஆனா உங்க அப்பா? உன் சித்தி?''

''என் இஷ்டத்துக்கு விரோதமா எங்கப்பா ஒண்ணும் செஞ்சதில்லே. இந்த விஷயத்திலேயும் அவர் எந்த விதத்திலேயும் என்னை வற்புறுத்துவார்னு எனக்குத் தோணலே.''

''உன் சித்தி?''

''சித்தி சாதாரணமா எல்லா விஷயத்திலுமே அப்பா சொல்படிதான்.''

''அப்படியானா நான் பாக்கியசாலிதான்'' என்றான் ரவி முகம் மலர.

அந்த ஜோடியின் பக்கம் மறுபடியும் அவர்களின் கவனம் திரும்பியது. அவர்கள் இப்போது இன்னும் கணிசமாக 'முன்னேறி' யிருந்தார்கள்.

''ராதா, நாம இங்கே உட்கார்ந்திருந்தா, பார்க்கறவங்க நம்மையும் அந்த மாதிரி ஒரு ஜோடின்னு நினைச்சுண்டுடுவாங்க.''

''அப்ப வாங்க. கொஞ்சம் தள்ளிப் போய் அந்தப் பக்கமா உட்கார்ந்துக்குவோம்'' என்று ராதா சொல்லவும் இருவரும் எழுந்து சென்று சிறிது தள்ளிப் போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

ரவி தன் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான். ஏழரை.



பம்பாய் வில்லாளிகளைப் பத்தி இப்படி ஒரு சுவையான கதை சொல்லப்படுகிறது:

ஒருவர் காப்புக் கடைக்குப் போய் 2 ரூபாய்க்கு ஆட்டிறைச்சி கேட்டாராம், பையைக் காண்பித்தபடி. 'பஸ் டிக்கெட் கொண்டு வா'' என்றான் கடைக்காரன். புரியாமல் விழித்த அவர், 'பஸ் டிக்கெட் எதற்கு?' என்று கேட்டிருக்கிறார்.

''மட்டன் கட்டிக் கொடுக்க. அவ்வளவுதான் வரும்'' என்றானாம்.

வந்தவரும் பஸ் டிக்கெட்டைக் கொடுக்க கடைக்காரன் இறைச்சியை அதில் கட்டிக் கொடுத்தானாம்.

வாங்கினவர் முன்னாடி அடித்துக் கொண்டு பஸ்ஸில் ஏறி இருக்கிறார். வீட்டுக்குப் போய்ப் பார்த்தால் மட்டனைக் காணவில்லை. என்னடா விஷயம் என்றால் பஸ் டிக்கெட்டில் கண்டக்டர் பஞ்ச் செய்திருப்பார் இல்லையா? அதில் உள்ள துளை வழியாக மட்டன் நழுவி எங்கோ விழுந்து விட்டிருக்கிறது!

- 'ஸ்வப்னா'

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

''எட்டு மணிக்குத் திரும்பிப் போவோமா?'' என்று கேட்டான்.

''நீங்க எப்பபுறப் படச் சொன்னாலும் நான் அப்பப் புறப்படத் தயார்.''

'சீக்கிரம் திரும்பி வந்துடறதா அம்மா கிட்டச் சொல்லிட்டு வந்திருக்கேன். அதனாலேதான் எட்டு மணிக்குப் போகணும்கறேன்.''

''இல்லாட்டா?''

''இல்லாட்டா இன்னி ராத்திரி முழுக்க இப்படியே உட்கார்ந்திருக்கவும்நான் தய ர்.''

''நல்லவேளை'' என்று கூறி ராதா சிரித்தாள்.

''ஏன் ராதா சிரிக்கிறே?''

''வேற என்னமாவது சொல்லிடுவீங்களோன்னு பயந்துட்டேன்.''

''புரியல்லியே?''

''அந்த ஜோடியைப் போல் நாமளும் இருக்கணும்னு சொல்லிடுவீங்களோன்னு நினைச்சேன்.''

''என்னை அப்படிப்பட்டவன்னு நினைக்கிறியா ராதா? நான்தாலே சொன்னேன், அவுங்களுக்குப் பக்கத்திலே கூட உட்கார வேண்டாம், விலகிப் போயிடுவோம்னு?''

''வேடிக்கைக்காகச் சொன்னேன் ரவி. ப்ளீஸ் கோவிச்சுண்டுடாதீங்க.''

''இல்லே, கோபம் ஒண்ணும் இல்லே.''

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள்.

''உங்க தங்கைகள் பேரிலே உங்களுக்கு ரொம்பப் பிரியம் இல்லையா?'' என்று ராதா மறுபடியும் பேச்சை ஆரம்பித்தாள்.

''ஆமாம், ராதா.''

''அவங்களுக்கும் அப்படித்தான் போல இருக்கு. பேசறபோதே தெரியறதே. நொடிக்கொரு தடவை அண்ணா, அண்ணான்னு அண்ணாவைப் பத்தி ஏதாவது சொல்லிக்கிட்டே இருக்காங்களே!''

''எங்கப்பா ரொம்ப ரிசர்வ்ட் சுபாவம். குழந்தைகளிடத்திலே கூட ஜாஸ்தி பேச மாட்டார். ஒட்ட மாட்டார். அன்பு இல்லாம இல்லே. ஆனா எல்லாம் மனசுக்குள்ளேதான். வெளியிலே காட்டிக்கப் பிடிக்காது. அதனாலேதானோ என்னவோ என் தங்கைங்க ரெண்டு பேரும் அப்பா கிட்டக் காட்ட வேண்டிய பிரியத்தையும் சேர்த்து எங்கிட்ட ஒட்டிண்டுட்டாங்க. எனக்கும் அப்படியேதான்.. சினிமா, நாடகத்திலேகூட.. அண்ணன்காரன் ஒருத்தன் தங்கை பேரிலே அன்பா இருக்கிறதாவும் அவளுக்காகத் தியாகம் பண்றப்பவும் நான் நெகிழ்ந்து போயிடுவேன்.''

நான்கு பேர் உரத்த குரலில் பாடிக் கொண்டும், சீழ்க்கை அடித்துக்கொண்டும் அட்டகாசம் செய்தபடி வந்துகொண்டிருந்தார்கள்.ரவியும் ராதாவும் இருந்த இடத்தை நோக்கி. அதைக் கவனித்ததும் அவர்கள் பேச்சுத் தடைப்பட்டது. அந்தக் கும்பல் அவர்களைத் தாண்டிச் சிறிது தூரம் போய் உட்கார்ந்து கொண்டது. உட்கார்ந்த பிறகும் அவர்கள் ஆர்ப்பாட்டம் ஓயவில்லை.பாட்டும் தாளமும் அதிகமாயின. அபஸ்வரமும் ஆபாசமும் நிறைந்த பாடல்கள்.

''இனிமே நாம இங்கே உட்கார்ந்திருக்கறதுக்கு லாயக்கில்லேன்னு நினைக்கிறேன். போயிடுவோம்'' என்றான் ரவி.

''சரி'' என்று ராதாவும் எழுந்திருந்தாள்.

அவர்கள் இரண்டடி நடப்பதற்குள் ''டேய் ரவி!'' என்ற குரல் அந்தக் கும்பலில் ஒருவனிடமிருந்து வந்தது.

ரவி திடுக்கிட்டு நின்றான். திரும்பிப் பார்த்தான்.

கும்டலிலிருந்து ஒருவன் எழுந்து ரவியை நோக்கி நடந்து வந்தான்.

''உங்களுக்குத் தெரிஞ்சவனா?'' என்று ராதா மெல்லிய குரலில் கேட்டாள். ரவி அவளுக்குப் பதில் சொல்லாமல் தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த ஆளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

அவன் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டே ரவியின் எதிரில் வந்து நின்றான். ரவியைச் சில விநாடிகள் உற்றுப் பார்த்து விட்டு, பிறகு ராதாவையும் ஏற இறங்கப் பார்த்தான்.

''ஹோ ஹோ'' என்று பெரிய குரல் எடுத்துச் சிரித்தான்.

''பேஷ் பேஷ், ரவி! கெட்டிக்காரன்டா நீ.பலே!'' என்று கூறி மறுபடியும் சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறே?''

''அப்பாவுக்கு உடம்பு சீரியஸ்ஸா இருக்குன்னு விட்டியே ரீப்பு! அப்பாவைக் கவனிச்சுண்டுதான் இருக்கியா இப்போ?யார்டா அது?'' என்று ராதாவின் பக்கம் கண்ணைக் காட்டிக் கேட்டான்.

''உனக்கு இப்போ என்ன வேணும்?''

''எனக்கொண்ணும் வேண்டாம்பா...'' என்று கையைக் கட்டி வாயைப் பொத்திக் கொண்டு பயந்தவன் போல் நடித்தான்.

''குடிச்சுட்டு இப்படி பப்ளிக்கா வந்து கலாட்டா செய்யறியே? போலீஸ் பார்த்தா? போ, போய்ப் பேசாமல் படுத்துத் தூங்கு'' என்றான்.

''என்னடா, அண்ணனுக்கே உபதேசம் செய்ய வந்துட்டியா?'' என்று அவன் கேட்டதும் ராதா திடுக்கிட்டாள். ரவி படபடக்கும் இதயத்துடன் அவனைப் பார்த்தான்.

(தொடரும்)

முதல்வர்: ''அறிவிப்பாளருக்குப் பல்வலியா என்ன?''

இரண்டாமவர்: ''ஆமாம், எப்படிக் கண்டு பிடிச்சீங்க?''

முதல்வர்: '' 'ராகம் - தானம் - பல்லவி'க்கறதுக்கு பதிலா ராகம்-தானம்-பல்வலிங்கறாரே!''

— ஆர். ஆர். ராவ்





மிகப் பொருத்தமான
ஜோடி
இந்தியாவின் ஒரே துர்நாற்றமகற்றும்
சோப் மற்றும் டால்க்
துர்நாற்றத்திலிருந்து உங்கள் உடலுக்கு
இரட்டைப் பாதுகாப்பு. சிந்தால் சோப் குளியலும்
பின் சிந்தால் பவுடர் தூவலும்—ஆகா!
புத்துணர்ச்சியின் புதுச் சிகரத்தில்
நீங்கள் இருப்பீர்கள்!
கோத்ரெஜ் வழங்கும் சிந்தால்
CINTHOL
DEODORANT
LUXURY
TOILET POWDER
BY
Godrej
CINTHOL
Godrej
CINTHOL
DEODORANT AND COMPLEXION SOAP
Interpub/CTS/I/80

திரைக்கூடு



ஒரு மொழியில், ஒரு படம் வெற்றி பெற்று விட்டால் போதும் — அதை உடனே தமிழில் தயாரித்து விட வேண்டியது. ஹிந்தியில் வந்த ''குட்டி'' (Guddy), தமிழில் முன்பு வந்த ''சினிமாப் பைத்தியம்'' தெலுங்கில் வந்து ஆந்திராவில் சக்கைப் போடு போட்ட ''சிவரஞ்சினி'', இந்த ''நட்சத்திரம்'' எல்லாம் ஒன்றுதான், ஒன்றேதான்!

சிவரஞ்சினியாக வரும் ஸ்ரீப்பிரியாவின் நடிப்பு சிறப்பாயிருக்கிறது.

இந்தப் படத்தில், கமலஹாசன், சிவாஜி, ரஜனிகாந்த் ஆகியவர்கள் வருகின்றனர்.. டைரக்டர் ஸ்ரீதர் கூட ஒரு காட்சியில் தலை காட்டி விட்டுப் போகிறார்.

நாகேஷ், காமெடி பண்ணுவதாக நினைத்துக் கொண்டு தெலுங்கு மொழியைக் கேலி பண்ணுவது நன்றாயில்லையே!

நட்சத்திரம்

அவருக்குத் தெலுங்கும் சரியாய்த் தெரியாதாம். தமிழும் சரியாய்த் தெரியாதாம்! அதற்காக இப்படிப் படம் முழுவதும் அறுக்கலாமா? என்னவோ, வேதனை போங்கள்!

படப்பிடிப்புக் காட்சிகளைக் காட்டிப் படத்தை நீட்டியிருக்கிறார்கள். இப்பொழுது எல்லாப் படங்களிலும் இக் காட்சிகள் வருகின்றனவே.

கதை, திரைக்கதை, வசனம் எல்லாவற்றுக்கும் தாசரி நாராயண ராவ் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார். அரைத்த மாவையே அரைப்பதற்கு யார் பொறுப்பு ஏற்றால் என்ன?

கதைக்குள் கதையாக வரும்படி சில கதைகளை இதில் சேர்த்திருக்கிறார்கள். என்னத்தைச் சேர்த்தாலும் ஏற்கனவே சொன்னதைத்தானே சொல்லியிருக்கிறார்கள்?

''நட்சத்திரம்'' மினுமினுக்கக்கூட இல்லை.



குருவி சொல்கிறது:

பல சிறுகதைகளிலேயும் நாவல்களிலேயும் நான் முக்கியமான பாத்திரமாயிருந்திருக்கிறேன். அவற்றில் நான் கட்டுகிற கூட்டுக்கும் மதிப்புண்டு. இந்தப் படத்தின் தலைப்பு எனக்குப் பெருமை தருகிறது. ஆனால் திரைக் கதையையும் குருவிக் கூடாக்கியிருக்க வேண்டாம். என்னிடம் ஓர் ஒழுங்கு இருக்காது. ஆனால் திரைக்கதை ஒழுங்கு இல்லாமல் இருக்கக் கூடாதே!

ஓர் அதிசயம்! மவுண்ட் ரோடில் இந்தப் படத்தின் மிகப் பெரிய 'பானர்' விளம்பரத்தில், சுமார் மூன்றடி நீளத்துக்குக் குருவிக் கூடு கட்டி வைத்திருக்கிறார்கள். நிஜமான குருவிக் கூடாயிருந்தால் மவுண்ட் ரோடில் அவ்வளவு பெரிதாகக் கட்டிக்கொள்ள இடம் கொடுத்திருப்பார்களா? நான் சினிமா குருவிக் கூடாயிற்றே! நட்சத்திரக் கூடல்லவா? அதனால் விட்டு வைத்திருக்கிறார்கள்.

●

பணமா, பாசமா என்பதுதான் மையக் கருத்து. வசதியுள்ளவனுக்கு மூத்தவளைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டுத் தாய் அந்தப் பணக்கார குடும்பத்தின் நிழலில் ஒதுங்கி அட்டகாசம் செய்கிறான். கொண்ட கணவனையே ஆட்டிப் படைக்கிறாள். சுருமாரிக்கு ஏற்ற பாத்திரம்தான் அது.

சுதாகர் அசட்டுத்தனமாக இருப்பதை விட்டு விட்டு எப்பொழுது நடிக்கக் கற்றுக்கொள்ளப் போகிறார்? அசட்டுப் பார்வை! அசட்டுச் சிரிப்பு!

சுதாகரின் முறைப்பெண் சரிதா அத்தானிடம் சைக்கிள் கற்றுக் கொள்வதோடு சரி.

இந்தப் படத்தில் யாருக்குமே அதிக வேலையில்லை.

ஏழைத் தகப்பனாராக வந்து தபாலாபீசில், எழுத்துவாசனை இல்லாதவர்களுக்குக் கடிதம் எழுதிக் கொடுத்து அதன் மூலம் சில்லறை சம்பாதிக்கும் சாமிக்கண்ணு ஒருவர்தான் இப் படத்தில் நடித்திருக்கிறார்! அவர்மட்டும் நினைவில் தங்குகிறார். தந்தையின் பாசம் நாணயம் இவற்றை அவரிடம் காண முடிகிறது.

கவியரசு கண்ணதாசனின் ''வண்ணத்துப் பூச்சி சிரிக்குது'' என்ற பாடல் இனிமையாயிருக்கிறது. வண்ண ஒளிப்பதிவு அருமையாயிருக்கிறது. பழம் பெரும் டைரக்டர் பி. மாதவன் டைரக்ட் செய்திருக்கிறார் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள இப் படத்தில் எதுவும் இல்லை. பழம்பெருமை பேசுவதுடன் நிற்க வேண்டியதுதானா? '





நன்றிக்கரங்கள்

முதல் கேள்வி: படாதிபதிகளே, சவால்களுக்கும், சபதங்களுக்கும் என்று சற்று ஓய்வு கொடுக்கப் போகிறீர்கள்?

இரண்டாவது கேள்வி: திரைக் கதையின் அசட்டுத்தனத்துக்கு ஓர் எல்லையே கிடையாதா?

மூன்றாவது கேள்வி: மனைவிமார்களுக்குப் பயந்து நடுங்கும் கணவன் மார்களின் கோழைத்தனம். என்னதான் நகைச்சுவையைக் கலந்தாலும் அசடு வழிகிறதே! என்ன செய்யலாம்?

நான்காவது கேள்வி: கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பை ஏற்றிருக்கும் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் பழைய பாதையிலிருந்து .மாறவே மாட்டாரா? இரு பெண்கள் கைகலப்பதைக் காட்டுவதில் அவருக்கு அப்படி என்ன ஓர் ஆர்வமோ?

ஐந்தாவது கேள்வி: மேற்படி நான்கு கேள்விகளை எழுப்பிய பிறகு இந்த விமரிசனத்தைத் தொடர்ந்து எழுதுவது அவசியம்தானா? **-காந்தன்**

பால் நோய்

டாக்டர் பேசுகிறார்!

அறிவீனத்தால், வைத்தியரிடம் சொல்லாமல் மறைப்பதால் பால் நோய் முற்றி உயிரையே வாங்கும் அளவுக்கு வளர்ந்து விடுகிறது. பால் நோய்களுக்கென ஒரு தனிப் பிரிவே செயல்படுகிறது அரசாங்கப் பொது மருத்துவ மனையில் (ஜி. எச்.) அங்கு நாம் நுழைவதை யாராவது பார்த்தாலே அவமானமாயிற்றே என்று சிலர் நினைக்கிறார்கள்.

பொதுவாக எல்லா வைத்தியர்களுக்குமே இந்த நோய்களின் தன்மையும் அவற்றைக் குணப்படுத்த வழியும் தெரியும். ஆதலால் எந்த உடல் பாதிப்பு ஏற்பட்டாலும் முதலில் குடும்ப டாக்டரிடம் ஆலோசிப்பதுதான் நல்லது. இந்த வியாதிகளை அவரே குணப்படுத்த முடியும். ஆரம்பத்திலேயே உணர்ந்து வைத்தியம் பெற்றுவிட்டால் நல்லது. குணப்படுத்திவிடலாம். அதைச் செய்யாமல் தாமதித்துவிட்டால் ஆளை நன்றாக இவ்வியாதிகள் பழி வாங்கிவிடும்.

இந்த வியாதிகளில் ஒரு வகை கனோரியா. இது ஆண்களுக்கு வந்ததும் உடனே தெரிந்து விடும். அடிக்கடி சிறுநீர் கழிதல், சீழ் வருதல் எரிச்சல் இவையெல்லாம் இந்த வியாதியை உணர்த்துபவை. இதனை இப்படியேவிட்டால் புற்று நோய் வரவும் வாய்ப்பு உண்டு.

பெண்களுக்கு இந்த வியாதியின் ஊடுருவலால் குழந்தை பிறக்கும்போதே கண் பார்வை இழந்து பிறக்க வாய்ப்பு உண்டு. ஆண்களிடமிருந்து பெண்களுக்கு வியாதி பரவுகிறது. பெண்களுக்கு வந்தால் இது அவ்வளவு சீக்கிரம் வெளியில் தெரிவதில்லை. பெண் உறுப்பில் வீக்கம் ஏற்படும். அந்தப் பகுதிகளில் கட்டி வரும். மூட்டுகள், கீல்கள் பாதிக்கப்படும்.

யோக்கியப் பொறுப்புள்ளவன் தனக்கு இந்த வியாதி வந்திருக்கிறது எனத் தெரிந்த பிறகு மனைவியுடன் உடலுறவு கொள்ள மாட்டான். அத்துடன் மனைவிக்குத் தகுந்த தடுப்பு ஊசி போடுவது நல்லது. பெண்களுக்கு வந்தால் அது முற்றிக் குணப்படுத்த முடியாது என்ற நிலையில்தான் வெளியில் தெரிகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இன்னொரு வகை பால் நோய் சிஃபிலிஸ்.

இந்த வியாதியை உருவாக்கும் கிருமிகள் ரத்தத்தில் கலந்துவிடும். முந்தைய வியாதி போல் உடனடியாகப் பயங்கரத் தாக்குதல் இருக்காது. ஆனால் சிறிது காலத்துக்குப் பிறகு பயங்கரமாகத் தாக்கும். முதலில் ஆண்-பெண் உறுப்புக்களில் புண் வரும். அதை மருந்து போட்டுச் சரி செய்துவிட்டுப் போய் விட்டது என நினைக்கக் கூடாது. வைத்தியர் சொன்ன கால அளவு மருந்து சாப்பிட வேண்டும். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

இந்த நோயின் பயங்கரத்தை அறியாமல் விட்டு விடக் கூடாது. இது நரம்புகளைப் பாதிக்கும். மூளையைக் கூடப் பாதிக்கும். காலப் போக்கில் ரத்தக் குழாய்கள், இதயத்தையும் பாதிக்கும்.

இந்த வியாதி கிருமி ரத்தத்தில் கலந்து இருந்தால் தாய்க்கு அங்கக் குறைவான குழந்தைகள் பிறக்கக் கூடும். தானாகக் கருச் சிதைவு ஏற்பட்டு விடும். அடிக்கடி யாருக்காவது கருச் சிதைவு காரணமில்லாமல் ஏற்பட்டால், இந்த நோய்க்கான பரிசோதனைகளையும் செய்து பார்த்துக்கொள்வது நல்லது.

மூன்றாவது வகை லிம்ஃபோகிரான்லோமா.

இந்த வியாதி வந்தால் அரையில் நெறி கட்டிக் கொண்டு பயங்கர வலியைத் தரும். ரத்தமும் சீழும் வெளியேறும். வியாதி கண்டவன் மலடாகவும் ஆகிவிடுவது உண்டு.

கை வைத்தியம் எல்லாம் சரிப்பட்டு வராது. உடனடியாக வைத்தியரை அணுகிச் சீராக வைத்தியம் பார்த்துக் கொண்டால் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

பயணிகள் விடுதிகளிலோ, ஹோட்டல்களிலோ தங்க நேர்ந்தால் கூடுமானவரை சொந்தச் சவுக்கங்கள், படுக்கை விரிப்புகளைப் பயன்படுத்துவது நல்லது. சுடு தண்ணீரில் கொதிக்க வைக்காத டவல்கள், படுக்கை விரிப்புகளாயின், அதில் ஒட்டியிருக்கும் இந்த வியாதிக் கிருமிகள் இன்னொருவரிடம் தொத்திக் கொள்ளக் கூடும். இதனால் ஒழுக்கம் காப்பவர்கள் கூட இந்தக் கொடூர வியாதிக்கு இலக்காகி விடுவார்கள். ஆனால் இவ்வாறு வியாதி பிடிப்பது மிக மிகக் குறைந்த சதவீதம்தான்.

டாக்டர்: சௌரிராஜன்

பேட்டி: குயிலி ராஜேஸ்வரி



அத்தியாயம் 41

கண்டதும் நடந்ததும்

சத்ரபதி சிவாஜி சிலையின் கையில் ஒரு கைத்துப்பாக்கி தோன்றியதையும், அது சுடவும் செய்ததையும் அதன் ரவை பாய்ந்ததும் ஆங்கில நடன பாணியில் டெய்லர் துள்ளிக் குதித்ததையும் கண்ட வில்வர் மிதமிஞ்சிய வியப்படைந்தானென்றால், தளபதி அடைந்த வியப்புக்கு அது மிகவும் சொல்பமென்பதை அவர் முகம் தெள்ளெனக் காட்டியது. கருங்கல் சுவரை அணைத்துச் செதுக்கப்பட்டிருந்த சத்ரபதியின் சிலைக்குப் பின்னால் ஒரு மனிதன் நிற்க வேண்டிய அளவுக்கு இடமில்லை யென்பதையும் சிலைக்கு அபிஷேகம் செய்யும் குரு மகராஜ் கூட முன் பக்கத்திலிருந்தே கைகளைக் கொடுத்துச் சிலையைத் தேய்க்கும் வழக்கமென்பதையும் உணர்ந்திருந்த தளபதி, பின்னாலிருந்து குரல் எப்படி வந்தது, எப்படி கைத்துப்பாக்கி சுடப்பட்டது என்ற விவரங்களை அறிய முடியாததால் பெரிதும் திகைக்கவே செய்தார். ரவை காலுக்கு அருகில் பாய்ந்ததால் துள்ளிய டெய்லர், சிலையையும் பார்த்து வில்வரையும் பார்த்தான். "சுட்டது யார்?" என்று வில்வரைக் கேட்டான் சினத்துடன்.

அத்தனை அசந்தர்ப்பமான நிலையிலும் வில்வர் நகைத்து, "நீ கேட்க வேண்டியது என்னையல்ல" என்றான்.

"வேறு யாரை?" டெய்லர் சீறிவிழுந்தான்.

"சிவாஜி மகாராஜாவை" என்றான் வில்வர் தான் பெரிய ரகசியத்தைக் கண்டு பிடித்துவிட்ட குரலில்.

"சிவாஜி எங்கிருக்கிறார்?" டெய்லரின் அடுத்த கேள்வி முரட்டுத்தனமாக இருந்தது.

"சிலையில்."

"சிலை சுட முடியுமா?"

"முடியாது என்றுதான் இன்றுவரையில் நினைத்திருந்தேன்."

"இப்பொழுது?"

"சுடும் என்று தெரிந்து கொண்டேன்."

"என்னுடன் விளையாடுவது பிசாசுடன் விளையாடுவதற்குச் சமானம்."

"நீண்ட நாட்களாகத் தெரியும் அது எனக்கு."

வில்வரின் பதில்கள் டெய்லரின் கோபத்தைக் கிளறவே அவன் சட்டென்று திரும்பிச் சிலையை நோக்கிச்சென்றான் வேகமாக. அதன் கையிலிருந்த துப்பாக்கியை எடுத்தான் சரேலென்று. அதற்குப் பின்னால் அபிஷேகம் செய்யும் குருநாதரைப் போலவே கைகளைத் துழாவிப் பார்த்தான். யாரும் இல்லை பின்னால். ஆகவே சிலையின் பீடத்திலிருந்து இறங்கி வந்து "யாருமில்லை பின்னால். சுட்டவன் வேறிடத்திலிருந்து சுட்டிருக்கிறான்" என்று வில்வரை நோக்கிக் கூறிவிட்டுத் தளபதியை நோக்கி, "மிஸ்டர் பந்த்! வேறு எங்காவது ஆள் மறைய இடம் இருக்கிறதா?" என்று வினவினான் கோபத்தால் முகம் சிவக்க.

"பல இடங்கள் இருக்கின்றன" என்று சங்கர் பந்த் கோட்டை மதில்களைச் சுற்றிக் காட்டினார்.

டெய்லரின் சினம் அதிகமாயிற்று. "அந்த இடங்களைக் கேட்கவில்லை. இங்கு ஏதாவது இடமிருக்கிறதா?" என வினவினான்.

சங்கர்பந்த் முகத்தில் வெறுப்புச் சாயை படர்ந்தது. "இந்த முட்டாளை எதைச் சொல்லி நம்ப வைப்பது?" என்று சற்று இரைந்து மற்ற இருவர் காதிலும் விழும்படியாகத் தம்மை வினவிக் கொண்டார்.

இதனால் கோபம் தலைக்கேறவே டெய்லர் தனது இடையிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்தான், குறி வைத்தான் சங்கர் பந்தை நோக்கி. எங்கிருந்தோ வந்த இன்னொரு துப்பாக்கி ரவை அவன் கைத்துப்பாக்கியைப் பறித்துச் சென்றது. அப்பொழுதுதான் வில்வர் சொன்னான், "டெய்லர்! லெட் அஸ் நாட் டு எனிதிங் நௌ. லாக் பந்த் இன் தட் ரூம். வீ வில் ஸர்ச் பார் த ஹிடன் கல்ப்ரிட் இன் த மார்னிங் (டெய்லர்! இப்பொழுது நாம் எதுவும் செய்ய வேண்டாம். அந்த அறையில் பந்தை வைத்துப் பூட்டி விடு. மறைந்திருக்கும் கள்வனைக் காலையில் தேடுவோம்)" என்று கூறினான்.

அதற்குப் பிறகு டெய்லர் எதுவும் பேசவில்லை. பந்தை சிவாஜி சிலைக்குப் பக்கத்திலிருந்த அறைக்குள் போக உத்தரவிட்டான். அவர் போனதும் தனது கோட் பையில் வைத்திருந்த ஒரு பூட்டை எடுத்துப் பூட்டினான். பிறகு சிவாஜி சிலையைப் பார்த்து இரைந்து பேசினான். "சுட்டது யாராயிருந்தாலும், எங்கிருந்தாலும் கேள். நாளைக் காலையில் பந்த் இங்கு இல்லாவிட்டால் இந்தச் சிந்துதுர்க்கம் தரைமட்டமாக்கப்படும், காஸண்ட்

கடல் ராணி

சாண்டில்யன்

ராவின் பீரங்கிகளால்'' என்று. பிறகு சரே லென்று திரும்பி வில்வருடன் சென்றான். போகும்போதே சிந்து தூர்க்கத்திலிருந்த வெள்ளைக்கார மாலுமிகளில் நால்வரை அழைத்துக் கொண்டு தளபதி மாளிகையை அடைந்து அதற்குள் நுழைந்தான். அங்கிருந்த இரு காவலரையும் தனது மாலுமிகளைக் கொண்டு சிறைப்படுத்தினான். பிறகு மாலுமிகளை நோக்கிக் காலைவரையில் இங்கு யாரையும் நுழைய விடாதே'' என்று எச்சரித்துவிட்டு உள்ளே சென்றான்.

வில்வர் அவனைத் தொடரவில்லை. தோளிலிருந்த கிளியைத் தடவிக் கொடுத்துக் கொண்டு மாளிகை வாயிற்படியிலேயே உட்கார்ந்து கொண்டான். அவன் கூரிய கண்கள் சிவாஜி சிலை இருந்த இடத்தையே நோக்கிக் கொண்டிருந்தன. நேரம் ஓடியது. நான்காவது ஜாமம் முடியும் தருவாயிலிருந்தது. அப்பொழுது திடீரென்று ஏற்பட்ட காரிருளில் ஒரு மனிதன்பந்த்சிறையிருந்த அறையை நோக்கி நடந்தான். அவன் எப்படி வந்தான் எங்கிருந்து வந்தான் என்பது வில்வருக்குப் புரியவில்லை ஆகையால் வில்வர் எழுந்து நின்று கொண்டு தடியையும் கக்கத்தில் அடக்கிக்கொண்டான். பிறகு எதையோ நினைத்துக் கொண்டு மெள்ளச் சிரித்தான். தனது தோளிலிருந்த கிளியிடம் ஏதோ கூறினான். அந்த அசுரக் கிளி பெரிதாகச் சிறகடித்து அதிவேகமாகப் பந்தின் அறையை அடைந்து கொண்டிருந்த மனிதனை நோக்கிச் சென்றது. அந்தக் கிளியிடமிருந்து யாரும் தப்ப முடியாதென்பது வில்வருக்கு நன்றாகத் தெரியுமாதலால் அவன் சர்வ நிம்மதியாக நின்றிருந்தான் பந்த் மாளிகை வாயிற்படியில்.

ஆனால் வில்வர் எதிர்பார்த்தபடி காரியம் எதுவும் நடக்கவில்லை. அந்த மனிதனை வேகமாக நெருங்கிய கிளி முதலில் அவன் தலையின் பின்புறத்தில் சிறகால் வேகமாக அடித்தது. அந்த மனிதன் கிளிக்கு அஞ்சியதாகத் தெரியவில்லை. சரேலென்று பின்னால் தனது கையைக் கொண்டு வந்து அதைப் பிடித்தான் பலமாக. பிறகு மெள்ளத் திரும்பி அதன் வாயில் எதையோ திணித்தான். அடுத்தபடியாக அதை சிவாஜி மகாராஜாவின் சிலையின் காலடியில் வைத்துவிட்டு மீண்டும் பந்தின் அறையை நோக்கிச் சென்றான்.

வில்வர் பிரமிப்புடன் நிகழ்ச்சிகளை நோக்கிக் கொண்டிருந்தான். அவனுடைய அசுரக்கிளி சிவாஜியின் காலடியில் பேசாமல் படுத்துக் கிடந்தது. அந்த மனிதனும் பந்த் இருந்த அறைப் பூட்டை இரண்டு உலுக்கு உலுக்கித் திறந்தான். அதற்குப் பதில் வேறொரு பூட்டைப் பூட்டிவிட்டு வேகமாகக் கோட்டையின் தென்புறச் சுவரிலிருந்த பீரங்கிப் பீடங்களை நோக்கி நடந்து சென்று மறைந்து விட்டான். அவன் அந்தப் பீடங்களில் மறைவதற்குச் சற்று முன்பாக அவன் முகத்தில் கோட்டை விளக்கு ஒன்றின் வெளிச்சம் விழவே அவன் முகம் நன்றாகத் தெரிந்தது.

தூரத்திலிருந்த வில்வருக்கு. அதனால் அதிர்ச்சி யடைந்த வில்வர் தனது கைக்கோலை ஊன்றிக் கொண்டு வேகமாக நடந்தான் சிவாஜி சிலையை நோக்கி. சிலையின் காலடியிலிருந்த கிளியை எடுத்துப் பார்த்தான். அது உயிருடனிருந்ததையும் அது கொல்லப்படவில்லை என்பதையும் உணர்ந்ததால் சற்றுப் பெருமூச்சு விட்டான். அடுத்து கிளியுடன் ஓடினான் பந்தின் மாளிகைக்கு. அங்கிருந்த காவலரைக் கதவைத் திறக்கச் சொல்லி உள்ளே போய் டெய்லரை எழுப்பினான்.

டெய்லர் அப்போதுதான் தூங்க ஆரம்பித்திருந்ததால் முனகினான். வில்வர் அவனை உலுக்கி, ''யூ ஃபூல் கெட் அப்'' என்று இரைந்தான். சீறினான்.

அதனால் கண் விழித்த டெய்லர் ''வாட்ஈஸ் த அர்ஜென்ஸி?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்திருந்தான்.

''ஐ ஃபௌண்ட் த மான் (நான் அந்த மனிதனைக் கண்டுபிடித்துவிட்டேன்)'' என்றான் வில்வர்.



''எந்த மனிதனை?'' தூக்கம் முழுவதும் கலையாததால் எரிந்து விழுந்தான் டெய்லர்.

''உன்னைக் கட்டவனை'' என்றான் ஸில்வர்.

''என்னைக் கட்டவனையா?'' என்று சீறி எழுந்தான் டெய்லர்.

''ஆம்.''

''யாரது?''

''காப்டன் இங்க்லண்ட்.''

''நான்ஸென்ஸ். இட் கன்னாட் பி. (அறிவீனம். அவனாயிருக்க முடியாது.)'' டெய்லர் மிகத் திட்டமாக இதைச் சொன்னான். ''வொய் ஷுட் இங்லண்ட் டபிள் கிராஸ் மி? ஹி இஸ் ஆஸ் மச் இன் திஸ் ஆஸ் வி ஆர் (இங்க்லண்ட் நமக்கு எதற்காகத் துரோகம் செய்ய வேண்டும்? இந்த முயற்சியில் நாம் எத்தனை ஈடுபட்டிருக்கிறோமோ அத்தனை அவனும் ஈடுபட்டிருக்கிறான்'' என்றும் பேசினான் டெய்லர்.

இதற்குச் சரியான பதிலெதுவும் இல்லையென்றாலும், டெய்லரின் வாதத்தில் நியாயமிருந்தாலும் ஸில்வர் சிறிது சிந்தித்தான். இங்க்லண்ட் எப்படியும் இங்குதான் இருக்கிறான். ஆகையால் அவனைப் பார்த்தாலென்ன?'' என்று வினவினான்.

அதற்கு டெய்லர் உடன்படவே இருவரும் இங்க்லண்ட் இருந்த இல்லத்தை நோக்கிச் சென்றார்கள். கதவை இடித்ததும் இங்க்லண்ட் வெளியே வந்தான் கதவைத் திறந்து கொண்டு. வாயிலில் நின்ற இருவரையும் மாறி மாறி நோக்கினான். ''எனிதிங் ஸ்பெஷல் ஹாப்பனிங்? (ஏதாவது விசேஷமாக நடக்கிறதா?)'' என்று வினவவும் செய்தான்.

டெய்லர் ஸில்வரைப் பார்த்தான். ''டெல் ஹிம் (சொல் அவனிடம்)'' என்றான்.

ஸில்வர் மலைத்தான். ''யூ டெல் ஹிம் (நீ சொல்)'' என்று கூறினான்.

''ஐ நெவர் டௌடட் ஹிம் (அவனை நான் எப்பொழுதும் சந்தேகிக்கவில்லை)'' என்றான் டெய்லர்.

அவர்கள் பேசியதன் பொருளைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாததால் இங்க்லண்ட் விழித்தான் சில விநாடிகள். பிறகு ''சொல்வதைத் தெளிவாகச் சொல்'' என்றான் டெய்லரை நோக்கி.

''சற்று முன்பு சிவாஜியின் சிலை என்னைக் கட்டது'' என்று டெய்லர் மெள்ள பேச்சைத் துவங்கினான்.

''உண்மை'' என்றான் ஸில்வர்.

''ஆனால் நீ நம்புவது கடினம்'' என்றான் டெய்லர்.

''சாட்சிக்குத் தளபதி பந்த் இருக்கிறார்'' என்று ஸில்வர் சான்று காட்டினான்.

''பிறகு பந்தைப் பக்கத்து அறையில் பூட்டினோம்'' என்று கூறினான் டெய்லர்.

''பந்த் கட்டாரா?'' இங்க்லண்ட் கேட்டான்.

''இல்லை.''

''பின் அவரை அறையில் வைத்துப் பூட்டுவானேன்?''



''அவரைக் கைது செய்து விட்டோம்.''

''ஓகோ.''

''அவரை அறையில் வைத்துப் பூட்டப் போன போதுதான் சிவாஜி கட்டார்.''

இங்கலண்ட் டெய்லரையும் வில்வரையும் மாறி மாறிப் பார்த்தான். ''நீங்கள் அதிக மாகக் குடித்திருக்கிறீர்கள்'' என்றான்.

''இல்லை'' என்றான் வில்வர். திட்டமாக.

அந்தச் சமயத்தில்தான் வில்வர் கையி லிருந்த கிளியைப் பார்த்தான் இங்கலண்ட். ''அது ஏன் அப்படிப் படுத்திருக்கிறது?''

''உனக்குத்தான் தெரிய வேண்டும்.'' இதைச் சொன்ன வில்வரின் குரலில் உக்ர மிருந்தது.

''எனக்கா?'' இங்கலண்ட் குரலில் வியப்பு இருந்தது.

''ஆம். நீதான் இதற்கு மயக்க மருந்து புகட்டினாய்'' என்ற வில்வர் ''இது பிழைக்கா விட்டால் நீயும் பிழைக்க மாட்டாய்'' என்று எச்சரித்தான்.

அந்தச் சமயத்தில் டெய்லர் சொன்னான், ''நீ எங்களை ஏமாற்றுவதாக வில்வர் அபிப் பிராயப்படுகிறான்'' என்று.

இங்கலண்டின் முகத்தில் பயங்கரமான சாந்தி நிலவியது. ''அப்படியா சொன்னான்?'' என்று சாவதானமாகக் கேட்டான்.

''ஆம்.''

'காரணம்?''

''தெரியாது. ஆனால் நீ கோட்டைச் சுவருக்கருகில் சென்றபோது உன் முகத்தில் வெளிச்சம் விழுந்தது'' என்றான் வில்வர்.

எழுத்தாளன் தருமிக்கு ஏதோ அதிசயமாய்ச்
சிந்தனைச் சிவன் கொடுத்த
சின்ன தொரு துணுக்குப்...

பட்டை தீட்டி படத்தோடு வருமென
நெஞ்சக் காண்டிராக்டர், லோயல்ட் கொட்டேஷனில்
கட்டிய கற்பனை - மாளிகை சரிய....

வாரா வாரம் சேர்ந்து வந்த
'ஏமாற்றம்' என்கிற 'ரெக்கரிங் டெபாஸிட்'
விரக்தியாக 'மெச்சூர்' ஆக....

''என்ன குற்றம் அதில்?'' எனச்
சிந்தனைச் சிவன் நெற்றிக் கண்ணைத் திறக்க
எங்கோ மூலையில் இன்று யோசித்திருக்க....
என்றோ அந்தத் துணுக்கை

''இயற்கை மணம் இல்லை''யென்று கூறி
எடிட்டர் நக்கீரர்
எறிந்து விட்டிருக்கிறாரே!

— டி. ஜி. ராஜாமணி



''அதில் என் முகம் உனக்குத் தெரிந்தது?'' இங்கலண்டின் குரலில் நிதானம் அதிகரித் தது.

''ஆம்'' என்றான் வில்வர்.

''என் முகத்தைத் தவிர வேறென்ன கண்டாய்?''

''நாங்கள் பூட்டிய பூட்டை எடுத்து விட்டு பந்தின் அறைக்கு வேறு பூட்டைப் பூட்டினாய். அதையும் பார்த்தேன்.''

''அதனால் என்ன பயன்?''

''நாங்கள் பாராதபோது பந்தை விடுதலை செய்யலாம் நீ.''

இங்கலண்ட் இதற்குப் பதில் சொல்ல வில்லை. ''வில்வர்! நீ பெரிய அறிவாளி யென்று இன்றுவரை நினைத்திருந்தேன். என் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டி யிருக்கிறது. யூ ஆர் அன் இடியட்'' என்று கூறிவிட்டுச் சரேலெனத் திரும்பி இருவர் முகத்திலும் வாயில் கதவைச் சரேலெனச் சாத்தித் தாளிட்டு விட்டான் இங்கலண்ட்.

''சரி வா பந்த் இருக்கும் கதவைப் பார்ப்போம்'' என்று கூறிவிட்டு டெய்லர் அந்த அறையை நோக்கி நடந்தான். அந்தக் கதவு பலமாகப் பூட்டியிருந்தது. மெள்ள பொழுது புலர்ந்து கொண்டிருந்ததால், கோட்டையில் நடமாட்டம் அதிகரித்துக் கொண்டிருந்தது. அதே சமயத்தில் பந்த் இருந்த அறையில் சிரிப்பு பலமாகக் கேட் டது. சிரித்தது ஒருவரல்ல. மூன்று நான்கு பேர் நகைக்கும் ஒலி திட்டமாகக் கேட்டது. வில்வர் வியப்படைந்தான், டெய்லர் அதிர்ச்சியடைந்தான்.

''நாம் ஒருவரைத்தானே பூட்டினோம்?'' என்று கேட்டான் வில்வரை நோக்கி.

''ஆம்'' என்றான் வில்வர்.

''அவர் எப்படி மூன்று நான்கு பேர்களாக ஆனார்?'' என்று கேட்டான் டெய்லர்.

அந்தச் சமயத்தில் இங்கலண்டும் புத்துடை அணிந்து அங்கு வந்து சேர்ந்தான். ''என்ன விசேஷம்?'' என்று கேட்டான்.

''உள்ளே பலர் இருக்கிறார்கள். ஒருவரை வைத்துத்தான் பூட்டினோம்'' என்று டெய் லர் விளக்கினான்.

''அப்படியானால் கதவைத் திறந்து பார்ப்பதுதானே?'' என்றான் இங்கலண்ட்.

''சாவி எங்களிடம் இல்லை'' என்றான் டெய்லர்.

''பூபூல்ஸ்'' என்று சீறிவிழுந்த இங்கலண்ட் தனது கைத்துப்பாக்கியை எடுத்துப் பூட்டில் வைத்துச் சுட்டான். பூட்டு உடைந்தது. கதவை உதைத்துத் திறந்தான் இங்கலண்ட். உள்ளே தெரிந்த காட்சி இங்கலண்டையும் டெய்லரையும் பிரமிக்க வைத்தது. வில் வரைச் சிந்தனையில் ஆழ்த்தியது. பெரிய சந்தேகம் உதயமாயிற்று வில்வரின் சிந்தை யில்.

''ஐ நௌ தி ட்ரூத்'' என்றான் வில்வர்.

''வாட் ட்ரூத்? (என்ன உண்மை)'' என்று கேட்டான் இங்கலண்ட்.

''தட் யூ ஆர் எ ட்ரெய்டர் (நீ ஒரு துரோகி என்பது)'' என்ற வில்வர் தனது மடியிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்தான் இங்கலண்டைச் சுட. (தொடரும்)

ஜிம்பாப்வே —

மக்கள் நலனுக்காக மனம் மாறிய ராபர்ட் முகாபே

.கே.ஸ்ரீனிவாசன்

பிரிட்டிஷாரைப் போல அடக்கு முறையில் வெற்றி கண்ட சாம்ராஜ்யவாதிகள் இல்லை. அவர்களைப் போல எதிரியை இறுதியில் இளக வைப்பவர்களும் இல்லை. சுமார் 150 ஆண்டுகள் இந்தியாவில் துப்பாக்கியையும் குண்டாந்தடியையும் நம்பி ஆண்ட அதே வெள்ளையரின் பிரதிநிதிதான் சுதந்திர இந்தியாவின் கவர்னர் — ஜெனரல் ஆனார். ஆம், லார்ட் லூயி மௌண்ட் பாட்டனைத் தான் குறிப்பிடுகிறேன்.

இன்று ஜிம்பாப்வே ஆகிவிட்ட நாடுதான் வெள்ளையர்களின் ரொடீஷியா. செப்பு உலோகம் மண்டிய நாடு. சமீப காலம்வரை ஸ்ரீ அயான் ஸ்மித் ரொடீஷியா, வெள்ளையரின் ஆட்சியில்தான் இருக்கும் என்று மார் தட்டி வந்தார். ஆப்பிரிக்கக் கண்டத்தில் காட்டுத் தீயைப் போலப் பரவி வந்த சுதந்திர வேகம் ஸ்ரீ ஸ்மித்துக்கு எவ்வித பாடத்தையும் கற்பிக்கவில்லை.

ஜிம்பாப்வேயின் ஜனத்தொகை 27 லட்சம். இதை இரண்டு லட்சம் வெள்ளையர் ஆண்டு வந்தனர். செம்புக் கனி சுரங்கங்கள், பொன் போட்டால் பொன் விளையும் செழிப்பான பூமி வெள்ளையர்களுக்கு மட்டுமே சொந்தம். கறுப்பர்கள் கொத்தடிமைகள். ''ரொடீஷியாவில் கறுப்பர்கள் ஆட்சி என்பது மனத்தால்கூட நினைக்க முடியாத ஒன்று'' என்று ஸ்ரீ ஸ்மித் சொன்னதுடன், கறுப்பர்களுடன் மோதவும் தயாராகிவிட்டார்.

சென்ற ஏழு வருடங்களாக இந்த நாட்டில் நிகழ்ந்த யுத்தம் கொரில்லா யுத்தம். யார் துணைவன், யார் பகைவன் என்று தெளிவாகச் சொல்ல முடியாததொரு நிலை.

இந்த யுத்தம் ஆப்பிரிக்கக் கண்டத்தில் மற்ற நாடுகளையும் பீடித்தது. குறிப்பாக ஜாம்பியா, டான்ஜானியா ஆகிய நாடுகள் ரொடீஷியக் கொரில்லாக்களுக்கு ஆதரவும் ஆயுத சப்ளையும் பயிற்சியும் கொடுத்தன. பிரிட்டிஷார் ஒவ்வொரு வீட்டையும் ஒரு கோட்டையைப் போல் முள் கம்பி, இயந்திர பீரங்கி, வேட்டை நாய்களை வைத்துப் பலப்படுத்தினார்கள். கொரில்லாக்கள் அனாயாசமாக ஜாம்பியாவில் பகலில் தங்கி இரவில் ரொடீஷியாவுக்குள் புகுந்து துவம்சம் செய்தார்கள்.

அந்தக் கொரில்லாக்கள் யார்? ஒரு சாரார் ராபர்ட் கேப்ரியல் முகாபே என்பவரின் தலைமையில் இயங்கினார்கள். மற்றவர்கள் ஜோஷுவா என்கோமோ என்பவரின் வழி நடந்தவர்கள். இன்று 55 வயதாகிவிட்ட முகாபே ஒரு தச்சரின் மகன். தென் ஆப்பிரிக்காவில் ஹார்கோட்டை சர்வ கலா சாலையில் கல்வி பயின்றவர். இவர் கானா நாட்டில் இருந்தபொழுது ஸாலி என்பவரை மணந்தார். 1960ல் இவர் ரொடீஷியாவுக்கு வந்து அரசியலில் இறங்கினார். முதலில் என்கோமோவின் ஜிம்பாப்வே ஆப்பிரிக்கத் தேசிய யூனியன் கட்சியில் காரியதரிசியாக இருந்தவர்.

முகாபே பத்தரை மாற்று மார்க்ஸிஸ்ட். சீனா அவரை மிகவும் கவர்ந்தது. ஆனால் சீனா அதிக ஆயுதங்கள் சப்ளை செய்ய முடியாததால் இவர் ரஷ்யாவின் உதவியைப் பெற்றார். ஆனால் ரஷ்யர்கள் இவர் நம்பத் தகுந்தவர் அல்ல என்று முடிவு செய்தார்கள்.

1964ல் முகாபே கைது செய்யப்பட்டார். 1971ம் ஆண்டு வரை சிறையில் இருந்தார். பின்னர் பிரதமர் அயான் ஸ்மித் கண்ணில் கூட படவில்லை. அவ்வளவு தீவிர கொரில்லா தளகர்த்தர் ஆனார்.

ஏழு வருட கொரில்லாப் போரில் ரொடீஷியாவின் பொருளாதாரம் சீர்குலைந்தது. ஐ. நா. பொருளாதார பகிஷ்காரம்



அந்நாட்டைப் பாதித்தது. ரொடீஷிய மக்கள் சுதந்திரம் அடைவது என்ற வீரத்துடன் போராடவே பிரிட்டிஷார் அந்நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கி விட்டனர்.

இறுதியில் பிரிட்டிஷாரே லார்ட் ஸோம்ஸ் என்பவரைக் கவர்னராக அனுப்பிக் கொரில்லாப் போருக்கு முடிவு காணச் செய்தார்கள். லார்ட் ஸோம்ஸ் பாரபட்சமற்ற தேர்தல் நடத்துவது என்றும் அதில் வெற்றி காண்பவர்கள் கையில் அதிகாரம் ஒப்படைக்கப்படும் என்றும் அடிப்படையை விளக்கினார். ஒழுங்காக நடந்த தேர்தலில் முகாபே மாபெரும் வெற்றி யடைந்தார். எண்பது ஸ்தானங்களில் 57 அவருடைய கட்சிக்குக் கிடைத்தது.

இன்று ஜிம்பாப்வே ஆகிவிட்ட நாட்டில் பிரச்னைகளுக்குக் குறைவில்லை. இது காரணமாகத்தான் மார்க்ஸிஸ்ட்வாதி முகாபே நடைமுறை அரசியல் மிதவாதியாகிவிட்டார். முதலாளி அமைப்பைத் தகர்த்து நிலங்களும் தொழில்களும் நஷ்ட ஈடு இல்லாமல் அரசுடைமையாக்கப்படப் போவதாகச் சொன்ன முகாபே இன்று ஜிம்பாப்வேயில் பொருளாதாரத்தைக் கைதூக்கி விடுவதைத் தம் முக்கிய கடமையாகக் கருதுகிறார்.

''பகைவனுக்கருள்வாய்'' என்பது முகாபேயின் அரசியல் சித்தாந்தத்தில் இன்று இடம் பெற்றுள்ளது. தம் அரசியல் போட்டியாளரான என்கோமோவுக்கு உள்துறை அமைச்சகம் கொடுத்து விட்டார். எந்த அயான் ஸ்மித் கறுப்பர் ஆட்சி கிடையாது என்றாரோ, அவருக்குக் கூட மந்திரி சபையில் இடம் கொடுக்கலாம் என்பதற்குச் சூசகங்கள் உள்ளன.

ஆதியில் மகாத்மா காந்தியின் அரசியல் சித்தாந்தத்தால் வசீகரிக்கப்பட் முகாபே மொஜாம்பிக் நாட்டில் ஒரு பெரிய பாடம் கற்றார். அங்கு தீவிர மார்க்ஸிஸ்ட் திட்டத்திற்கு அஞ்சி வெள்ளையர்களும், தொழில் நுணுக்க விற்பன்னர்களும் அந்நாட்டை விட்டு வெளியேறினர். அந்தத் தவறு ஜிம்பாப்வேயிலும் நிகழக்கூடாது என்பதால் தான் மிதவாதியாகி விட்டார் முகாபே.

ஜிம்பாப்வேயில் பிரிட்டிஷாரின் சாணக்கியம் வெற்றி பெற்றதால் ரஷ்யர்களுக்கு ஏமாற்றம். நாட்டை இரண்டு செய்து உள்ளே புக முடியவில்லை. அமெரிக்கா ஜிம்பாப்வேக்கு ஏராளமாய்ப் பொருளாதார உதவி கொடுக்கத் தயாராக இருக்கிறது. இது நல்ல திருப்பம்.

ஜிம்பாப்வே சுதந்திர நாடான பிறகு, தென் ஆப்பிரிக்கா மட்டும் தன் உளுத்துப் போன வெள்ளை இனக் கொள்கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்க முடியாது. இது சர்வ நிச்சயம்.



இது சத்தியம்

தமிழழகன்

நிறம்பெருக் கட்சி தெளிவிலாக் கொள்கைகள்
தேடி நடப்பதில்லை, - யார்க்கும்
பரம்பரை என்று பலருக்கும் பின்னும்
பதுங்கிக் கிடப்பதில்லை - என்றும்
உரம்பெறும் லட்சியம் உன்னத நோக்காய்
உலகைப் படைப்பவன் நான் - நாடி
நரம்புகள் மேல், அந் நவயுகம் விம்ம
நலிவும் துடைப்பவன் நான்.


பட்டம் பதவி பகட்டுகள் என்றிடும்
பாதைமேற் செல்வதில்லை – பணம்
கொட்டும் துறையும் குறுக்கு வழியுமே
கொள்கையாய்ச் சொல்வதில்லை - செயல்

கட்டுத் திசைகளும் ஏறிக் கெலிக்க முன்
னேற்றம் விளைப்பவன் நான் - மக்கள்
வட்டங்கள் மத்தியில் வந்(து) அவர் வாழ
வரலா நிறைப்பவன் நான்.

சுருங்கிய பேச்சு சுயநல மூச்செனச்
சுற்றிச் சுழல்வதில்லை - முகம்
நெருங்கிய துதிகள் நீசச் சதிகள்
நினைத்தும் உழல்வதில்லை - மன
ஒருங்குயர் பண்பில் ஒழுங்குயர் செங்கையில்
உள்ளொளி நித்தியம் நான். - மக்கள்
மருங்கினில் இயாகமாம் மாணிக்க யோகம்
மலர்விக்கும் சத்தியம் நான்.



கிறுகு பதில்கள்!



✠ சுதா மணிமேகலை, வேலூர்

கே. துரியோதனனின் தோழன் கர்ணனைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: கர்ணன் காலத்தில் நான் வாழவில்லை. குறைந்தபட்சம் அவனாவது என் காலத்தில் வாழ்ந்திருக்கலாம். அதுவுமில்லை. கர்ணன் தானம் செய்ததால் மட்டும் பெயர் பெறவில்லை. தானம் செய்வதிலும் ஒரு முறையைக் கடைப்பிடித்து வந்தான். கொடுக்கும்போது தன் கை கீழிருக்க, பெறுபவர்களைத் தன் கையிலிருந்து எடுத்துக்கொள்ளச் சொல்வானாம். தானம் பெறுபவர்களின் கை தாழ்ந்திருக்க விட மாட்டானாம்.

✠ ஆர். மார்க்கண்டன், விழுப்புரம்

கே. விருந்தோம்பலைப் பற்றி வள்ளுவர் சிலாகித்துக் கூறியிருக்கிறார். விலைவாசிகள் உள்ள நிலைமையில் அதைப் பின்பற்ற முடியுமா?

ப: முடியாதுதான். ஆனால் இந்த விலைவாசிகள் உள்ள நிலையில் சினிமாக்களுக்குப் போக முடியும். வேளைக்கொரு டிரஸ் மாற்ற முடியும். பஸ்ஸில் போகக் கூடிய இடங்களுக்குக்கூட டாக்சியில் போக முடியும். பானைத் தண்ணீரில் தீரக் கூடிய தாகத்தைப் பழ ஜூஸ் சாப்பிட்டுத் தீர்க்க முடியும்....

✠ சசி, சென்னை-35

கே. டெல்லி கணேஷ் பற்றி?

ப: 'பசி' நடிகரான கணேஷ் 'பிஸி' நடிகராகத் தகுதியுள்ளவர்.

✠ ஆ. சீனிவாசன், திருச்செந்தூர்

கே. பத்து வரை எண்ணியும் முன் கோபம் அடங்க மாட்டேன் என்கிறதே?

ப: பத்தாயிரம் வரை எண்ணிப் பாருங்கள். (நிற்க, உலகிலேயே சந்தேகப் பிறவி நீங்களோ என்று எண்ணுகிறேன். ஒரு நோட்டுப் புத்தகம் முழுவதுமா கேள்விகளை எழுதி அனுப்புவது?)

✠ ஸ்ரீ சாந்தி, மதுரை-1

கே. என் தம்பிக்கு நல்ல அன்பும் மரியாதையுடன் பேசும் பழக்கமும் உண்டு. இருந்தும் என் தாயார் எப்பொழுதும் கோபமாகச் சீறி விழுந்து பேசுகிறாளே, இதற்கு என்ன செய்வது?

ப: உங்கள் பெயரைப் பலதடவை உரக்கச் சொல்லுங்கள் உங்கள் தாயாரின் முன்னே! பலன் ஏற்படும்.

✠ கலைநிலவன், சென்னை-35

கே. சமீபத்தில் ரசித்துப் படித்த நாவல் எது?

ப: வாஸி எழுதிய 'அது — அதில் இல்லை.'

✠ சரோஜா ராஜாராமன், சென்னை-35

கே. கொசுக்களைப் பிடிக்கச் சென்னையில் பிரம்மாண்ட யந்திரம் வந்ததாமே..?

ப: யந்திரம் வந்த விஷயம் தெரிந்து, நாலைந்து கொசுக்கள் அதைத் தூக்கிக் கொண்டு போய்க் கடலில் போட்டு விட்டனவாம்.

✠ எம். எ. தனராஜ், திருப்பூர்-4

கே. எம். காம். படித்தவரின் ஆங்கிலத்தில் நிறைய தவறு இருந்ததாகக் கூறுகிறீரே, எம். காமில் ஷேக்ஸ்பியரையும் மில்டனையுமா சொல்லித் தருகிறார்கள்?

ப: தமிழ்ப் பத்திரிகைக்குக் கேள்வி எழுதி அனுப்பும்போது ஆங்கிலத்தில் எழுத வேண்டிய அவசியமே இல்லை. மேலும் ஒரு சின்னக் கேள்வியைச் சரியான ஆங்கிலத்தில் கேட்க ஷேக்ஸ்பியர் படித்திருக்க வேண்டியதில்லை. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இங்கிலீஷ் லிட்டரேச்சர் படித்தவர்தான் ஆங்கிலத்தில் எழுதலாம் என்றாகிவிடும்.

✠ ராஜா கே. சுவாமி, சென்னை-17

கே. கிணறு வெட்ட பூதம் புறப்படும் என்கிறார்களே, கிணற்றிலா பூதங்கள் இருக்கின்றன?

ப: பூதம் என்பது பஞ்சபூதங்களான நிலம், நீர், தீ, வாயு, ஆகாயம் ஆகியவைகளைக் குறிக்கும். கிணறு வெட்டும்போது நிறைய மண் வெளியே வருகிறது. சில சமயம் ரசாயன வாயுக்கள் வெளியாகி, அவை தானே தீ பிடித்துக் கொள்ளும். வெட்டிய கிணற்றில் நீர் ஊற்றெடுக்கும். அந்த நீரில் ஆகாயம் பிரதிபலிக்கும்.

பரிசு பெறுபவர்:

ஆர். மார்க்கண்டன்
397, தெற்கு ரயில்வே காலனி,
விழுப்புரம் - 605 602

அவன் அவள் அரிவாள் மீசை

கமலா நடராஜன்

முதுகு டாராகக் கிழிந்திருந்தது.

சூரியாவுக்கு அழுகையும் ஆத்திரமும் போட்டி இட்டன.

'என்னமாய்க் கிழித்திருக்கிறான் பாவி.. சீ...இல்லே. அந்த டோபி.'

இதைக் கொண்டு போய் அந்த லாண்டரிக்காரன் முகத்தில் எறிய வேண்டும். நாய் படாத பாடுபட்டு, நாற்பத்தைந்து ரூபாய் மிச்சப்படுத்தித் தைத்த அந்தப் பாலியஸ்டர் சட்டைக்குப் பதில் என்ன சொல்கிறாய் என்று கேட்க வேண்டும்.

சட்டையை ஒரு பையில் திணித்துக்கொண்டான்.

இப்பொழுது நேரமில்லை. சாயங்காலம் ஆபீசிலிருந்து திரும்பும் போது அப்படியே 'சுஜாதா டிரை க்ளீனர்'க்குப் போய் அவனை....

''ஏன் சார் நீங்க சுமார் எவ்வளவுகாலமா எங்க லாண்டரில சலவைக்குப் போடறீங்க?''

''நாலு வருஷமா.''

''இதுவரை நமக்குள் மனஸ்தாபம் உண்டா?''

''இல்லே.''

''நீங்க தரவேண்டிய பாக்கி சாக்கின்னு ஏதாவது இருக்கா?''

''அதுவும் இல்லே.''

ஒரு காரணமும் இல்லாமல் உங்க சட்டையை வேணும்னு நாங்க ஏன் சார் கிழிக்கணும்?''

சூரியா திணறிப் போனான்.

'நாம் அவனை நாலு வார்த்தைகள் கேட்டுவிட வேண்டும் என்று வரப்போக அவன் நம்மை நாற்பது வார்த்தைகள் கேட்பதும், நாம் அதற்குப் பதில் சொல்லிக்கொண்டு நிற்பதும்' —

''அப்போ இந்தச் சட்டையின் முதுகு எப்படிக் கிழிந்தது?''

''துணி நாள்பட்டதா இருக்கலாம்.''

''ஓகோ.''

''அல்லது மட்டமானதாகக்கூட இருக்கலாம்.''

அப்படியே பாய்ந்து அவன் குரல்வளையை நெரிக்க வேண்டும் போல தோன்றியது சூரியாவுக்கு.

ஆனால் அந்த அரிவாள் மீசையைப் பார்த்ததும் சிறிது அடங்கிப் போனான்.

சட், இவனோடு நமக்கென்ன பேச்சு?

''உன் முதலாளி எப்போ வருவார்?''..

''அவர் என்னிக்கு சார் கடைக்கு வந்திருக்கார். உங்களைப் போல வர்ரவங்களுக்குப் பதில் சொல்லி அனுப்பத்தானே என்னைப் போல ஒருத்தனைச் சம்பளம் கொடுத்து வச்சிருக்கார். என்னமோ என் தலைஎழுத்து.''

ஏதோ தன்னுடைய துணி கிழிந்து போனவனைப் போல அரிவாள் மீசை அலுத்துக் கொண்டான்.

இன்னும் சிறிது நேரம் அங்கே நின்றிருந்தால் நிச்சயம் அழுதே விடுவோம் என்பதை உணர்ந்த சூரியா பேசாமல் படிகளில் இறங்கி நடந்தான்.

அன்றைக்கு எடுத்த முடிவுதான். இனி மழைக்குக்கூட அங்கு ஒதுங்குவதில்லை என்று!

ஆனால்....

அடுத்த சில தினங்களுக்குள் அப்படி ஒரு கன மழை பிடித்துக் கொள்ளுமென்றோ மெயின் பஜாரில் ஷாப்பிங்கிற்காக வந்திருந்த தான், குடை எடுத்து வராத குற்றத்திற்காக அதே கடையில் அடைக்கலம் புக நேரிடுமென்றோ அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

கடைக்குள் ஏறியவன் கடைக்கண்ணால் கவனித்தான். அரிவாள் மீசை அங்கிருக்கிறானா என்று .

யாரையும் காணோம்.

''என்ன சார் வேணும்?''

குன்னக்குடி பிடில் வாசித்தார்.

''ஒன்றுமில்லே.... இங்கே ஒரு அரிவாள்.''

''சாரி, இரும்புக்கடை எதிர்த்தாற்போல் இருக்கு. இது சலவைக்கடை.''

''ஹிஹி...எக்ஸ்யூஸ்மி, நீங்க இங்கேபுதுசா வேலைக்குச் சேர்ந்திருக்கீங்களா?''

''ஆமாம்.''

''ஏற்கனவே இங்கு ஒரு துணிவிழுங்கி துச்சாதனன் இருந்தாரே?''

''யாரைச் சொல்றீங்க?''

''உங்களுக்கு முன்னால் இங்கே வேலை பார்த்தவர்.''

''அவரா? அவர் மேல் ஏகப்பட்ட கம்ப்ளெய்ண்ட். வேலையைவிட்டு நீக்கிட்டாங்க.''

''ரொம்ப சந்தோஷம்.''

''உங்களுக்கு என்ன அதில் சந்தோஷம்?''

''இனிமேல் உங்க கதைகளையெல்லாம் சொந்தப் பெயரிலேயே எழுதுங்க...''

''ஏன்? புனை பெயரில் எழுதினால் என்ன''?

''பெயராவது சொந்தமாயிருக்கட்டுமென்னு தான்!''

- ஊத்துக்கடவு ரவி



''அவருடைய அஜாக்கிரதையினுல் அதிகம் பாதிக்கப்பட்டவன் அடியேன்தான். மூன்று சட்டைகள் முதுகு கிழிந்தும்; சந்தனம், வெளிர் நீலம் கிரே கலர் பேண்ட்டுகள் பிழூர் ஒயிட் கலரிலும், ஒற்றைக் கையுடன் மட்டுமே ஒரு பனியனும் இப்படி வரிசையாகத் திரும்பி வந்து கொண்டிருந்தால் வாடிக்கையாளன் கதி என்ன ஆவது?''

''ஓ!''

அவள் உதடுகள் குவிந்த அந்த அழகில் அவன் ஆடிப் போனுன்.

''இங்கு வேலை பார்த்த சில தொழிலாளிகளின் தவறு அது. அதை எல்லாம் முதலாளியிடம் தெரிவியாமல் அலட்சியமாக நடந்து கொண்டதால்தான் அவரையும் அந்தத் தொழிலாளிகளையும் வேலையை விட்டு நீக்கி விட்டார்கள். இனி அதைப் போல எந்தத் தவறும் நடவாது. நீங்கள் நம்பகமாகத் துணிகளைப் போடலாம்.''

"ஏண்டா சூரி, என்னடா இது போன மாசத்தைவிட இந்த மாசம் லாண்டரிச் செலவு நாலு பங்கு அதிகமா இருக்கு. அப்படி என்ன அடிக்கடி சலவைக்குப் போடுறே'' — பார்வதி அங்கலாய்த்தாள்.

''அம்மா உனக்கு ஒன்னும் தெரியாது. இப்போ புதுசா வந்திருக்கிற மானேஜர் எல்லா விஷயத்திலுமே டீசண்டா இருக்கணும்னு எதிர் பார்க்கிறவர். நானே பிரமோஷனை எதிர்பார்த்திட்டிருக்கேன்.''

''அதுக்காக அத்தனை துணிகளையும் அர்ஜண்ட் சலவையிலேயே போடணுமா? தினம் ஆபீசுக்குப் போற மாதிரி லாண்டரிக்குப் போறதும் உனக்கு ஒரு வேலையாப் போச்சே?''

''அதெல்லாம் பார்க்க முடியுமா அம்மா, சரி சரி இங்கே நான் வச்சிருந்த துணிமூட்டை எங்கே?''

''எந்த மூட்டைடா?''

''உன் புடவைங்க மூணு ஒரு பையிலே போட்டு வச்சிருந்தேனே?''

''அட கிரகச்சாரமே உனக்கு லாண்டரி பைத்தியம் பிடிச்சிருக்குங்கிறதுக்காக எவனெவனே தொட்டுத் துவைச்ச துணி எல்லாம் நான் உடுத்த மாட்டேன். நானே துவைச்சு, நானே உடுத்தினுதான் எனக்கு நிம்மதி. வச்சுட்டுப் போய்ச் சேர்'' — பார்வதி கண்டிப் போடு சொன்னுள்.

அவன் முணுமுணுத்துக் கொண்டே வெளியேறினுன்.

பன்னிரண்டாம் நம்பர் பஸ்ஸில் பயங்கரக் கூட்டம். எப்படியோ தொத்தி இடம் பிடித்தான் சூரியா.

''சதக்''.

யாரோ காலில் பலமாக மிதித்து விட நிமிர்ந்து பார்த்தான்.

அரிவாள் மீசை!

அடுத்தவன் காலை அவ்வளவு பலமாக மிதித்தவன்; எள்ளளவு வருத்தமின்றி எருமையைப் போல நின்றுன்.



எரியும் நெருப்பில் பெட்ரோல் விடுவது போல் லேசாகச் சிரிக்க வேறு செய்தான்.

''ஹி.:..ஹி.. நம்ம கடையிலேதான் அடிக்கடி பார்க்கிறேனே.''

'மடையா, எதடா உன் கடை? உன்னைத்தான் தொலைத்துத் தலைமுழுகி விட்டார்களே? அது என் காதல் தெய்வம் கட்டமுருச்சிலே, கனவுக்கன்னி உலா வரும் கோயில், அங்கு நீ இனி அடி எடுத்து வைக்க முடியாது?' சொல்ல நினைத்து முடியாமல் விழுங்கினேன்.

''என்ன சார், இப்போ துணி எல்லாம் ஒழுங்கா வந்து சேருதா. என்னவோ என் அலட்சியத்தினலேதான்பிலனசே பூடிச்சுன்னு அந்த முதலாளி அன்னிக்கு சத்தம் போட்டானே. ஜோரா ஒரு குட்டியைக் கொண்டாந்து ஷோ கேஸ்லே நிறுத்திட்டா எல்லாம் சரியாப்பூடும்னு நினைப்போ, பார்க்கிறேன்'' மீசையை ஒதுக்கிக் கொண்டான்.

'அந்த மீசையைக் கொளுத்தினு அது எரியும் போது எவ்வளவோ அழகா இருக்கும்! என்ன செய்வது. இப்படித்தான் சில நேர்மையான விருப்பங்கள்கூட மனித வாழ்வில் நிறைவேற மாட்டேனென்கிறது' — சூரியா பெருமூச்சு விட்டான்.

''என்ன சார் பேசாமலேயே வர்றே. இன்னும் கோபம் தணியலியா. பழசை எல்லாம் உடு. அந்தப் பொண்ணுகிட்டே சொல்லி வை. அவுங்க முதலாளி என்னமோ நான்தான் துணிகளை எல்லாம் முழுங்கிட்டதா நினைச்சு மூணு மாசச் சம்பளம் மூந்நூறு ரூபாயைப் புடிச்சுக்கிட்டான். உடுவேனு கம்மா? பாரு ஒரு நாளைக்கு அந்தக் கடையிலேயே வந்து கலாட்டா பண்ணி...''

சூரியாவுக்குத் 'திக்' என்றது.

மறுநாள் — நடந்ததை ரிகார்டு வைத்தான் சூர்யா.

''அப்படியா சொன்னுன்?''

''அப்படியேதான் சொன்னுன்.''

அவன் பயத்தைக் கண்டு அவன் சிரித்தான்.

''எனக்குக் கிலியாகத் தெரியும் விஷயம் உங்களுக்குக் கேலியாகத் தெரிகிறதா?'' — கேட்டான்.

''நீங்க ஒன்னும் கவலைப்பட வேண்டாம். எங்க முதலாளி, அவனே நீங்களோ நினைப்பது போல அவ்வளவு சாதாரணமானவரல்ல.''

இந்தச் சமயத்தில் பூஜை வேளையில் கரடி புகுந்த கதையாக.... 'தொப்' என்று ஒரு அழுக்கு மூட்டை சூரியாவின் தலைக்கு மேலாகச் சந்திராவின் எதிரிலிருந்த மேசையில் விழ, 'குப்' என்று அதனின்று வியர்வை வாடை கிளம்பியது.

சூரியா திரும்பிப் பார்த்தான். அவனே தான் அந்த அரிவாள் மீசைக்காரனேதான்.

''அர்ஜன்ட். எப்போ கிடைக்கும்?'' அவன் இருப்பதையே கவனியாதவன் போல் அவளிடம் கேட்டான்.

அவள் பில்லைப் போட்டுக் கொடுத்து விட்டுத் துணிகளுக்கு டேகை முடிந்தபடி சொன்னுள் ''நாளை மாலை.''

''நாளைக்குக் கடை திறந்து விடுவீர்களா?''

''ஏன்!''

''ஊரெல்லாம் 'பந்த்'தாமே.''

அவள் கொஞ்சம் யோசித்தாள். ''மற்ற கடைகளை அனுசரித்துத்தான் செயல்படுத்துவோம்.''

அவன் விஷமமான ஒரு சிரிப்போடு ரசீது பெற்றுக் கொண்டு போனுன்.

அவள் மூட்டையை முடிந்து மூலையில் போடும் வரை முகத்தைச் சுளித்தபடி இருந்தான் சூரியா.

பிறகு கேட்டான். ''இப்படி ஒரு வேலையை இஷ்டப்பட்டுத்தான் பார்க்கிறீர்களா?''

''எட்டுக் கடைகள் இருக்கிறது எங்கள் முதலாளிக்கு. இந்தக் கிளைக்குத்தான்ரொம்பவும் கெட்ட பெயராகி விட்டது. அதுவும் இவனுல்தான். நான்தான் அதைப் பொறுப்போடு காப்பாத்தியாகணும்.''

''அப்படி என்ன உங்கள் முதலாளியிடம் உங்களுக்கு அக்கறை?'' — அவன் சிறிது கோபமாகவே கேட்டான்.

அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் பதில் அவளிடமிருந்து வெளிப்பட்டது: ''என்ன செய்வது, நான் அவருடைய ஒரே மகள் ஆயிற்றே?''

காலை மணி 8.30.

'பந்த்' பிசுபிசுத்துக் கொண்டிருந்தது!

ஒரு சில உதிரிக் கட்சிகள் ஒன்றுசேர்ந்து செயல்படுத்த இயலாத பல கோரிக்கைகளை முன்வைத்து, அதன் காரணமாக வேண்டுகோள் விடுக்கப்பட்ட கடையடைப்புக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

அத்துடன் இன்னும் ஐந்தாறு தினங்களில் இந்துக்களின் ஒரு முக்கிய பண்டிகை வேறு.

எனவே ஊரில் முக்கால்வாசிக் கடைகளுக்கு மேல் திறக்கப்பட்டு விட்டன.

மற்ற சிலரும் இன்னும் சிறிது நேர நிலவரத்தைப் பார்த்துக் கொண்டு கடைகளைத் திறந்து விடக் காத்துக் கொண்டிருந்தனர்.

வக்கீல் மனைவி: ''அந்த ஓட்டல் முதலாளி வழக்கை ஒத்தி வாங்கிண்டே வாங்கோ. சீக்கிரம் முடிக்கப்படாது ஆமா!''

வக்கீல்: ''ஏன் அப்படிச் சொல்றே கேஸ் முடிஞ்சாதானே பீஸ்பணம் வரும்?''

வ.மனைவி: பணம் கிடக்கு இதுமாதிரி அல்வாவும், குலாப்ஜானும், ஜாங்கிரியும் யார் அப்புறம் கொடுத்தனுப்புவா?'' -டி. எஸ். சீதாராமன்




PHILIPS

பிலிப்ஸ்

புதிய பிலிப்ஸ் 3-பாண்டு

கமாண்டர்

இயந்திர வடிவிலே எழிலோங்கியது



ரூ. 495/-*

- இணையற்ற எர்கோனமிக் அமைப்பு
- பாண்டு தேர்வுக்கும் ஆன்-ஆஃப் வசதிக்கும் டாகிள் ஸ்விட்ச்கள்
- செட்டினுள்ளே ஓர் அடாப்டர் யூனிட்டைப் பொருத்தி மின்சாரத் திற்கு எளிதில் மாற்றலாம். (அடாப்டர் மாடல் 3012. ரூ. 60*)

* சில்லறை விற்பனை உச்ச விலை, எக்ஸைஸ் வரி உள்ளிட்டது. மாநில விற்பனை வரி மேலும் இதர தல வரிகள் தனி.

உன்னதமானவற்றை உங்களுக்கே வழங்க விரும்புகிறோம். இந்தியாவில் 50 ஆண்டுகள்

CASPR-726-203 TM

போலீஸ் வேன் ஒன்று கடைக்காரர்களுக் குப் பாதுகாப்பளிக்கும் வகையில் அரை மணிக்கொரு முறை இங்கும் அங்கும் பறந்து கொண்டிருந்தது.

கடையினுள் சந்திரா ஏதோ காரியமாக இருந்தாள்.

திடீரென்று அந்தக் கட்சிகளைச் சேர்ந்த ஒரு சிறு கூட்டத்தினர் கடைக்காரர்களைக் கடைகளை மூடச் சொல்லி வேண்டுகோள் விடுத்து வந்து கொண்டிருந்தனர்.

'தடியன்கள் பத்து பேர். தனியாக நான். இதுபோன்ற சமயத்தில் அடங்கிப் போய் விடுவதுதான் புத்திசாலித்தனமோ' என்று அவள் சிந்திக்கத் தொடங்கும் போது....

''என்ன இங்கே கலாட்டா?'' — கதாநாய கியை வில்லன் கற்பழிக்க நெருங்குகையில்



''இதோ போறாங்களே, இவங்க மூணு பேரும் சேர்ந்து ஒரு 'திரி ஸ்டார்' ஹோட்டல் ஆரம்பிச் சிருக்காங்களாம்!''
''யார் யாரு?''
''சேஷாத்திரி, கருடாத்திரி, தோத்தாத்திரி!''
- வேணு

கதாநாயகன் தோன்றிவிடும் சினிமாக்காட்சி போல் — சூரியா வந்து நின்றான்.

பத்து யானை பலம் வந்தது சந்திராவுக்கு! ஆனால் அவனுக்கோ...?

சமயத்தில் வந்து சேர்ந்தானே தவிர சட் டைக்குள் உடம்பு சடசடத்துக் கொண் டிருந்தது.

''நீயே பாரு சார். ஊரோடு ஒத்துப்போக வேணும். இந்தப் பொண்ணு நீ சொன்னா தான் கேட்கும்! சொல்லு. ஏம்ப்பா நீங்க நீங்க, நாமளே கூட இருந்து கடையைச் சாத் திட்டுப் போகலாம்.''

அரிவாள் மீசையும் மற்றவர்களும் பல கையை அடைக்கத் தொடங்கினர்.

சந்திரா, சூரியாவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

கௌரவப் பிரச்னை வந்து விட்டது!

சூரியா துணிந்து விட்டான்.

''யூ பிளடி ஸ்கவுன்ட்ரல். போடா வெளியே.''

கண்களை இறுக மூடிக் கொண்டு, கைகளால் அரிவாள் மீசையின் முகத்தில் பலமாக ஒரு குத்து விட்டான்.

அரிவாள் மீசையைச் சேர்ந்த ஆட்கள் அருகிலிருந்த கடையில் நுழைந்து சோடாப் புட்டிகளை எடுத்து வீசத்தொடங்கினர்.

'படார் படார்' என்ற சப்தத்துடன் பாதை எல்லாம் கண்ணாடிச் சிதறல்கள். எங்கிருந்தோ பறந்து வந்த கல், கண்ணாடி பீரோவில் பட்டுக் 'களீர்' என்று உடைந்தது.

ஒரே தாவலில் மேஜைமேல் ஏறிப் பிறகு பரணில் பாய்ந்து பதுங்கிக் கொண்ட சூரியா குனிந்து பார்த்தான்.

சந்திரா அவன் உட்கார்ந்திருந்த இடத் திற்கு நேர் கீழே சர்வாங்கமும் நடுங்க நின்று கொண்டிருந்தாள்.

சே! முட்டாள்தனம். அவள் ஒருத்தி இருப்பதையே இவ்வளவு நேரம் மறந் —

மறுபடியும் ஒரு கல்.

மீண்டும் களீர்.

சூரியா சுறுசுறுப்படைந்தான்.

சலவைக்கு வந்திருந்த துணிகள் பெரும் பெரும் மூட்டைகளாகக் கட்டப்பட்டுத் தன் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த் தான்.

அவற்றில் ஐந்தாறு மூட்டைகளை அவசர மாகப் பிரித்து பயத்திலால் ஒடுங்கி உட் கார்ந்த சந்திராவின் தலையில் உதறினான்.

அடுத்த விநாடி! ஒரு பெரிய துணிக்குவிய லுக்குள் அவள்!

அவளை ஓரளவு கல்லெறியிலிருந்து காப் பாற்றி விட்டதாக எண்ணியவன்; தன்னைக் காத்துக் கொள்ளத் தவித்த போது —

''யோவ், போலீஸ் வேன் வருது'' —அரி வாள் மீசை குரல் கொடுத்தான்.

கண் இமைக்கும் நேரத்தில் கடைவாசலில் நின்ற கூட்டம் பல திசைகளை நோக்கிப் பறந்தது.

ஆனால், போகிற போக்கில் அரிவாள்மீசை எறிந்த ஒரு கல் எவ்வளவோ சாமர்த்தியமாக அவன் விலகியும்கூட அவனது இடது புருவத் திற்கு மேல் நெற்றியில் பட்டுத் தலையிலிருந்து ரத்தம் பெருகித் தலைகுப்புற அவன் விழுந் தான்.

ஆஸ்பத்திரி. கண் விழித்த சூரியா சகல வசதியோடு, கட்டில் ஒன்றில் படுத்திருப்பதை உணர்ந்தான்.

ஆனால் தலையில் மட்டும் ஒரே 'விண்விண்.'

''டேய், சூரி; என்னைத் தெரியுதாடா?'' பார்வதி கதறத் தொடங்கினாள்.

உலகமே சூன்யமாக அவனுக்குப் படத் தொடங்கிய வேளையில் —

''அதோ! அது யார்? சந்திராவேதான் அவளோடு வருவது....?''

''என் அப்பா'' — அறிமுகம் செய்து வைத் தாள் சந்திரா.

''மன்னிக்கணும்....'' என்று ஆரம்பித் தார் அவர்.

'என்னய்யா மன்னிக்கிறது. இதைப் போல அழகான பொண்ணுங்களைப் படைத்து. அடுத்தவன் மண்டையை உடைச்சிக்கிறாப் போலப் பண்ணிடுறீங்க, அப்புறமா ஒரே வார்த்தையில் மன்னிக்கணுமாம்!'

''அன்னிக்கு நான் ஊரிலே இருந்திருந்தால் இவ்வளவெல்லாம் நடக்க விட்டிருக்க மாட்டேன். இது விவரம் தெரியாத பொண்ணு....''

''என்னடா சூரி இது. எவ்வளவு பெரிய மனுஷன் உன்னைத் தேடி வந்து உதவி செய்யறதோடு, உன் கிட்டே மன்னிப்பும் கேட்கிறார் பேசாம இருக்கியே'' — பார்வதி கடிந்து கொண்டாள்.

''பரவாயில்லேம்மா அடிபட்ட அதிர்ச்சியிலே இருந்து இன்னமும் அவர் மீளலே. ஆனால் டாக்டர் கவலைப்பட வேண்டாம்னு சொல்லிட்டார். சந்திராவும் பக்கத்திலேயே இருந்து பாத்துக்கறதாச் சொல்லி இருக்கு. எல்லாம் சரியாயிடும்.''

மறுநாள் அவன் தனிமையில் அவனிடம் சொன்னான் — ''அப்பாவுக்கு ரொம்பவும் இளகிய மனசு.''

''எப்படி?''

''அந்த அரிவாள் மீசையின் மனைவியும் அவன் குழந்தைகளும் இன்று காலையில் வந்து அவர் காலில் விழுந்து கதறினார்கள்!''

''என்ன சொன்னார்?''

''போலீஸ் கேஸ் வேண்டாம்னு சொல்லி அவனை விட்டுவிட்டார்.''

''அதுவும் சரிதான். என்ன இருந்தாலும் அவன் எதிர்ப்பில்தானே நம் கூட்டணி இவ்வளவு வலுப்பெற்றது!''

''இருந்தாலும் ஒரு எதிரியை....''

''சேர்த்துக்கற காலம் இது! பலனை போகப் போகத்தான் பார்க்கணும். தொலையறான் விடு.''

''சார்.''

யாரோ உள்ளே நுழைந்தான்.

''சில நர்ஸிங் ஹோமில் இது ஒரு தொல்லே. வியாதியஸ்தன் பேரைச் சொல்லிட்டு எவன் வேணும்னாலும் எந்த நேரத்திலும் உள்ளே வந்து இடைஞ்சல் பண்ணுவான். யாரையா நீ?''

''என்னைத் தெரியலீங்களா?''

சூரியா உற்றுப் பார்த்தான்.

''அடடே, நம்ம அரிவாள் மீசை! என்னய்யா இது அவ்வளவு பெரிய உன் மீசைக்கு அப்படி என்ன ஆபத்து வந்தது?''

''எடுத்துட்டேன் சார்.''

''ஏன்!''

''அதோட என் அகம்பாவம் திமிர் அத்தனையும் எடுத்துட்டேன்.''

''முகமே மொட்டையாகத் தெரியுதே அப்பா. சொத்து சுகம் இழந்தவன் முகம்கூட இப்படி ஆயிடுறதில்லை. வச்ச மீசையை எடுத்த முகம் அப்படி ஆயிட்டுதே.''.

''முகம் எப்படி ஆனால் என்ன சார், மனசிலிருந்த அழுக்கு நீங்கி வெள்ளையாயிட்டுது.



டாக்டர்:- ''12ம் நெம்பர் பெட்லே இருந்த பேஷண்ட் எங்கே? அவர் அடுத்த வாரம் தானே டிஸ்சார்ஜ் ஆகணும்னு சொல்லியிருந்தேன்!''

நர்ஸ்:- ''புதுசா 11ம் நெம்பர் பெட்டுக்கு வந்த பேஷண்ட் கிட்ட இவர் கடன் வாங்கி இருக்காராம். அவரைக் கண்டதும் இவர் வார்ச் சுருட்டிக் கிட்டு கிளம்பிட்டார்!''

-டி. எஸ். சீதாராமன்

நான் மறுபடியும் வாலண்டரிலே வேலைக்குச் சேரணும்னு....''

''அதுக்கு என்னைக் கேட்டு என்ன பிரயோசனம். முதலாளியைப் போய்க் கேளு.''

''கேட்டுட்டேன், அவர் வருங்கால மாப்பிள்ளையின் அனுமதி இல்லாமல் இனிமே எதுவுமே செய்ய மாட்டாராம். அதுதான் நேரே இங்கே வந்துட்டேன்.''

அவன் அவளைப் பார்க்க — அவள் அவனைப் பார்க்க — இப்படி நாம் எத்தனை முறை படித்தாலும் அவர்களுக்குத் திருப்திதான்!

''உங்க அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை வந்தா யார் முதலில் மன்னிப்புக் கேட்பாங்க..?''

''அப்பா தான்...''

''ஏன்?''

''அவர்தானே 'அப்பா'லஜி கேட்க முடியும்...!''

-கிணத்துக்கடவு ரவி





சமீபத்தில் வாரானசியில் சுவாமலை விஸ்வநாத ஸாஸ்திரிகளுக்கு பீமரத சாந்தி மிகவும் விமரிசையாக நடை பெற்றது. காஞ்சியிலிருந்தும், சிருங்கேரியிலிருந்தும் பரமாசார்யாளின் அனுக்ரஹ பூர்வமாக பிரஸாதமும் வந்தன. மாலையில் வேத வஸந்த பூஜையும், வித்வத்ஸதஸ்ஸும் நடைபெற்றன. யதிஸம்ராட் காபாதரி சுவாமிகளும் வந்து ஆசீர்வதித்தனர்.

ஆஸ்திக அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்

சென்னை, கோடம்பாக்கம், வடபழனியாண்டவர் கோயில் தென்பால், சைதாப்பேட்டை சாலையிலுள்ள, அருள்மிகு சாந்த நாயகி சமேத வேங்கீஸ்வரர் ஆலயத் திருப்பணி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் அருளாசியுடன் துவக்கப்பட்டுள்ளது. வியாக்ரபாத முனிவராலும், பதஞ்சலி மாமுனிவராலும் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ வேங்கீஸ்வரர் ஆலயத்தில் நூதன ராஜகோபுரம் கட்டவும், சுவாமி, அம்பாள் விமானங்களை செப்பனிடவும், விநாயகர், முருகர், நவக்கிரகங்கள் சன்னதிக்கு புதிய விமானங்கள் அமைக்கவும், மகாமண்டபம், அலங்கார மண்டபம், கொடிமரம், 63 நாயன்மார்கள் மண்டபம் இவைகள் அமைக்கவும், மற்றும் இதர திருப்பணிகளுக்கும் சுமார் 12 லக்ஷ ரூபாய் பணம் தேவைப்படுவதால் ஆஸ்திக அன்பர்கள் தங்களாலியன்ற பொருளுதவி நல்கி ஸ்ரீ சாந்த நாயகி சமேத ஸ்ரீ வேங்கீஸ்வரர் திருவருளுக்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.


காசோலை, பணமனுப்புவோர்:

'செயலாளர், பொருளாளர்'
"திருப்பணி நிதி"
வேங்கீஸ்வரர் ஆலயம்,
மதராஸ் - 600 026

என்ற முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

திருப்பணி குழு






இங்கு உள்ள துண்டங்களை ஜாக்கிரதையாக ஓரத்தை யொட்டிக் கத்தரிக்கவும். அவற்றை மேலும் பின்னப்படுத்தக் கூடாது. ஒரு வெள்ளைத் தாளில் இணைசேர்த்து ஒட்டித் திரைப்பட நட்சத்திரத்தின் உருவை முழுமையாக நீள்சதுரப் படமாகக் குறையின்றிக் காண முடிகிறதா பாருங்கள். பத்து கல்கி நேயர்கள் மட்டுமே அவ்வாறு காண முடியும். அதிர்ஷ்டசாலிகளான அந்தப் பத்துப் பேருக்கும் தலா ரூ. 25 பரிசு உண்டு. தவிர அந்தத் திரைப்பட நட்சத்திரத்தின் கையெழுத்துடன் கூடிய புகைப்படமும் அனுப்பி வைக்கப்படும். முடிவு தேதியான மே 26ம் தேதிக்குள் அனுப்பப்படும் உருவங்களே பரிசீலிக்கப்படும். உறையின் மேல் ''நட்சத்திர வடிவம் - 3 என்று குறிப்பிடவும். கடிதப் போக்கு வரத்துக் கிடையாது. கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. உங்கள் விலாசத்தைத் தெளிவாக, ஒட்டப்பட்ட படத்தின் கீழே குறிப்பிட மறவாதீர்கள்!

— ஆசிரியர் கல்கி, சென்னை—32






நட்சத்திர வடிவம்

பரிசுத்திட்டம்-3

ஒற்றன் 4X-1 சித்திரக்கதை: புஞ்ஜாய் 17




பெரிய பாறையும் சின்ன கற்களும்

ஒரு முனிவரிடம் இரண்டு பேர் வந்து தங்களது கஷ்டத்தைக் கூறிக் கொண்டார்கள்.

"நான் ஒரு பாவி சுவாமி! தெரிந்தோ தெரியாமலோ நிறைய பெரிய பெரிய தவறுகள் செய்து விட்டேன். இப்பொழுது பாவ மூட்டையைச் சுமந்து கொண்டு நிற்கிறேன். இதை இறக்கி வைக்க நான் என்ன சுவாமி செய்ய வேண்டும்?" என்றான் ஒருவன்.

இன்னொருவன் "நான் எந்தவித தவறும் செய்யாதவன். நானும் கஷ்டப் படுகிறேனே. பெரிய தவறு செய்த அவனுக்குக் கிடைத்த அதே தண்டனை தானா எனக்கும்?" என்றான்.

முனிவர் பாவம் செய்தவனைப் பார்த்து ஒரு பெரிய பாறாங்கல்லைக் கொண்டு வரச்சொன்னார். பாவமே செய்யவில்லை என்று சொன்னவனைப் பார்த்துச் சிறிய சிறிய கற்களாகப் பொறுக்கி வரச் சொன்னார். இருவரும் அவ்வாறே செய்துவிட்டு "இவற்றை என்ன செய்ய வேண்டும்?" என்றனர்.



(தொடரும்)

"நீங்கள் எடுத்த கற்களை எங்கிருந்து கொண்டு வந்தீர்களோ அங்கேயே கொண்டு போய்ச் சேருங்கள்" என்றார் முனிவர்.

பாவி என்று தன்னைச் சொல்லிக் கொண்டவன் பாறாங்கல்லைப் பழைய இடத்தில் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டான். ஆனால் சிறிய சிறிய கற்களைப் பொறுக்கியவன் எந்தக் கல்லை எங்கிருந்து எடுத்தோம் எனத் தெரியாமல் விழித்தான்.

அப்பொழுது முனிவர் சொன்னார்:

"தான் செய்த பாவத்தை உணர்ந்தவனுக்கு அந்தப் பாவத்தைக் குறைக்கச் சந்தர்ப்பம் உண்டு. சின்னச்சின்ன பாவங்களைச் செய்தாலும் அதை உணராமல் போனால் கற்களைத் திரும்ப அந்தந்த இடத்தில் வைக்க முடியாமல் போன மாதிரி தான் செய்த பாவங்களையும் குறைத்துக் கொள்ள இயலாமல் போகும்."

-சொன்னவர்: சோடிடர் சந்திரசேகர்

- கேட்டவர்: ஜி. சுப்ப ரத்தினம்

நிகழ்ச்சியின் நடுவில்....!

கோமதி ஸ்வாமிநாதன்

“ராமானுஜம்! ராமானுஜம்!''

''கம்மிங்! கம்மிங்! வந்துண்டே இருக்கேன்.''

''நம்ப புரோக்ராமைக் கச்சிதமாக ஒரு தடவை ஒத்திகை பார்த்துக் கொண்டால் தேவலே! ஒரு அங்க நிமிஷம் பிசிறு அடித்தால்கூட எனக்குக் கெட்ட கோபம் வரும்.''

''அந்தக் கோபம் வந்துவிடக் கூடாது என்றுதான் அதன் குறுக்கேயே நான் நின்று கொண்டிருக்கிறேன்! நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருக்கிறேன்.''

''ஜானவாசக் கார் கோவில் வாசலுக்கு எப்போ வரும்?''

''டாண்ணு சாயங்காலம் ஆறே முக்காலுக்கு வந்து நின்னுடும்.''

''பூக்காரன்?''

''சரியாக ஆறரை மணிக்கு அந்தக் காரிலே மோதிரனுப்போலே தயாராக அலங்காரப் பூப்பந்துகளோடு நின்று கொண்டிருப்பான்.''

''அந்த மாப்பிள்ளைப் பையன் சட்டுப் புட்டென்று சூட்டுக் கோட்டை மாட்டிக் கொண்டு கரெக்டாக ஏழு மணி முப்பது நிமிடங்களுக்குக் காரில் வந்து உட்கார்ந்து விடவேண்டும். மசமசன்னு அழகு பார்த்துண்டு கோவில் பிராகாரத்திலே சிநேகிதர்களுடன் வம்படித்துக் கொண்டு நிற்க மாட்டானே?''

''அந்த இடத்திலே நம்ப ஆட்களையே இரண்டு பேரை நிறுத்தியிருக்க ஏற்பாடு.மனேஜர் நாடகத்திலே சீன் மாத்துகிற வேகத்திலே மாப்பிள்ளைப் பையனை சூட்டுக்குள்ளே நுழைத்துக் காருக்கு இழுத்துக் கொண்டு வந்து விடுவார்கள்.''

''வெரி குட்! எட்டே கால் மணிக்கு ஜான வாசக் கார் கல்யாண மண்டபத்திலே நுழைந்தாக வேண்டும்.''


''நீங்க கடிகாரத்தைப் பார்த்துக்கொள்ளலாம். அப்போது மணி எட்டுப் பதினைந்தைக் காண்பிக்கும்.''

''அதற்குத்தானே உன்னை செக்ரட்டரியாக வைத்துக் கொண்டிருக்கிறேன். அது சரி! நாதஸ்வரக்காரர் கிட்டே கண்டிப்பாகச் சொல்லிட்டியா?''

''ஓ! ஒங்கியடிச்சுச் சொல்லிட்டேன். பூர்வி கல்யாணி, கல்யாண வசந்தம், சுபபந்துவராளி, மூன்றே கீர்த்தனைகள் மூன்று ரஸ்தாக்களுக்கு, கல்யாணப் பந்தலில் நுழையும்போது சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா! சரிதானே?''

''ரொம்பக் கரெக்ட்! யாராவது நல்லா யாட்டி ரசிக்கிறான்னு அந்த ஆசாமி விஸ்தாரமாக வாசித்து நீட்டமாட்டாரே!''

' அவருக்குக் கண்டிப்பான இன்ஸ்ட்ரக் ஷன்! ஒரு தெருவோடு ஒரு பாட்டு முடிய வேண்ணு



னும், அந்தப் பாட்டை அப்படியே விட்டு விட வேண்டும். அப்படித்தான் ஏற்பாடு.''

''நிச்சயதார்த்தச் சம்பிரதாயமெல்லாம் எட்டு நாற்பதுக்கு முடிந்து எட்டு நாற்பத்தி ஐந்துக்குச் சாப்பிட உட்கார்ந்து விட வேண்டும்.''

''சமையல் கோஷ்டி மிலிடரி ரெஜிமெண்ட் மாதிரி தயாராக நிற்பார்கள்.''

''அந்த இடத்திலே குழப்பம் வரக் கூடாது.''

''வராது! வி.ஐ.பி. டேபிள்கள் தனி. சம்பந்தி வீட்டார் டேபிள்கள் தனி. மற்ற உறவுக்காரர்கள், அனுமத்துக்கள் தனி! மூணு செக்ஷன்! விவரம் தெரிந்த கைடுகளை நிறுத்தி வைத்திருக்கிறேன்.''


''அப்படீன்னு என்னே வழக்கம் பிசகாமல் ஒன்பதரைக்குப் படுக்கப் போக அனுமதித்துவிடுவாய்!''

''நீங்க ஒன்பது முப்பத்தி ஒன்றுக்கு ஒரு கொட்டாவி விட்டுவிட்டு ஒன்பது முப்பத்தி இரண்டுக்குத் தூங்கியாகணும்!''

''வெரி குட் ராமானுஜம்! ஒரு பெர்சனல் செக்ரட்டரின்னா இப்படித்தான் எல்லா நுணுக்கங்களேயும் கவனிக்கணும்.''

''ரொம்ப தாங்க்ஸ்! நான் கொஞ்சம் போய் காஸ் லைட்காரர்களைச் செக் பண்ணி விட்டு வருகிறேன்.''

ராமானுஜம் போனவுடன் பங்காருசாமி நிம்மதியாக ஒரு மூச்சு விட்டுப் பிரம்பு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தார். ஒலி பரப்பு இலாகாவில் பெரிய உத்தியோகம் வகிக்கும் அவர், தம் பெண் திருமணத்தின் போது எல்லாம் நேரப்படி நடக்க வேண்டும் என்று வெகு அக்கறை எடுத்துக் கொண்டார்! விநாடிகளின் வால்யூ தெரிந்தவர் அவர். வாழ்க்கையையே வானொலிப் புரோக்ராமாக அமைத்துக் கொள்பவர்!



இரவு ஏழு முப்பதுக்கு ஜானவாச ஊர் வலம் கிளம்பிவிட்டது. நாதஸ்வரக்காரர் வெகு இனிமையாக பூர்வி கல்யாணியில் சஞ்சரித்து முடித்தபோது ஒரு பிரதான சாலையைக் கடந்து அடுத்த தெருவில் நுழைய வேண்டிய இடம் நெருங்கி விட்டது. தவில் காரர்கள் வெளுத்து வாங்கினார்கள்.

ஊர்வலம் ஏனோ நின்று விட்டது. ராமானுஜம் முன் பகுதிக்குப் போய் ஏதோ கேட்டுவிட்டு மூன்று விநாடிகளில் பங்காருசாமியின் வலது காதுப் பக்கமாக வந்து நின்று ஏதோ கிசுகிசுத்தான். பங்காருசாமியின் முகத்தில் யாரோ சிவப்புப் பெயிண்டைத் தெளித்த மாதிரி பக்கத்திலிருந்தவர்கள் கற்பனை செய்தார்கள்.

ஊர்வலப் பிரமுகர்கள் வியூகத்தை ஊடுருவிக் கொண்டு பங்காருசாமி முன்னேறினார். அங்கே பிரதான சாலையை அடைத்துக் கொண்டு நிற்பது போல் பத்து போலீஸ் அதிகாரிகள் அதிகார பேத சின்னங்களுடன் நின்றுகொண்டிருந்தார்கள்.

பங்காருசாமி படபடத்தார்.

''சாரி சார்! அரபு நாடுகளின் ஒன்றின் அரசர் ஐ.சி.எஃப். விஜயத்தை முடித்துக் கொண்டு இந்த வழியே திரும்பப் போகிறார் என்பதற்காக இந்த ஏற்பாடு. இப்போது உங்கள் ஊர்வலத்தை இந்தச் சாலை வழியே கிராஸ் பண்ண அனுமதிக்க முடியாது. நீங்கள் மன்னிக்க வேண்டும். இன்னும் பத்து நிமிடங்களில் அந்த அரபுக் கோஷ்டி இந்த இடத்தைத் தாண்டிவிடும். அதுவரை ப்ளீஸ் ப்ளீஸ்....'' என்றார் உயர் போலீஸ் அதிகாரி.

''நாங்க ஒரு நிமிஷத்திலே இந்த ரோட்டைக் கிராஸ் பண்ணி விடுவோமே'' என்றான் ராமானுஜம்.

''அப்புறம் நான் ஒரு வருஷம் சஸ்பென்ஷனிலே இருப்பேன்! எங்களுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் அந்த மாதிரி சார்! கொஞ்சம் பொறுமையாக...''

''ஐ.சி.எஃபைச் சுற்றிப் பார்க்க இந்த நேரம்தான் கிடைத்ததா? இல்லே திரும்பிப் போக இந்த ரோடுதான் கிடைத்ததா?'' பங்காருசாமி சீறினார்.

''அவர் நாளைக்குக் காலையில் தான் அங்கே போவதாக ஏற்பாடாகி யிருந்தது. ஆனால் அவர் இன்றிரவே மலேஷியாவுக்குப் போகத் தீர்மானித்து விட்டதால் இந்த புரோக்கிராம் குறுக்கே வந்து விட்டது''—இது போலீஸ் தரப்பு விளக்கம்.

''நாங்க நாளைக்குக் காலையிலே ஜானவாசம் வைத்துக் கொள்ளலாம் என்றால் முடியுமா?... இதற்கு ஏதாவது மாற்று வழி உண்டா?'' என்று பங்காருசாமி கேள்வியால் சாடினார்.

''நீங்க மூணு மைல் சுற்றி வந்தால் இந்தப் பாதையைத் தவிர்க்கலாம். அது உங்கள் இஷ்டம்.''

நாதஸ்வரக்காரர் கல்யாண வசந்த கீர்த்தனையை முடித்து சுப பந்து வராளியில் புகுந்து வெளி வந்து நிகழ்ச்சி நிரலில் இல்



சபிதாவின் சாதனைகள்!

இவ்விதழ் அட்டைப் படத்தில் காட்சி தரும் குமாரி சபிதா கல்லூரிக்குப் போவது போல் புத்தகங்களைச் சுமந்து கொண்டு புறப்பட்டிருக்கிறாரே யொழிய ஏற்கெனவே சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. (தத்துவம்) பட்டம் பெற்றுவிட்டவர். அதோடு கராத்தேயில் பச்சை பெல்ட் அணியும் தகுதி பெற்றவர்.

''மெல்லியலார் சண்டைபோட முடியாது என்று சொல்வதெல்லாம் டூப். கராத்தேக்குத் தேவை, பலத்தைவிட அதிகமாக வேகமான சிந்தனையும் துரிதமான செயல் திறனும் தாம். இதிலேயே எதிராளியை அசந்துபோக வைத்துவிடலாம். நான் கராத்தே பயிலும்போது, என்னைச் சோதிக்க எண்ணிய என் குரு மோசஸ் திலக், முன்னறிவிப்பின்றி என்னை இருவர் தாக்கும்படி செய்தார். நானும் சளைக்கவில்லை. அவருக்கு ரொம்ப சந்தோஷம். அப்புறம்தான் எனக்கு விஷயம் தெரிந்தது'' என்கிறார் சபிதா.

விவாதத் திறனுடன் சுவாரஸ்யமாக உரையாடக் கூடியவர்கள் பொது ஜனத்தொடர்பில் எளிதாக வெற்றி பெறமுடியும். குமாரி சபிதா, பொது ஜனத் தொடர்பு கலையில் பயிற்சி பெற்றதுடன் விவாதங்கள் பலவற்றில் பரிசுகளும் வாங்கியவர். இவ்வளவும் போதாக் குறைக்கு மாடர்ன் ஆர்ட் ஓவியங்கள் வரைவதில் ஆர்வமுடையவர், மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் நிபுணர்! போதுமா சாதனைப் பட்டியல்?

• பேட்டி : ''இக்கு'' வண்ணப்படம் : உத்ரா

லாத சங்கரா பரணத்தைக் குழாயில் எடுத்துக் கொண்டார்.

''ஐ. சி. எஸ்ஸிலிருந்து அரபுக் கோஷ்டி கிளம்பி விட்டதாமா?'' என்று விசாரித்தான் ராமானுஜம்.

''அது போய்ச் சேர்ந்த தகவலே இன்னும் எங்களுக்கு வரவில்லை'' என்ற பதில்வந்தது.

சங்கராபரணத்தில் ராகம் பல்லவி வாசித்து விட்டு நாதஸ்வரக்காரர், உமாபரணத்தின் வழியாக நடபைரவிக்கு வந்தார்.

''இந்த மாதிரி சாலைகளைக் கண்ட நேரங்களில் பிளாக் பண்ணுவதற்கு பதிலாக ஹெலிகாப்டர்களை உபயோகிக்கக்கூடாதோ?'' என்று ஒரு மணியான யோசனையை உதிர்த்தார் ஒரு பெரிய மனிதர்.

'அன்ன தாதா சுகிபவோ' என்று அந்தக் காலவாக்கு 'எண்ணெய் தாதா சுகி பவோ' என்பது இன்றைய வாக்கு!' என்று ஜோக் அடித்தார் ஒருவர்.

கடைசியில் எங்கோ போலீஸ் சைரன் ஒலித்தது. நான்கைந்து கார்கள் ஒன்றின் பின் ஒன்றாகப் பறந்தன. அந்த நேரத்தில் அந்தப் பிரதான சாலையை ஒட்டி இந்தக் கல்யாணக் கோஷ்டியும் காவல் துறையினரையும் தவிர வேறு யாருமே அந்தப் பிரதேசத்தில் நடமாடவில்லை.

பந்தலில் நுழையும்போது நாதஸ்வரக்காரர் ஞாபகமாக 'சின்னஞ் சிறு கிளியே' பாட்டை வாசித்தார்.

பங்காருசாமி கைக்கடிகாரத்தைத் தம்மை மறந்து பார்த்தார். அது சரியாகப் பத்து முப்பத்தி நாலைக் காண்பித்தது. கோபத்துடன் அதைக் கழற்றியபடியே பங்காருசாமி சட்டென்று ''ராமானுஜம்! ராமானுஜம்!'' என்றார்.

''கம்மிங்!கம்மிங்! வந்துண்டு இருக்கேன்'' என்று ஓடி வந்தான் ராமானுஜம்.

''கடிகாரத்தைக் கையிலே மாட்டிக்குங்க! ரொம்ப ராசியான வாட்ச்!'' என்றான்.

''என்னடா சொல்றே ராமானுஜம்!''

''இன்னும் சொல்லப் போனால் அந்த அரபு நாட்டு ஷேக்குக்கு நீங்க பெர்ஸனலா தாங்க் பண்ணணும்!''

''ஏன்? அப்பனம் பொரிக்க எண்ணெய் இன்னிக்கு சப்ளை பண்ணியிருக்கிறாரா?''

''ஒரு பெரிய குழப்பத்தையே தடுத்திருக்கிறார்.''

''குழப்பங்கள் எல்லாம் அவர்கள் நாடுகளில்தானே நிறைய? இங்கே கூடவே எதையாவது கொண்டு வந்து விட்டாரா?''

''அங்கே சமயக் குழப்பம். இங்கே கல்யாண மண்டபத்திலே சமையல் குழப்பம். ஹெட் குக் இருபது கிலோ முந்திரிப் பருப்புக்கு லிஸ்ட் கொடுத்தாராம். மளிகைச் சாமான்கள் வாங்கினவர்கள் பத்து கிலோ போதும் என்று வாங்கி வந்து விட்டார்கள்.''

''அதனாலே—?''

''இருபது கிலோவையும் இப்போ என் கையில் ஒப்படைத்தால்தான் என் சமையல் மதிப்புத் தாக்குப்பிடிக்கும்னு சொல்லிக் கூட்டாளிகளோடு சேர்ந்து 'ஸ்டேயின் ஸ்டிரைக்' பண்ணிவிட்டார். அப்புறம் கோவிந்தப்ப நாயக்கன் தெருவுக்கு சைக்கிளிலே ஆளை அனுப்பி அவசரமா வாங்கி வந்த பிறகுதான் சமையலைத் தொடர்ந்து பத்து நிமிஷங்களுக்கு முன்னால் பஸ்ட் கிளாஸா முடிச்சுட்டார்! அரபு ஷேக் குறுக்கே வந்ததாலே சம்பந்திகளைச் சாப்பிடக் காக்கப் போட்ட குற்றச்சாட்டிலிருந்து தப்பியாச்சு!''

மனத்துக்குள் ஷேக்கை வாழ்த்தினாலும் ''சம்பந்திகள் கிட்டே நிகழ்ச்சியின் இடையே நேர்ந்த தடங்கலுக்கு வருந்துகிறோம் என்று சொல்லிவிடு... மறந்துடாதே!'' என்றார் பங்காருசாமி.

மொத்தப் பரிசுத் தொகையை ரூ. 2000லிருந்து இந்த ஆண்டு ரூ. 2500 ஆக உயர்த்தியுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இதனை ஐந்தாகப் பிரித்து ஐந்து விதமான சிறு கதைகளுக்கு ஐந்து பரிசுகளை வழங்குகிறோம். ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த சிறுகதைக்கு ரூ. 500 பரிசு:

- சமூகச் சிறுகதை
- ஹாஸ்யச் சிறுகதை
- சரித்திரச் சிறுகதை
- விஞ்ஞானச் சிறுகதை
- மர்மச் சிறுகதை

என்று ஐந்து தலைப்புக்களில் சிறுகதைகளை வரவேற்கிறோம்.

பரிசு பெறும் கதைகள் தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 100 சன்மானம் பெறும். இவற்றில் அறிமுக எழுத்தாளர்களுக்கு போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.

- அறிமுக எழுத்தாளர் எனில் இதுவரை எந்தப் பத்திரிகையிலும் எழுதியது இல்லை என்றும், போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதி மொழி தரவேண்டும்.

- நடுவர்கள் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

- முடிவு தேதி மே 31உ.

- உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பிப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். தபால் தலைகளை மட்டும் இணைப்பதிலோ அல்லது பின்னால் தனியே அனுப்புவதிலோ பயனில்லை.

- கதைகள் கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் இடையாது.

- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

- அமரர் கல்கி அவர்கள் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகமாகக் கலந்துகொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை-32

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1980





கடலுக்குள் ஜூலி

புஷ்பா தங்கதுரை

சுறுமீன்கள் ஆபத்தானவை. அவை பெரும்பாலும் முக்குளிப்பவர்களைப் புறக்கணிக்கின்றன. ஆனால் இதை நம்பி யாரும் ஏமாறக் கூடாது.

'மீனின் நண்பர்களும் விரோதிகளும்'
கட்டுரையில்
—ரிச்சர்ட் போவுட்

19

எலிசா நிம்மதியாக கண் மூடியிருந்தாள், அருமை மகள் காபினில் உறங்கிக் கொண்டிருந்தாள். ஒரு அன்னிய பூமியின் இயற்கை இன்னும் சிற்றம் தணியாது விரோதமாக இருந்தது.

பால்மர்ஸனின் உடல் அநியாயமாகச் சோர்ந்து விட்டது.

கண்களில் நூல்கள் பறந்தன. செவிகளில் எத்தனையோ வித ஊதல்கள் கேட்டன.

இனி அவரால் ஒரு அடி எடுத்து வைக்க முடியாது.

உதவி இங்கே, இந்த இடத்தில் அவரைத் தேடி வந்தால் உண்டு. வராவிடினும் பரவாயில்லை.

அவரது ஜூலி போய்விட்டாள். அவர் அருமையாக நேசித்த மாலுமிகள் மறைந்து விட்டார்கள். ஒரே நண்பர் எஸ்டன் போய்விட்டார்.

உயிர் மைந்தன் போய்விட்டான். அவனைத் தொடர்ந்து உயிர் மனைவி போய் விட்டாள்.

இனி... இவர்கள் எல்லோரையும் துறந்து அபகீர்த்தியோடு இங்கிலாந்து திரும்ப முடியுமா?

ஒரே ஒரு விஷயம்!

கப்பலில் என்ன சரக்கு வருகிறது என்பதை உயிர் நண்பன் எஸ்டனுக்குக் கூட சொல்லாது இருந்து விட்டார்.

அவர் மட்டும் தினம் ஸீல் இருக்கிறதா என்று அந்த செஸ்ட்களைத் தினமும் பார்வையிட்டு வந்தார்.

எஸ்டனோ, மற்றவர்களோ உயரிய ஒழுக்கம் படைத்தவர்கள். அவரிடம் அந்த செஸ்டில் என்ன இருக்கிறது, கப்பல் ஏன் இவ்வளவு கனக்கிறது என்று கேட்கவே இல்லை.

இப்போது விலையுயர்ந்த பொன் வெள்ளிகளோடு ஜூலி கடலுக்குள் போய் விட்டாள்.

இதை உலகுக்கு எப்படித் தெரிவிப்பது?

அப்படித் தெரிவிக்கும் வரை அவருக்கு உயிர் இருக்குமா?

ஹோ ஹோ ஹோய் என்று கத்தினார். யாராவது குரல் கேட்டு வருவார்களா?

முதல் பல விநாடிகளுக்கு மல்லிக்கிற்கு எதுவும் தோன்றவில்லை. கடலில் எண்ணிக்கையில்லா ஆபத்துக்கள் வரும் என்று ராம்சந்த் எச்சரித்திருந்தான்.

அநேகமாக அவைகளை வரிசைப்படுத்தி, விவரமாகக் கூறியிருந்தான்.

அங்கு நடந்த திடீர் இயக்கங்களைப் பார்த்தால், அது சுறுவாக இருக்கும் என்று நினைத்தான்.

வலது காலில் சொருகியிருந்த கத்தியை உருவினான்.

எச்சரிக்கையோடு பல திசைகளையும் பார்த்தான்.

சுறுவைக் கத்தியால் கொன்றுவிட முடியாது என்று நிச்சயம் தெரியும்.

ஒரு தாற்காலிகப் பாதுகாப்புக்கு அது என்று கத்தி அவனிடம் கொடுக்கப்பட்டிருந்தது.

கடல் அடியிலிருந்து அப்போது தூசியும், புழுதியும் கிளம்பின. ஒரு தூசிக் காற்று வீசினாற்போல.

பார்வை தெரியாது.

கடல் தரையில் நூற்றாண்டு காலமாக வந்து சேரும் புழுதிகள் அவை!

லேசுக் கொந்தளிப்பில் கூட எங்கும் தொங்குவது போல் நிறைந்துவிடும்.

சேராவதற்கு நாழியாகும். நான் கணக்குகள் கூட ஆகும்.

தனது கருவிகள் எல்லாம் பழுதில்லாமல் இருக்கிறதா என்று பார்த்து,

மல்லிக் ஒரே இடத்திலேயே நிலைத்து நிற்க, மனம் பதைத்தது.

மீன் இனங்கள் வழுவி ஓடின. சில அவன் யார் என்று வேடிக்கை பார்த்தன. சில அவன் முன்னால் கொஞ்சம் விளையாடி அப்பால் போயின. மிகச் சில பயந்து தூரத்தில் ஒதுங்கியே ஓடின.

சப்தமில்லை. சில அடி கூட வெளிச்சம் இல்லை.

இருட்டால் ஏற்படும் நிக்டோஃபோபியா ஏற்பட மெள்ள அவன் முதுகுத்தண்டில் பீதி ஊறத் தொடங்கியது.

அதே நேரம் எந்த இயக்கமும் செய்யாத தால், அவனை அறியாமல் அவன் உடல் நீருக்குள் மெள்ள மெள்ள அமிழ்ந்து தரை தட்டுவதைப் பார்த்ததும் திடுக்கிட்டான்.

கடல் தரையா இது?

கடலின் அடிப் பாகமா?

மனம் சிலிர்ப்புக் கொள்ள, அதே அளவு பீதியும் கொண்டது. காலை அழுத்த அது மணல் போல இருந்தது.

அறுபதடி நீர் வழியாக சூரிய கிரணம் வடிக்கப்பட்டுவிட,

கீழே மெள்ள ஒரு ஐந்து நெளிவது போன்ற வெளிச்சம் கண்கட்டிவிளையாடியது.

மணியைப் பார்த்தான். இன்னும் 15 நிமிடம் கீழே தங்கலாம். பிறகு மேலே ஏற வேண்டியதுதான். அக்வாலங்கில் காற்று அரவாகிவிடும்.

அது என்ன பிசாசா? நீள அங்கி தரித்து யாரோ எழுந்திருப்பது போல் எழுந்திருக்கிறார்களே; அது யார்? அக்டோபஸ்ஸா!

மெள்ள தனது பல திசைக் கால்களையும் நீட்டி, அது நகர அக்டோபஸ் என்று உறுதியாகியது.

அண்டர் வாட்டர் டார்ச்சை எடுத்துப் பளிச்சிட,

அக்டோபஸ் வழுவி ஓடியது.

அதே நேரம் நீரில் பெரும் அசைவு. மீண்டும் சுறுவாக இருக்குமோ என்று நினைக்கும்போது, நீர்க் கருமையிலிருந்து ராம்சந்த் உற்பத்தியானான். ஓகே சைகை காண்பிக்க, மல்லிக்கும் ஓகே காண்பித்தான்.

மேலே போவோம் என்று அடுத்த சைகை ராம்சந்த் கொடுத்தான்.

50, 40, 30, 20, 10 அடிகளில் வெவ்வேறு கால அளவு நின்று 45 நிமிடத்தில் மேல்பரப்பை அடைந்தார்கள்.

படகில் ஏறி ஆசுவாசமாகிய பிறகு அவர்கள் அந்தச் சுறுவைப் பற்றியும் அதனிடமிருந்து தப்பியது பற்றியும் ஆச்சரியமோடு பேசினார்கள்.

சம்பந்தசாமியின் வாஞ்சை அப்போது தூரத்தில் நின்றது.

பைனாகுலர்லை மாட்டிப் பார்க்க — டே, டே, டே இந்தப் பிள்ளையாண்டான் என்று சொல்ல —யாரு? யாரு! என்று அடியாட்களு வினவினார்கள்.

—மல்லிக்குன்னு ஒருத்தன் நம்பகிட்டே வந்து பிரிட்டிஷ் கப்பலைப் பற்றிக் கேட்டானே!...

—அவனு?

—ஆமாம்!

—என்ன செய்யறான்?

—அவனும் இன்னொருத்தனும் தண்ணிக்குள்ளே போய்ட்டு வந்திருக்காங்க! —இந்தாப்பா! ஜௌத் வெஸ்ட் போ! ஸ்டெடியா ஃபிஷ்ஷிங் போறாப்பலே இருக்கணும். அவங்க சந்தேகப்படக் கூடாது.

படகைக் கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் தவிர்த்துவிட்ட பிறகு,

சம்பந்தசாமி, பைலட்டை நோக்கி—இடத்தைக் குறிச்சுக்கிட்டீங்களா மகாதேவ்! என்றார்.

மகாதேவ் கடற் படையிலிருந்து கழன்று வந்தவர். —பண்ணிக்கிட்டேன். 10.00 அட்சம் இருக்கும். 79.00 நீர்க்கம் இருக்கும்.

—ஓகே என்றார் சம்பந்தசாமி.

தென் கிழக்கில் வெகு தூரம் போய், பிறகு கரையோரமாக வடக்கு வந்து உப்பங்கழியில் கலந்து கரை சேர்ந்தார்கள்.

சம்பந்தசாமி தலை முழுவதும் திட்டங்களாக இருந்தன.

வீட்டுக்குப் போனதும் ரீடாவை அழைத்து அந்தச் சார்ட்டை எடுத்து வரச் சொன்னார்.

பெரிய மேஜையில் விரித்து விளக்கைப் போட, துரியர் லேஸ் என்ற எழுத்துக்களோடு சார்ட்டின் எல்லைகள் விரிவாகத் தெரிந்தன.

மட்கிய தாள். மட்கிய ரேகைகள். பொடிசான எழுத்துக்கள்.

10 டிகிரி அட்சத்தைத் தேடினார். கண்டு பிடித்தார். 79 நீர்க்கம் எங்கிருக்கிறது? இதுதானே!.... —மகாதேவ்! என்று இரைந்தார் அவர்.



மகாதேவ் வெள்ளைத் தொப்பியுடன் ஓடி வந்தார்.

—இதப் பார்த்தியா? 10.00 டிகிரியும் 79.51 டிகிரியும் வெட்டற எடத்திலேதான் பொத்தல்! இங்கேதான் அவங்க தேடிக்கிட்டிருக்காங்க! ஆமா... இந்த இடம் எப்படித் தெரிஞ்சுது!

கேள்வியை இழுத்த அவர் திரும்பி ரீடாவைப் பார்க்க, —ரீடா, இந்தச் சார்ட்டை யாராவது எடுத்தாங்களா?

(எடுக்கவில்லை)

—வேலைக்காரங்க யாராவது திருடி...

(வழியில்லை)

—நிச்சயமாச் சொல்றியா?

(நிச்சயமாக)

—அப்போ இந்தப் பசங்களுக்கு எப்படி இடம் தெரிஞ்சுது?

யோசித்தவாறே உட்கார்ந்து —மிஸ்டர் மகாதேவ்! என்றார்.

—எஸ் ஸார்!

—நிச்சயம் அந்த மூழ்கின கப்பலுக்குள்ளே என்னவோ இருக்கணும்!

—ஆமா, ஸார்!

—நாம்பளும் ரெண்டு நாள்லே தேடறோம்.

—ஓகே, ஸார்!

மகாதேவ் விடைபெற்றுப் போனார்.

வொய்ட் மீண்டும் அந்த மயிலாப்பூர் மாட வீதியில் புகுந்து, சந்துகளைத் தாண்டி, மல்லிக்கின் அறையைத் தேடி விசாரிக்க,

அந்தப் பக்கத்து அறை நண்பன் —மல்லிக் கனிநாகலாபுரம் போயிருக்கான், ஸார்! என்று ரேடியோ மாதிரி கூவினான்.

—கெனி நாக்லாபூர்? என்றார் வொய்ட்.

—நாகலாபுரம் என்றான் நண்பன் பாதி ஹாஸ்யமாக.

வொய்ட் ஒரு தேசப் படத்தை எடுத்து விரித்து வைக்க நண்பன் சாங்கோபாங்கமாகக் கனிநாகலாபுரத்தைக் காட்ட,

அடுத்த நாள் அந்தக் குக்கிராமத்தில் தூசி படிந்த முகத்தோடு நின்றார் வொய்ட்.

மல்லிக், மல்லிக் என்று கேட்டதும், ஊரில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் அதிகம் இல்லாததால் சம்பந்தசாமி பங்களாவைக் காண்பித்து விட்டார்கள்.

அவன்: நேற்று தெருவில் ஒரு பெண்ணைப் பார்த்ததும் தலையைக் குனியவேண்டி வந்து விட்டது....

இவன்: அடடா....ஏன்?

அவன்: நான் மாடியில் நின்றுகொண்டிருந்தேன்....!

- ராஜேஸ்வரி



சம்பந்தசாமியைச் சந்தித்துப் பேசத் தொடங்கியதும் ஒருவருக்கொருவர் ஒரு முக்கிய விஷயத்தை மறைத்துப் பேசுகிறோம் என்பது இருவர்க்கும் தெளிவாகி விட்டது.

இருந்தாலும் ஏற்பட்ட நட்பு நெருக்கத்தில் ஒரு ஷம்பைன் மாலையைத் துவங்க விரும்பி இருவரும் விஸ்தாரமான தோட்டத்தில் உட்கார்ந்தார்கள்.

வொய்ட்டின் மூளை விறுவிறு என்று வேலை செய்தது. பேச்சுவாக்கில் டைம்ஸுக்கு எஸ். எஸ். சாமி என்ற பெயரில் எழுதியவர் சம்பந்தசாமிதான் என்று புரிந்து கொண்டார் வொய்ட்.

கப்பலின் இருப்பிடம், சம்பந்தசாமிக்கு நிச்சயம் தெரியும் என்று புரிந்துகொண்டார்.

அதை அடைவதற்கு என்ன வழி?

கிடைப்பதில் பாதிப் பாதி எனலாமா? அல்லது லட்ச ரூபாய் என்று விலை பேசி...

இரவு அவர்கள் வெகுநேரம் பேசி ஒருவர்க்கொருவர் போதையில் கொஞ்சம் கொஞ்சமாக விட்டுக் கொடுக்க முன்வர,

சம்பந்தசாமி அந்தத் தள்ளாட்டத்திலும் நிபந்தனையில் தளரவில்லை.

சார்ட்டில் குறிப்பிட்ட இடத்திலிருந்து சுற்றிவர ஐந்து மைல் வட்டாரத்துள் ஜூவி கிடைத்தால், அதிலிருந்து கிடைக்கும் பொருளைப் பாதி பாதியாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஐந்து மைலுள் கிடைக்காவிட்டால் சம்பந்தசாமிக்கு இரண்டு லட்சம் கொடுத்து விட்டு வொய்ட் அதற்கு அப்பால் உள்ள பிரதேசங்களைத் தாமே தேடிக்கொள்ளலாம், கிடைக்கும் பொருளை அவரே வைத்துக் கொள்ளலாம்.

கிட்டத்தட்ட ஒரு ராத்திரி வேளையில் இந்த முடிவுக்கு வந்ததும், மறுநாள் காலையில், விரிவாகக் காகிதத்தில் எழுதி இருவரும் கையெழுத்துப் போட்டார்கள்.

அடுத்த நாள் மாலையில் வொய்ட்டின் நெப்ட்யூன் லாஞ்ச் கனிநாகலாபுரத்தை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்தது.

மல்லிக் குழுவினர் நான்கு நாட்கள் அந்த 79,51 தீர்க்கத்தைத் தேடி விட்டார்கள்.

டர்ன் போட்டு இருவர் இருவராகத் தண்ணீரில் புகுந்து தரையைத் தேடினார்கள்.

சில நாட்கள் அனுபவத்தில் மல்லிக்கும், சம்பகாவும் தேர்ந்த டைவர்கள் ஆகிவிட்டார்கள். ஆரம்ப பீதிகளும், பயங்களும் அவர்களை விட்டு விலகிவிட்டன.

ஒவ்வொரு நாள் தேடலையும் ராம்சந்த் ஒரு வரை படத்தில் தெளிவாகக் குறித்து வைத்துக் கொண்டு, தினம் தினம் படகை நகர்த்திப் புதிய இடங்களை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

அன்று காலை மல்லிக், சம்பகாக்களின் டர்ன் வந்தபோது,

இருவரும் அக்வாலங் தரித்துத் தண்ணீரில் அமிழ, முப்பதடி ஆழத்தைத் தாண்டியதும் அந்த வெளிச்சம் சம்பகாவை இழுத்தது.

இருவரும் அதை நோக்கி நீந்தினார்கள்.

(தொடரும்)

பிரபல கட்டிடக் கலை நிபுணரான ராமநாதனைத் தெரியாதவர்கள் சென்னை நகரில் மிகவும் குறைவு. நகரில் ஆங்காங்கே பல அழகிய, நவீன கட்டிடங்கள் அவருடைய திறமைக்கு எடுத்துக் காட்டாகக் கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றன. ராமநாதன் சென்னையில் ஒரு பெரிய புள்ளி. லயன்ஸ் ஐப் போன்ற பல பொது நலச் சங்கங்களில் முக்கிய அங்கத்தினர் .

இப்படிப் பெயரும் புகழுமாக வாழ்ந்த ராமநாதன், இப்பொழுது, எழுபதாவது வயதில் வாழ்க்கையின் கடைசிப் பயணத்தை இன்றோ, நாளையோ துவங்கும் நிலையில் படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். சிறிது காலமாக நர்ஸிங் ஹோம் ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த ராமநாதனை, அவருடைய செல்வங்கள், இனி நர்ஸிங் ஹோமில் வைத்திருந்து பயன் ஒன்றும் இல்லை என்று டாக்டர்கள் சொல்லி விட்டதால், வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டார்கள். அதுதான் ராமநாதனின் விருப்பமும் கூட.

தாமே திட்டம் வகுத்து, பார்த்துப் பார்த்து ஆசையுடன் கட்டிய அந்தப் பெரிய வீட்டில், ஹாலை ஒட்டிய பிரதான படுக்கை அறையில் ராமநாதன் படுத்திருந்தார்.

பம்பாய், தில்லி, கல்கத்தா, கான்பூர் என்று இந்தியாவின் பல திசைகளிலும் குடியிருக்கும் அவருடைய பெண்கள், மாப்பிள்ளைகள் பிள்ளைகள், நாட்டுப்பெண்கள், பேரன் பேத்திகள் எல்லோரும் வந்து வீடு முழுவதும் நிறைந்திருந்தனர். அமெரிக்காவில் டாக்டராக இருக்கும் கடைசிப் பிள்ளை கோபி, அன்று காலைதான் அமெரிக்க மனைவியுடன் வந்து சேர்ந்திருந்தான்.

ராமநாதனுக்கு அவ்வப்பொழுது நினைவு வந்து, போய்க் கொண்டிருந்தது. ஒவ்வொரு முறை அவர் கண் திறந்து பார்க்கும் பொழுதும், அவருக்கு வேண்டியதைச் செய்ய ஓடோடி வந்து கட்டிலைச் சூழ்ந்து கொண்டார்கள், அவருடைய செல்வங்கள். ஆனால் அத்தனை கூட்டத்தையும் தாண்டி, அவருடைய கண்கள் வேறு யாரையோ தேடின. அந்தக் கண்களில் அளவிட முடியாத ஏக்கம், அந்தக் கண்கள் யாரைத் தேடுகின்றன.. அவருடைய மனம் இந்தச் சமயத்தில் யாரை நினைத்து ஏங்குகிறது என்று அங்குள்ள எல்லோருக்குமே புரிந்தது! ஆனாலும் ராமநாதனின் மற்ற ஆசைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றி வைக்கத் தயாராக இருந்த அவருடைய பெண்களும், பிள்ளைகளும்

தனிமை

ரமாமணி சுந்தர்



இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் இரக்கமற்றவர்களாக இருந்தனர். அவர் தேடும் அந்த 'அவளை' அவர் முன் கொண்டு வந்து நிறுத்தும் அளவுக்கு அவர்களில் ஒருவருக்காவது பரந்த மனப்பான்மையோ, தயாள குணமோ இல்லை.

தம் விருப்பத்தை, ஏக்கத்தை வெளியிட முடியாதபடி, ராமநாதனின் உடல் நிலையும் சுய கௌரவமும் அவர் வாயைக் கட்டிப் போட்டிருந்தன. கண்களைத் திறந்து எல்லோரையும் ஒருமுறை பார்த்த அவர் அடிமனத்தில் கசப்பு உணர்ச்சி ஏற்பட்டது.

ராமநாதனுக்கு நாற்பது வயதிருக்கும் பொழுது அவர் மனைவி பொன்னம்மா நான்கு பெண்களையும், மூன்று பிள்ளைகளையும், அவர் கைகளில் ஒப்படைத்து விட்டுக் கண்களை மூடி விட்டாள். அத்தனை நாட்களும் வீட்டுக் கவலையே இல்லாது, சதா தம் வேலையே நினைவாக வாழ்ந்து வந்த ராமநாதனுக்கு, திடீரென்று சுமக்க முடியாத பாரத்தை ஏற்றி வைத்தாற்போல் ஆகிவிட்டது. குழந்தைகளையெல்லாம் எப்படி வளர்த்து முன்னுக்குக் கொண்டு வரப் போகிறோம் என்று அவர் மலைத்துப் போய் நின்ற அந்தச் சமயத்தில் தான், சமையல் வேலையைக் கவனித்துக் கொள்ளவும் குழந்தைகளுக்கு ஒரு துணையாகவும் அந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் கமலம்.

ஆதரவற்ற இளம் விதவையாக கமலத்தை ராமநாதனின் அண்ணா கிராமத்திலிருந்து அனுப்பி வைத்திருந்தார். துணிப் பையும், தகரப் பெட்டியும் கையுமாக வந்திறங்கிய கமலத்திடம், ராமநாதன் அந்த வீட்டில் அவள் செய்ய வேண்டிய வேலைகளை எடுத்துச் சொல்லி, வீட்டின் முழுப் பொறுப்பையும் அவளுக்கு உணர்த்தினார். அந்த ஒருநாள்தான் ராமநாதன் அவளுடன் பேசினார். அதற்குப் பிறகு அவளுக்கு ஒன்றும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. குழந்தைகளுக்குத் தாயில்லாக் குறையே தெரியாத வண்ணம் பெண் குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவது, தலைவாரிப் பின்னுவது, குழந்தைகள் பரீட்சைக்குப் படிக்கும் பொழுது கண் விழித்து அவர்களுக்கு காப்பி, டீ போட்டுக் கொடுப்பது என்று எல்லா வேலைகளையும் மிகவும் பொறுப்புடன் செய்து கொண்டு, கமலம் நாளடைவில் அந்தக் குடும்பத்தில் ஒருத்தியாக ஒன்றி விட்டாள்.

ஆயிற்று. கமலம் அந்த வீட்டில் அடியெடுத்து வைத்துப் பதினைந்து ஆண்டுகள் விளையாட்டுப் போல் கடந்து விட்டன. கலகலவென்று இருந்த அந்தப் பெரிய வீடு இப்பொழுது வெறிச்சென்று காணப்பட்டது.. ஒவ்வொருவராக நான்கு பெண்களும் கல்யாணம் ஆகி அவரவர் கணவன்களுடன் போய் விட்டார்கள். பிள்ளைகளும் வேலை தேடி வெவ்வேறு திசைகளில் சென்று விட்டார்கள். கடைசிப் பிள்ளை கோபி மேல் படிப்புக்காக அமெரிக்காவுக்குப் போய்விட்டான்.

குழந்தைகள் எல்லோரும் அவரவர்கள் பாதைகளில் சென்றுவிட்ட பிறகு, ராமநாதன் தனக்கென்று ஒரு துணை, ஒரு 'கம்பேனியன்' இல்லாத குறையை மெதுவாக உணர ஆரம்பித்தார். அந்தப் பெரிய வீடு எப்படி வெறிச்சென்று காணப்பட்டதோ, அதே போன்று அவர் மனத்திலும் வெறுமை. கண்களைக் கட்டி நடுக்காட்டில் விட்டு விட்டாற் போல் பயங்கரமான தனிமை அவரை வாட்டி எடுத்தது.

அந்த வீட்டிலேயே உழைய வந்து கொண்டிருந்த கமலத்தை அதுவரையில் ஏறெடுத்தும் பார்க்காமல் இருந்த ராமநாதனுக்கு, திடீரென்று அவள் மீது அளவிட முடியாத பச்சாத்தாபம் ஏற்பட்டது. இத்தனை குழந்தைகளுடன், பெயரும் புகழுமாக வாழும் தம்மையே தனிமை உணர்வு வாட்டும் பொழுது பாவம் கமலம் தனக்கென்று சொந்தம், பந்தம் ஒன்றும் இல்லாது இன்னொரு குடும்பத்திற்காக உழைத்துக்கொண்டு எப்படித்தான் காலம் தள்ளுகிறாளோ என்று அவருக்கு வியப்பாக இருந்தது.

ராமநாதனுக்கு இப்பொழுதெல்லாம் அடிக்கடி கமலத்தின் நினைவு வர ஆரம்பித்தது. அந்த நினைவே அவருக்கு ஒரு துணையாக இருந்தது! அமைதி தவழும் அவள் முகமும், அவள் கண்களின் ஆழத்தில் குடியிருக்கும் நிரந்தரச் சோகமும் அவர் மனத்தைத் தொட்டன.

ராமநாதனின் மனத்தில் கமலத்தினிடம் தோன்றிய பச்சாத்தாபம், நாளடைவில் பாசமாக மலர்ந்தது. தான் ஏன் அவளைக் கல்யாணம் செய்து கொண்டு, அவளுக்கு ஒரு வாழ்வு, சமூகத்தில் ஒரு அந்தஸ்து கொடுக்கக் கூடாது என்று நினைக்கும் அளவிற்கு அவருக்குக் கமலத்தின் மீது ஈடுபாடு உண்டாயிற்று! நாற்பது வயதில் மனைவியை இழந்த பொழுது கூட ஏற்படாத தனிமை உணர்வு, இன்று வேலையிலிருந்து ஓய்வு பெறும் தருணத்தில், குழந்தைகள் எல்லோரும் வீட்டை விட்டுச் சென்று விட்ட பிறகு, அவரைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியது.

அந்த ஆண்டு கோடை விடுமுறைக்கு அவர் பெண்கள், பிள்ளைகள் எல்லோரும் குடும்பத்துடன் வந்து குழுமியிருக்கும் சமயத்தில், ராமநாதன் விருப்பத்தை வெளியிட்டார். அவ்வளவுதான், பெரிய பூகம்பமே ஏற்பட்டது போல் எல்லோரும் வீட்டை ஒரு கலக்குக் கலக்கி விட்டார்கள். ஒவ்வொரு

டைரக்டர்: "நேற்று இதே செட்டில் எனக்கும் ஹீரோயினுக்கும் இடையில் உட்கார்ந்துக் கிட்டு நீங்க சிகரெட் குடிச்சது தப்பாப் போச்சு!"

ஹீரோ: "ஏங்க...?"

டைரக்டர்: "டைரக்டர் குண்டப்பாவுக்கும் ஹீரோயின் நளினஸ்ரீக்கும் இடையில் புகைச்சல்னு இன்னைய இளவெடி பேப்பரில் நியூஸ் வந்திருக்கு!"

உ. ராஜாஜி



வரும் வாய்க்கு வந்தபடி என்ன பேச்சு பேசினார்கள். அவர்கள் பேசிய கடுசொற்கள் யாவையும் கூரிய அம்பு போல் அவர் நெஞ்சில் பாய்ந்தன. வேதனையால் துடிதுடித்துப் போய் விட்டார் ராமநாதன். ஒரு ஏழை விதவைக்கு வாழ்வு கொடுத்து, அதே சமயத்தில் தனக்கு ஒரு துணையைத் தேடிக்கொள்ள நினைத்த அவரை, ஏதோ காமவெறி பிடித்து அலைகின்றவன் என்பது போல் அல்லவா எல்லோரும் பேசினார்கள்!

''என்னப்பா! உங்களுக்கு இந்த வயசில் கல்யாண ஆசை. அதுவும் கேவலம் ஒரு சமையல்காரியுடன்! நீங்கள் அப்படி ஏதாவது செய்தால் நாங்கள் இந்த ஊரில் இனிமேல் தலைகாட்ட முடியாது. நாளைக்கு எங்க குழந்தைகளுக்குக் கல்யாணம்தான் ஆகுமா?''

இந்தக் கல்யாணத்தினால் அவர்கள் எல்லோருடைய கௌரவமும் பறிபோய்விடுமாம்!

அமெரிக்காவில் குடியேறிய பிள்ளை கோபியின் அட்டவைஸ் இது!

''அதெல்லாம் அங்கே சரிதான்! நம்ம ஊர்ல பேரன் பேத்திக்குக் கல்யாணம் பண்ண வேண்டிய வயதில் நீங்கள் கல்யாணம் பண்ணிக் கொண்டால் எல்லோரும் கை கொட்டிச் சிரிப்பார்கள்.''

''கல்யாணம் பண்ணிக் கொண்டு உங்க உறவை அம்பலப்படுத்த வேண்டுமா! வேணுமானால் ரகசியமாக வைத்து கொள்ளுங்கள்!'' இது மூத்த பிள்ளையின் ஆலோசனை.

கடைசிப் பெண் விஜயா எல்லாவற்றையுமே வேடிக்கையாக எடுத்துக் கொள்பவள், அவள் இத்தனை ரகளையிலும் ஜோக் அடிக்கிறாள்.

''எல்லோரும் கல்யாணம் பண்ணிக் கொண்ட பிறகு மனைவியைச் சமையல்காரி மாதிரி நடத்துவா! அப்பா என்னடான்னு சமையல்காரியை மனைவி ஆக்கிக்கப் பார்க்கிறார்.''

ஆத்திரக்காரியான மூத்த பெண் மங்களம் கோபாவேசமாக எழுந்திருந்து உள்ளே போனாள். ஹாலில் நடக்கும் வாக்கு வாதங்களில் ஏதும் பங்கு கொள்ளாமல் சமையல் அறையில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த கமலத்தைத் தர தரவென்று கையைப் பிடித்து இழுத்துப் பின் கதவைத் திறந்து வெளியே தள்ளினாள்!

''என்ன தைரியம் உனக்கு! கிழவரை மயக்கிக் கைக்குள் போட்டுக் கொண்டு சொத்தை அடைஞ்சுடலாம்னு எண்ணமா? இந்த நிமிடமே வீட்டை விட்டுப் போய்விடு. மறுபடியும் இந்தத் திசையில் தலை வைத்துப் படுத்தால் தெரியும்'' என்று பத்திரகாளி அவதாரம் எடுத்தாற்போல் கத்தி அவளைத் துரத்தி அடித்துவிட்டாள்.

கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் கன்னங்களில் வழிந்தோடக் கமலம் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு எப்படி அந்த வீட்டில் நுழைந்தாளோ, அதே போல் துணிப் பையையும் பெட்டியையும் கைகளில் சுமந்து கொண்டு, நெஞ்சில் அதைவிடப் பெரிய பாரத்தைத் தாங்கிக் கொண்டு மௌனமாக வீட்டை விட்டு வெளியேறினாள்.



ஆசிரியர்: ''அம்பால் அடிபட்டு வீழ்ந்த வாலி ஏன் ராமனைத் திட்டினான்?''
மாணவன்: ''எய்தவன் இருக்க அம்பை நோகக் கூடாதுங்கிற பழமொழி ஏற்கனவே வாலிக்குத் தெரிந்திருக்கலாம்!'' -க. ராஜாஜி

ராமநாதன் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் அவள் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு ஸ்தம்பித்துப் போய் நின்றார். வீட்டிலுள்ள அத்தனை பேரையும் எதிர்த்துக் கொண்டு வீட்டை விட்டுப் போகும் கமலத்தைத் தடுத்து நிறுத்தும் துணிவு அவருக்கு இல்லை. குழந்தைகள் எல்லோரும் அவரை எதிர்க்கவும், சமூகத்திற்குப் பயந்த கோழையாக வாளாவிருந்து விட்டார்.

கமலத்தை அடித்துத் துரத்திய கையோடு அம்பி என்ற சமையல்காரனை ஏற்பாடு செய்து கொடுத்தாள் மூத்தவள். கோடை விடுமுறை கழிந்து எல்லோரும் அவரவர் ஊர்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். எல்லோருமே சுயநலவாதிகள். அவருடைய உணர்ச்சிகளைப் பற்றி யாருக்குமே கவலை இல்லை.

கமலம் அடையாற்றில் ஒரு வீட்டில் வேலை செய்வதாகக் கேள்விப்பட்டார் ராமநாதன். எத்தனையோ முறை அவருக்குக் கமலத்தைப் பார்த்து அவளுக்குத் தன்னால் ஏற்பட்ட அவமானத்துக்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால் தான் அவளைப் போய்ப் பார்த்துப் பேசிய விஷயம் தன் பெண், பிள்ளைகளுக்குத் தெரிந்தால் அவர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ என்ற பயத்தினாலும், அது அவர்களுடைய கௌரவத்தைப் பாதித்துவிடுமோ என்ற கவலையினாலும் பேசாமல் இருந்து விட்டார்.

பழைய நினைவுகளில் மூழ்கிப்போன ராமநாதன் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தார். கட்டிலைச் சுற்றி அவர் பெண்கள் பிள்ளைகள் எல்லோரும் நின்று கொண்டிருந்தார்கள். திடீரென்று, கமலத்தைப் பார்த்து அவளிடம் மன்னிப்புக் கேட்டுவிட வேண்டும் என்று ஒரு துடிப்பு, ஒரு வேகம். தன் விருப்பத்தை வெளியிடுவதற்காக முயற்சி செய்கிறார் ராமநாதன். ஆனால் வார்த்தைகள் வெளி வரவில்லை. திடீரென்று அவருக்கு வியர்த்துக் கொட்டுகிறது. ராமநாதன் தான் சொல்ல நினைத்ததைச் சொல்லாமலே, அந்த ஏக்கத்துடனே இவ்வுலகை விட்டு மறைந்துவிடுகிறார்.

ON THE SPOT

பழக்கடையில் படப்பிடிப்புக் குழுவினர்!

மைசூர் பழ மார்க்கெட் அன்று அல்லோல கல்லோலப் பட்டது. காரணம் அங்கு சிவகுமார் குழுவினர் படப் பிடிப்பு நடத்தச் சென்றிருந்ததுதான். கதைப்படி சிவகுமார் தண்டல்காரராக வர ஒவ்வொரு கடை முதலாளியும் ஏதாவது பணம் கொடுப்பார். வேறொரு காட்சியில் பல்வேறு பழவகைகளை அவர் கீழே தள்ள அவை நசுங்கி நாசமாவது போல் படமெடுக்க வேண்டும். வெங்கலக் கடையில் யானை புகுந்தது போல் என்று சொல்வார்கள். அதுகூடத் தேவலாம்! அழகாக நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த பழக் கடையில் சினிமாப் படப் பிடிப்புக் குழுவினர் நுழைந்தாலோ..!



ஆயினும் எந்த விதமான பிரச்னையுமில்லாமல் காட்சிகளைச் சீக்கிரமாகவே எடுத்துக்கொண்டு திரும்பிவிட்டார்கள். திரைப் படக்குழுவினரின் கைகால் பட்டுச் சிதைந்த பழ வகைகள் எத்தனை என்று கணக்கிடவே முடியாது. ஆனால் பழக் கடைக்காரர்களும் சரி, சுற்றி ஆயிருந்த மக்களும் சரி, முழு ஒத்துழைப்பைத் தந்தனர். பழக் கடையில் ஆரம்பித்த சண்டை, ஸ்டுடியோவில் தொடர்ந்தது... அதாவது சண்டைக் காட்சி! வெளிப்புறப் படப்பிடிப்புக்குச் சென்றாலே இரவில் நிலாச் சாப்பாடும் (நிலா இல்லாதபோது நட்சத்திரச் சாப்பாடு) பகலில் மர நிழலில் உட்கார்ந்து சாப்பிடுவதும் சர்வ சகஜம்.

சாப்பிடும்போது, ''ஜகன்மோகன் அரண்மனையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார் சிவகுமார்.

''இல்லை'' என்று தலையாட்டினேன்.

''அதைப் பார்க்காமல் நீங்கள் மைசூரை விட்டுப் போகக் கூடாது'' என்று கூறி ஒரு காரையும் கொடுத்து அனுப்பினார். ஓவியக் கல்லூரியில் பயின்று நடிகராக மாறியுள்ள சிவகுமார். ஜகன்மோகன் அரண்மனை முழுதும் ஓவியங்கள், ஓவியங்கள், ஓவியங்கள் தாம்!

மாலை இளம் வெயிலில் நான் படப்பிடிப்பைப் பார்க்கத் திரும்பி வர அங்கு வண்டிச் சக்கரக் கடையாணியைக் கையில் வைத்துக் கொண்டு அதனால் குத்தத் தயாராய் இருந்தார் சிவகுமார். அவரது முகம் கோபத்தைக் கொப்பளித்துக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு கத்துக் கத்தினார் பாருங்கள், சுற்றியிருந்த எல்லோரும் திடுக்கிட்டு விட்டோம். அந்த அளவுக்குக் கோபம் கொண்டு குத்திவிட்டாராம் எதிராளியை! 'வண்டிச் சக்கரம்' என்று படத்துக்குப் பெயர் வைத்ததாலோ என்னவோ ஆங்காங்கு பல வண்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஆனால் எல்லாமே குறுக்கும் நெடுக்குமாகவும் கவிழ்ந்தும் குடை சாய்ந்தும் இருந்தன. பின்னால் ஐந்தாறு லாரிகள் வேறு. ஒரு கை வண்டியின் சக்கரத்தைத் தனியே எடுத்து அதை வைத்துக்

✖ சிவசந்திரன், சரிதா, சிவகுமார்





✠ கதை வசனகர்த்தா விநுசக்ரவர்த்தி, ஒளிப்பதிவாளர் பாலகிருஷ்ணன், சிவகுமார், இயக்குனர் விஜயன்.

கொண்டு சில காட்சிகளில் சண்டை செய்தார் சிவகுமார்.

''கைவண்டியை இழுக்க ரொம்பக் கஷ்டப்பட்டுப் போனேன் அப்பா!'' என்று பெருமூச்சு விட்டார் சிவகுமார். ''லோட்' ஏற்றிக்கொண்டு சறுக்கலான ரோட்டில் மேலிருந்து கீழ் வரும் போது தள்ளும். கீழிருந்து மேலே ஏறும்போது அதை விடக்கஷ்டம். டூப் போடறதாகத்தான், டைரக்டர் சொன்னார். வேண்டாம் என்று விட்டேன். பாட்டாளி வண்டி இழுக்கப்படும் சிரமத்தை உணர்ந்து அறியக் கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட எனக்கு மனம் வரலே!''.


பிரிமியர் ஸ்டுடியோ முதலாளி பஸவராஜ் ''மைசூர் எல்லா விதங்களிலும் படப்பிடிப்புக்கு ஏற்ற இடம்'' என்கிறார். ''இங்கு காடும் இருக்கிறது; கட்டிடங்களும் இருக்கின்றன; மனோரம்யமான இயற்கைக் காட்சிகளும் இருக்கின்றன. இவ்வளவும் போதாததற்கு எங்கள் பிரிமியர் ஸ்டுடியோவும் இருக்கிறது'' என்றார். 'பலே ஆசாமிதான்' என்று நினைத்துக்கொண்டேன்.

தயாரிப்பாளர் திருப்பூர் மணி ''கொஞ்சம் வித்தியாசமாகப் படம் எடுக்க வேண்டும் என்று விரும்பினேன். இந்தக் கதை அதற்குத் தோதாக இருந்தது'' என்றார். படத்தில் கதாசிரியர் விநு சக்கரவர்த்தியும் நடிக்கிறார்! இயக்குனர் விஜயனும் நடிக்கிறார்.

-சலன்



✠ சுமித்ரா, சிவகுமார்.



கடைசிபக்கம்

ஆதங்கம்

கண்ணதாசன்

அகண்ட வானவெளியைப் பார்த்தபடி நீண்ட காலம் ஓடி ஆடியபின்பு சிறிய சிறைச் சாலைக்குள் முடங்கிக் கிடக்கும் ஒரு கைதி—

அடர்ந்த காடுகளில் நெடியுயர்ந்த மரங்களுக்கிடையே பறந்து திரிந்துவிட்டு, சிறிய கூண்டுக்குள் தேங்கிக் கிடக்கும் ஒரு கிளி—

எல்லையற்ற கடற் பரப்பில் நீந்தி விளையாடிவிட்டு, கடைக்காரனின் தகர பீப்பாய்க்குள் மோதி மோதித் திரும்பி வரும் ஒரு மீன்—

வளைந்து வளைந்து ஓடி, காடு கரையெங்கும் அலைந்துவிட்டு பிடாரனின் கூடைக்குள் சுருண்டு கிடக்கும் ஒரு பாம்பு—

எட்டடி, பதினாறடி என்று காடுகளில் துள்ளிக் குதித்துவிட்டு, ஆறடிக் கூண்டுக்குள்ளே உலாவக்கூட முடியாமல் உறுமல் என்ற பெயரில் முனகிக் கொண்டே படுத்திருக்கும் சிறுத்தை—

—பெரிய நிலப்பரப்பிலிருந்து சிறிய தீவுக்கு வந்து சேரும்போது, வாழ்க்கை உணர்ச்சியற்றதாய், சுவையற்றதாய், ஜீவனற்றதாய் தான் போய் விடுகிறது.

'கட்டுப்பாடில்லாமல் வாழ்வதை விட, ஒரு கட்டுப்பாட்டுக்குள் வருவது நல்லது தானே' என்று தத்துவ ஞானிகள் ஞானக் கேள்வி போடக் கூடும்!

நியாயம்தான்! ஆனால் சுகமும், நிம்மதியும் எங்கிருக்கின்றனவோ அந்த இடம் தானே மனிதன் விரும்பக் கூடிய இடமாக இருக்க முடியும்?

பரப்பளவை விட்டுவிடுங்கள். சுதந்திரம், உற்சாகம், நிம்மதி இவை மூன்றும் ஒரு கூண்டுக்குள்ளேயே கிடைத்து விடுமானால், அந்தக் கூண்டே எனக்குப் போதுமானது. ஆனால், துர்ப்பாக்கிய வசமாக என் நிலைமை வேறு விதமாக இருக்கிறது.

உடம்பு நன்றாக இருக்கிறது; அதிலிருந்த உற்சாகம் காணாமல் போய்விட்டது.

வயிறு நன்றாக இருக்கிறது; பசி எடுக்கிறது, அது விரும்புவதைச் சாப்பிட முடியாதவாறு ஆகிவிட்டது.

புத்தகம் படிக்க வேண்டும் போலத் தோன்றுகிறது. கண்ணாடி போட்டால் நெற்றி வியர்க்கிறது.

மளமளவென்று இங்கிருந்து அங்கே ஓடி, அங்கிருந்து இங்கே ஓடித் துறுதுறுவென்று அலைய வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்க வேண்டியிருக்கிறது.

நான் நோயாளி அல்ல; நிச்சயமாக அல்ல!

ஆனால் நீண்ட நாள் வாழ்வதற்கு இந்தக் கட்டுப்பாடு தேவையாம்.

கடிதங்கள் வருகின்றன. நண்பர்கள், என்னை நேசிக்கும் பெண்கள் எல்லோருமே எழுதுகிறார்கள். விருந்துக்கு அழைக்கிறார்கள். 'அமெரிக்காவுக்கு வாருங்கள்', 'லண்டனுக்கு வாருங்கள்' என்கிறார்கள்.

நான் சென்னையில் இருந்தாலென்ன, லண்டனில் இருந்தாலென்ன? குருடன் எந்த சினிமாவைப் பார்த்தாலென்ன?

இப்பொழுது என்னைப் பார்க்கும் நண்பர்கள், ''உங்களுக்கு இளமை திரும்புகிறதா?'' என்கிறார்கள்.

என் மனைவி ''முன்பெல்லாம் தொந்தி தொப்பையோடு இருந்தீர்கள். இப்பொழுது தான் அழகாக இருக்கிறீர்கள்'' என்கிறாள்.

எனக்கோ ஆடி ஓடிப் பாடித் திரிந்த காலங்கள் நினைவுக்கு வருகின்றன.

கார் அழகாக இருக்கிறதா என்பது பிரச்னையல்ல, அது நினைத்த வேகத்தில் ஓடுகிறதா என்பதே கேள்வி.

மீண்டும் பழைய விஷயத்துக்கே வருகிறேன்.

சேலத்து பல் டாக்டர் கெரிசன் சொன்னபடி சரியாக எனது ஐம்பது வயதில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. அந்த மாற்றமே என்னைக் கைதியாய், கூண்டுக் கிளியாய் வாழ வைத்து விட்டது.

அது வெறும் வாயுத் தொல்லைதான்; ஆனால் பல சுகங்களைக் குறைத்துக் கொள்ளும்படி அது நிர்ப்பந்தப்படுத்தி விட்டது.

இது ஒரு வேடிக்கை!

எனது நாற்பது வயதில் கூட நான் இருபத்தியொரு மாத்திரைகள் சாப்பிட்டு வந்தேன்; இப்போது மூன்றே மாத்திரைகள் தான்!

வேலூர் முதல் கோவை வரை எல்லா டாக்டர்களும் என்னைச் சோதித்து விட்டார்கள்! எல்லாருமே ''உடம்பு அற்புதமாக இருக்கிறது'' என்று கூறிவிட்டார்கள்.

ஆனால் எனக்கு மட்டும் ஏன் இந்த ஆதங்கம்?


காரணம்: கடவுள் மனத்தைக் கொடுத்தால் உடம்பை வாங்கிக் கொள்கிறான்; உடம்பைக் கொடுத்தால் மனத்தை வாங்கிக் கொள்கிறான். இரண்டையும் ஒருசேரக் கொடுத்துவிட்டால் 'திமிர்' வந்து விடாதா?

எனக்கு ஒன்று தோன்றுகிறது.

பகவான் ஏதோ ஒரு பெரிய கடமைகளுக்காக என்னை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறான். அந்தக் கடமைகளை நான் நிறைவேற்றுவேனா?

இல்லை, கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்துவிட்டு, 'இரண்டாம் பாகம் இதோடு முடிந்தது' என்று முடித்துக்கொள்வேனா என்பதைக் காலம்தான் சொல்ல முடியும்.

இது ஒரு கட்டுரையல்ல; ஓர் ஆதங்கத்தின் ஜனனம்!



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

